வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்

பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆவணி திங்கள் 31-ம் நாள் (16—9—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகிர் 16 | இதழ் 16

# மலையகத்தில் திரளும் ஆதரவு



தமிழுக்காக உயிரைக் கொடுப்போம் என்று சூளுரைப்போர் பலர். ஆனால் தமிழுக்காக உயிரைக் கொடுத்தவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள்.

தோற்றம்: 13—10—1911. மறைவு 17—9—1959.

## காங்கிரஸ் பிரமுகர் சிலரும் கட்சியில் சேரத் தயார்?

### தோட்ட வாலிபர்களிடையே ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சி

மலைநாட்டில் தமிழரசுக் கட்சியின் கிளைகள் நிறுவப்படும் என்ற செய்தி மலைநாட்டுத் தோட்டங்களிலே காட்டுத் தீ போல பரவியுள்ளதென சுதந்திரனுக்குக் கிடைக்கும் செய்திகளிலிருந்து புலனாகிறது.

தோட்டங்களிலும் மலைநாட்டில் சிறு சிறு நகரங்களிலும் வாழும் தமிழர்கள் தமிழரசுக் கட்சிக்குப் பேராதரவு காட்ட தயாராக இருக்கின்றனரென்றும் குறிப்பாக வாலிபர்கள் கட்சியை வரவேற்கத் தயாராகின்றனரென்றும் செய்திகள் கூறுகின்றன.

மன்னார் மகாநாட்டுத் தீர்மானம் மலைநாட்டுத் தமிழ் வாலிபர்களிடையே உணர்ச்சியையும் உத்வேகத்தையும் கிளறிவிட்டுள்ளதாம்.

இது சம்பந்தமாக தமிழரசாருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையுமளிக்கும் மற்றொரு செய்தியும் கிடைத்துள்ளது. இதர கட்சிகளிலும் தொழிற் சங்கங்களிலும் முன்னணியில் நின்று தொண்டாற்றும் அநேகர் மலை நாட்டில் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து பணியாற்றத் தயாராக இருக்கிறார்களாம். குறிப்பாக இரு காங்கிரஸ்களிலும் ஜில்லாக்களில் முன்னணி தாங்கும் ஜில்லாத் தலைவர்கள் அநேகர் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து உழைக்க முடிவு செய்திருக்கிறார்களாம். தமிழரசுக் கட்சியால்தான் மலைநாட்டு மக்களுக்கு விமோசனம் கிடைக்குமென்று அவர்கள் கருதுகிறார்களாம்.

சுருங்கக் கூறின், யார் என்ன கூறினாலும், தமிழரசுக் கட்சிக்கு மலைநாட்டில் பேராதரவு திரளுகிறதென்பது தெளிவாகியுள்ளது. தமிழ் பேசும் இனம் ஒன்றுபட்டால்தான் இனிமேல் எதையும் சாதிக்க முடியுமென்று தோட்டத் தமிழர்கள் கூறுகிறார்களாம். மலைநாட்டில் கட்சியை அமைக்குமாறுவேண்டி கட்சிக்கு ஏராளமான கடிதங்கள் மலைநாட்டிலிருந்து கிடைத்திருக்கின்றனவென்று தெரிகிறது. இது கட்சிக்கு மலையகத்தில் ஆதரவு பெருகி வருவதையே எடுத்துக் காட்டுகிறது.

தொய்வு ASTHMA சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டைவலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்சால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

## வன்னிவிளாங்குளத்தில் காணி வழங்கல்

வன்னி விளாங்குளத்தில் கீழ் மத்திய வகுப்பினர்களுக்குக காணி வழங்குமுகமாகஒக்டோபர்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்குமாறு பொதுமக்கள் கேட்கப்படுகிறார்கள். இதற்கான காணிக் கச்சேரி ஒக்டோபர் மாதம் 29-ந் திகதி நடைபெறும்.

கீழ் மத்திய வகுப்பினராய், வருட வருமானம் 5000 ரூபாவுக்குக் குறைவாகப் பெறும் இலங்கைப் பிரஜைகள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர். தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கப்படும். அதில் கலவன் பயிர்களை அவர்கள் பயிர் செய்யலாம்.

அத்துடன், மன்னார், வவுனியா, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்வதற்கு உரிய பூமிகள் தனி நபர்களுக்குக் கொடுக்கப்படவுள்ளன. இப்பகுதிகளில் ஏற்கனவே தமக்குச் சொந்தமான நிலங்களை அபிவிருத்தி செய்தவர்களோ, அல்லது முடிக்குரிய காணியைக் குத்தகைக்குப் பெற்று அவற்றை அபிவிருத்தி செய்தவர்களோ இந் நிலங்களுக்கு விண்ணப்பம் செய்யலாம்.

விண்ணப்பதாரர் தமக்கு வேண்டிய நிலத்தின் விஸ்தீரணத்தையும், அதன்இருப்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிலிருந்து பிரியாத் திருவுருவம்

## தனக்காக வாழாது தம்இனத்துக்காக வாழ்ந்த தியாகச் செம்மல் வன்னியசிங்கம்

வண்டமிழ் பேசும் இனத்தை வாழ்வித்த வன்னியசிங்கம் அவர்கள் மறைந்து இன்று மூன்று ஆண்டுகள் ஆகின்றன. நாட்கள் நகர நகர மறைந்தவர் நினைவும் மெல்ல மெல்ல எம் நினைவிலிருந்து மறைவது தான் உலக இயற்கை. ஆனால் நாட்கள் கிழமைகளாக மாறி கிழமைகள் மாதங்களாக மாறி இரண்டு ஆண்டுகள் கழிகின்ற நேரத்திலும் அவர் நினைவு எம் நெஞ்சிலிருந்து அகல மறுக்கிறது. மாறாக காலம் செல்லச் செல்ல அவரின் திருவுருவம், அவர் ஆற்றிய அளப்பரிய தொண்டுகள் எம் நினைவலைகளில் மோதி "ஏ கூற்றுவனே ஏன் எம் வன்னியசிங்கம் அவர்களை எம்மிடமிருந்து பிரித்துச் சென்றாய்? தனக்காக வாழாது தனது குடும்பத்துக்காக வாழாது தமிழ் பேசும் இனத்துக்காக இரவு பகல் என்று பாராது ஓயாது உழைத்து உருக்குலைந்தது அவர் செய்த மன்னிக்கமுடியாத தவறா? தம்முடைய இனத்திற்கும் தாம்பேசும் மொழிக்கும் தாம் வாழும் நாட்டிற்கும் அறிவு தேடுவதே தம் வாழ்வின் இலட்சியம் என்று வாழும் மக்கட் பதடிகள் தொடர்ந்து வாழும்பொழுது ஏன் எம் தமிழின் உரிமைக் காவலனாகத் திகழ்ந்த கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களைப் பறித்துச் சென்றாய்?" என்று எம்மை அறியாமலே நாம் புலம்ப நேரிடுகிறது. ஆனால் விதியின் விளையாட்டிற்கு விளக்கம் கூற நாம் யார்?

பறிக்கப்பட்ட பைந்தமிழ் மொழி, நாள்தோறும் பறிக்கப்பட்டுவரும் வடக்கு கிழக்காம் வாழ்விடம் தமிழ் பேசும் இனத்தின் முக்கிய அங்கமாய் விளங்கும் மலைநாட்டுத் தமிழரின் குடியுரிமை வாக்குரிமை ஆகிய அனைத்தினையும் மீட்டும் நோக்குடனும், நிலையான வாழ்வை தமிழ்பேசும் இனம் பெறக் கூட்டரசு அடிப்படையில் தமிழரசு நிறுவும் இலட்சியத்துடனும் அவர் ஆற்றிய பணி சொல்லில் அடங்காது.

அவரோடு தமிழ்பேசும் இனத்தின் வருங்கால வாழ்வைப்பற்றிப் பேசினால் அவர் தம் உரையாடலில் அடிக்கடி ஒரு பேருண்மையை வலியுறுத்துவார்.

"தமிழ் பேசும் இனம் தாம் இழந்த எந்த உரிமையையும் போராடி மீண்டும் பெறலாம். ஆனால் தாம் வழி வழியாக வாழும் வாழ்விடத்தை தாயகத்தை அவர்கள் பறிகொடுப்பார்களாயின் அதை மீண்டும் மீட்பது மிகக் கடினம்" என்று சொல்லுவார்.

தாயகத்தை இழப்போமாயின் முதலில் நாம் பிரதிநிதித்துவத்தை இழப்போம்-அதை அடுத்து பிரதிநிதித்துவம் குறைந்த சிறு இனம் என்று கருதப்பட்டு, எமது குரலுக்கே பாராளுமன்றத்தில் மதிப்பிருக்காது. இறுதியில் தமிழ் பேசும் இனம் ஒரு தனி இனம் (Racial Identity) என்ற பண்பே கெட்டு காயுமற்ற கறியுமற்ற சாம்பார் நிலைக்குத் தான் தமிழினம் வந்து அழிவுறும் என்று அவர் கூறுவார்.

தனக்கென்ற தனியிடமற்ற பறங்கியரிலும் பாழான நிலைக்கு பைந்தமிழ் பேசும் இனம் இழிந்து அழிவுறுவதை "நான் தாங்கேன்" என்று அவர் உணர்ச்சியோடு கூறிய கருத்துக்களை இன்று நினைத்தாற் கூட கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. இந்த அடிப்படையில் தான் தமிழ் பேசும் இனத்தின் தாயகத்தை காப்பாற்ற பதவிக்குளம், பாவற்குளம், செட்டிகுளம், முதலிக்குளம் என்று ஓடோடித் திரிந்து சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி வெற்றி கண்டார்.

இனவெறி கொண்ட முன்னாள் காணி அமைச்சர் திரு சி. பி. டி. சில்வாவோடு பன்முறை போர் தொடுத்து முதலிக்குளத்தில் தமிழ் பேசும் மக்களைக் குடியேற்றினார். இதனால் ஈழத் தமிழகத்தின் தலைநகராய் விளங்க இருக்கும் திருமலையைக் காப்பாற்றிய பெருமை பெருமளவு அவரையே சாரும். அவரின் இச்செய்கை ஒன்றிற்கே எமது வழித்தோன்றல்கள் அவரை வாயார வாழ்த்துவது உறுதி.

மலைநாட்டுத் தமிழ்மக்கள் தாம் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக அவர் பாராளுமன்றத்துக்குள்ளேயும் புறத்தேயும் வாதாடிய பெருமை எம் நினைவிலிருந்து என்றும் அகலாது.

"எமது முற்போக்குச் சக்திகள் குறிப்பிடுவதுபோல் வெறும் பொருளாதார அடிப்படையில் மலைநாட்டு தமிழ் தொழிலாளரின் உரிமைகள் பறிக்கப்படவில்லை. ஆனால் தமிழ் தொழிலாளிகள் என்ற அடிப்படையில் தான் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. எங்கேயாவது சிங்களத் தொழிலாளியின் உரிமைகள் அப்படிப் பறிக்கப்பட்ட பின்பு ஒரு சிங்கள அரசாங்கம் நிலைத்து நிற்க முடியுமா? ஆதலால் மலைநாட்டுத் தமிழர் பிரச்சனை பொருளாதாரப் பிரச்சனை அல்ல. அதுமுழுக்க முழுக்க இனப் பிரச்சனை தான்— ஆம் தமிழர் பிரச்சனைதான்;" என்று சிலகாலத்திற்கு முன்பு கொழும்பு விவேகானந்தா சபையில் திரு. வன்னியசிங்கம் அவர்கள் கூறிய கூற்று அவரின் கூரிய மதியை எடுத்துக் காட்டுகிறது.

ஈழவேந்தன்

சமசமாஜத் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு தனித்தொகுதியை எதிர்த்த ஒரவஞ்சனையைக் குத்திக் காட்டி இது முற்போக்குச் சக்திகளின் உட்போக்கை எடுத்துக் காட்டவில்லையா என்று அவர் கேட்ட கேள்வியைநாம் மறப்பதற்கில்லை. மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கும் ஏனைய வடக்குக் கிழக்கு மாகாண மக்களுக்கும் நெருங்கிய உறவும் உள்ளம் கலக்கும் பண்பும் ஏற்பட்டால் தான் தமிழ் இனம் ஒரு பலம் பெற்ற இனமாக விளங்கும் என்பதை உணர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணக் கல்லூரிகளில் மலைநாட்டு மாணவ மாணவிகள் பயில வாய்ப்பு செய்த வள்ளல் தன்மையை எந்தத் தமிழ் மகனும் மறக்க முடியாது.

சுருங்கக்கூறின் அவரின் எண்ணம் எழுத்துபேச்சு செயல் அனைத்தும் செந்தமிழ் பேசும் இனத்தை வட்டமிட்டபடியே விளங்கின. தமிழினத்தின் வளமான வாழ்வின் பொருட்டு அறப்போர் தொடுத்து தூக்கிலிடப்பட்டு இறப்பதைக் கூட அவர் வரவேற்றார். 1957ல் நடந்த பாராளுமன்றக்கூட்டத்தில் அவர் ஆற்றிய ஆழமிக்க சொற்பெருக்கு அவரின் உள்ளக் குமுறலை எடுத்துக்காட்டுகிறது.

"ஒருவன் தன் மொழியுரிமைக்காகப் போராடுவது அதேசமயம் மற்றொருவரின் மொழிக்குக்கேடு பயக்காது. சிங்களத்தோடு செந்தமிழுக்கு ஒத்த உரிமை வழங்க வேண்டுமெனக் கேட்பது தேசத் துரோகமென்றால்—

"எமது மரபுவழித் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்கப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

"இந்நாட்டையே தங்கள் தாயகமாகக்கொண்டு அதன் வருவான் நூற்றுக்கு அறுபது சதவீதத்தை நல்கும் தமிழ் தொழிலாளர்களது குடியுரிமை-வாக்குரிமைக்கு போராடுவது தேசத்துரோகமென்றால்—

"இதே, தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலையைப்போக்கப் போராடுவது தேசத்துரோகமென்றால் —

"இன்று இலங்கையில் [illegible] மாற்றிக் கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பிரித்து அதே நேரத்தில் நாட்டைப்பிளக்காது, ஒரு அரசியல் அமைப்புக்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத்துரோகமென்றால்—

"இத்தனை தேசத் துரோகங்களையும் மெத்தமாக நிறைவேற்றி அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனே ஒழிய, எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டுச் சிதைந்து சீரழிந்து காலப்போக்கில் அழிவதைச் சகியேன். இனத்தின் உரிமைக்காகப் போர் தொடுப்பதால் தேசத்துரோகியெனக்குற்றஞ்சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படுவதையே நான் வரவேற்கிறேன்" என்றார்.

இப்படித் தன்னையே ஒறுத்து வெறுத்து தமிழ் பேசும் இனத்தின் வாழ்வே தம் வாழ்வென வாழ்ந்தவர் தான்திரு. கு. வன்னியசிங்கம்அவர்கள். தாயகத்தில் 17.9.53ல் தமிழ்த் தென்றல் —தொழிலாளர். தொண்டன்—அரசியல் அறிஞன்—செய்தி இதழ்களிலே செந்தமிழைப் பெய்து எழுதிய செம்மல் — பெண்ணின் பெருமை பேசிய பெருந்தகை திரு. வி.க. மறைந்தார். சரியாக ஆறு ஆண்டுகள் கழிந்து சேயகம் தந்த செம்மல்-வண்டமிழ பேசும் இனத்தை வாழ்வித்த வன்னியசிங்கமவர்கள் அதே மாதம் அதே தேதி அதே வியாழக்கிழமையில் ஏறக் குறைய அதே நேரத்தில் உலகமெல்லாம் வாழும் தமிழ் பேசும் இனம் துடிதுடித்து விம்மி அழ, எம்மை விட்டுப் பிரிந்தார்.

லோகமானிய திலகர் மறைந்தபோது 'மனிதருள் ஒரு பேராற்றல் உள்ள மனிதன் மறைந்து விட்டான்; சிங்கத்தின் கர்ச்சனை ஓய்ந்து விட்டது, லோகமானிய திலகர் இனிமேல் இல்லை' என்று காந்தி மகான் கதறினார். நாமும் அக் கூற்றைச்சிறிது மாற்றி "மனிதருள் பேராற்றல் படைத்த மாமனிதன் மறைந்து விட்டான், தமிழ்ச் சிங்கத்தின் வீர கர்ச்சனை ஓய்ந்துவிட்டது, இனிமேல் எம்மிடையே வாழ்வளித்த வன்னியசிங்கம் இல்லையே" என்று புலம்ப வேண்டி இருக்கிறது.

யார்தான் என்னை என்ன சொன்னாலும் எம்உடல் எல்லாம் வாயாக மாறி உள்ளம் குழைந்து 'ஓ' என்று கதறி அழுதாலும் அந்த அன்பின் திருவுருவத்தை, அறிவின் ஒளிச்சுடரை— தமிழ் உடை தரித்து உள்ளும் புறமும் தமிழனாய் வாழ்ந்த எளிமையின் தோற்றத்தை—கண்ணுக்கு இனியானை நாம் மீண்டும் காணப்போவதில்லை. ஆனால் தமிழ், தமிழ் என்று வாழ்ந்த அந்தத் தமிழர் உயிர் எம்மைச் சுற்றி வட்டமிட்டபடி—தாய் தன் சேயை இமை கொட்டாது காப்பதுபோல எமது செயல் அனைத்தையும் கூர்ந்து கவனித்தபடியிருக்கிறது. அவர் வாழும்பொழுது அவரை வாழ்த்தி வழுத்தி பக்கத் துணையாய் இருந்து பணியாற்ற நம்மில் சிலர் மறந்தோம். அவர் மறைந்த பின் பாகுதல் அவர் விட்டு வைத்த பணியை—தன் உயிரையே பணயம் வைத்து ஆற்றிய பணியை—நிறைவேற்றி அவர் இன்னுயிர் இன்புறவும்எம் இனம் நலமுறவும் வாழ்வோமாக.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


# மக்கள் குரல்

## தமிழை வளர்ப்போம்

29-7-62 சுதந்திரனில் நன்பருக்கு எழுதிய கடிதக்கட்டுரையைப் படித்ததும் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் உணர்ச்சிவசப்பட்டிருப்பான்.

இந்த அரசாங்கம் தமிழ் பேசும் மக்களைச் சிங்கள வராக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழ் பேசும் மக்களில் ஒரு சிலர் நமது தாய்மொழியைப்படிக்காமல், 'அரசாங்கம் சிங்களம் படிக்கச் சொல்லிவிட்டது. நாம் எல்லோரும் சிங்களம் படிக்காவிட்டால் வருங்காலத்தில் நாமும் நமது பிள்ளைகளும் இலங்கையில் வாழ முடியாது' என்ற நோக்கத்தோடு சிங்களம் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தமிழைப்பரப்ப வேண்டிய நாமே இந்தப் போக்கில் போனால் நாம் தமிழை எப்படி வளர்ப்பது? இதையெல்லாம் நாம் நன்று யோசித்து இந்த அரசாங்கம் ஆட்டிவைக்கும் நிலைக்கெல்லாம் ஆளாகாமல் நமது தாய் மொழியை வளர்க்க முன்வரவேண்டும்.

க. ஏகாம்பரம்

லபுக்கெலே

## வருந்தத்தக்க செயல்

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்துக்கென ஓர் வலுப்பெற்ற கட்சி உண்டு. இக்கட்சியின் செயல் உறுப்பினர்கள் தமிழ் பேசும் இனம் நல்வாழ்வுடன் இருப்பதற்காகப் பல இன்னல்களை அனுபவித்திருக்கின்றனர். அடிபட்டும், மறியல் வீடுகளில் அடைபட்டும் இருக்கின்றனர். இவர்களுடன் பாமரமக்களாகிய நாமும், பொலிசாராலும், இராணுவத்தாராலும் பலவாறு துன்புற்றோம். எமது மகளிரும் மானபங்கப்பட்டனர். பலர் உயிரும் இழந்தனர்.

இத்தனை இன்னல்களும் எதற்காக? ஊண், உடை இல்லை என்பதற்காகவா? இல்லவே இல்லை. எமது இனம் பயமின்றி, மானத்தோடும், உரிமையோடும் வாழ்வதற்கும், எமது மொழியும் பண்பும், கலையும் அழியாது இத்தீவில் சுடர் விட்டு ஒளி வீசும்படியுமே. எமது மதிப்பிற்குரிய தலைவர்களும், நாமும இப்படித் துன்புறும் போது, ஆங்கிலம் கற்று, பதினொன்றுடுத்தி, அரசாங்கத்தில் வேலை செய்யும் பலர் எம்முடன் சேர்ந்து எமது இன்னல்களில் பங்கு பற்றவில்லை. இதைப்பற்றி நாம் குறை கூறவேண்டியதில்லை.

ஆனால், அன்னுரை எமது தலைவர்களும் நாமும் ஒன்றே ஒன்று கேட்டோம். அது தான் சிங்களம் படிக்கவேண்டாம் என்று. இச்சிரான, ஒற்றுமையை வளர்த்து எங்கள் இயக்கத்தை வலுவுறச் செய்யும் கோரிக்கையை,

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. தியாகராஜா, ஏருவூர்.

கே: குயுக்தியாரே, நான் உமக்கு ஒரு வேலை கொடுத்துள்ளேன், அதை நீர் ஒப்புக்கொள்வீரா?

ப: ஒப்புக் கொண்டதால் தானே உமது கேள்விக்குப் பதிலளிக்கிறேன்.

ஃ

ஏ. அப்துல்காதர், சவளக்கடை.

கே: சில கணவன் மனைவிமார் 3, 4 பிள்ளைகள் பிறந்த பிற்பாடு சண்டை சச்சரவு, தகராறுகள் செய்து கொள்வதேன்?

ப: பழகப் பழகப் பாலும் புளிக்கும் போது தாம்பத்திய உறவு மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

ஃ

ம. எமிலியானுஸ், கொழும்பு-13.

கே: கல்யாணம் செய்த சில பெண்கள் கர்ப்பத்தடை செய்கிறார்களே, இதனால் ஏற்படும் நன்மை யென்ன?

ப: குடும்பப் பளு குறையும். சனத்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். உணவுப் பிரச்சினை தீர வழி பிறக்கும், அரிசிப் பங்கீடு வெட்ட அவசியம் ஏற்படாது, அரசாங்கத்துக்கும் நெருக்கடி தோன்றாது என்று சிலர் கூறுகிறார்கள்.

ஃ

மனு. யோவான், நுவரெலியா.

கே: சிலர் ஓய்வு நேரங்களில் தமது மனைவி மக்களுடன் உல்லாசமாகப் பொழுது போக்காது, மாற்றான் மனையில் அங்குள்ளோருடன் கும்மாளம் அடிப்பதை அதிகம் விரும்புவதேன்?

ப: இக் கரைக்கு அக்கரை பச்சை என்ற எண்ணத்தால் தான் மாற்றான் மனையில் "பச்சை வாடை" பிடிக்கின்றனர்.

ஃ

ஏ. வி. பி. முத்துராசா, தெரணியகலை.

கே: தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணாவைக் காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவைப் போல ஆயுள் முழுவதும் சிறையில் வைத்தால், அண்ணாவின் தம்பிகளது நிலை எப்படியிருக்கும்?

ப: ஷேக் அப்துல்லாவைப் போல அண்ணாவைச் சிறையிடும்படி சென்னை அரசாங்கத்துக்கு ஒரு யோசனை கூறப் பட்டிருப்பது உண்மையே! அது காஷ்மீரில் சாத்தியம். தமிழ் நாட்டில் சாத்திய மன்று. அப்படி அண்ணாவைச் சிறையிட்டாலும் அடுத்த தேர்தலில் தி. மு. க. சென்னை அரசாங்கத்தைக் கைப்பற்றி விட்டால் அண்ணா விடுதலையாகி விடுவார். தி. மு. க. போன்ற ஒரு வெகுஜன இயக்கம் காஷ்மீர் சிங்கத்திடம் இல்லாத காரணத்தால் தான் சிங்கம் இன்னும் சிறையில் தவம் கிடக்கிறது.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: அன்று "வா" என்றவள் இன்று "போ" என்கிறாளே?

ப: உங்களை அழைத்த நோக்கத்தை நிறைவேற்ற நீங்கள் தவறி விட்டீர்கள் போலும்! அது தான் "போ" என்கிறாள்.

ஃ

பொ. கிருஷ்ணசாமிபிள்ளை, கம்பளை.

கே: குயுக்தியாரே, எனக்கு எழுதும் பொழுது கை ஆடுகிறதே! என்ன காரணம்? எனக்கு வயது 18 தான்.

ப: காதல் கடிதம் எழுதும் போதா...? காதல் உணர்ச்சி மிதமிஞ்சி விட்டால் நரம்புகள் தாக்குண்டு, கை ஆட்டமெடுக்கும்.

ஃ

அலோசியஸ் ஸ்டீவன், கண்டி.

கே: தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. ஏன் இன்னும் அரசியல் துறவு பூணவில்லை?

ப: அவர் அரசியல் துறவு பூணவிட்டாலும், அவரை மக்கள் அரசியல் அரங்கத்திலிருந்து கீழே தள்ளிவிட்டார்களே!

ச. ராசா, கொழும்பு-9.

கே: தாங்கள் பிரதமரானால்...?

ப: நாய் வளர்ப்பதற்காக ரூ 12,000 செலவில் நிச்சயமாக நாய்க்கூடு அமைக்க மாட்டேன்.

ஃ

த. யோகராசா, கல்முனை.

கே: குயுக்தியாரே, உங்களுடைய பொழுது போக்கு யாது?

ப: உங்களின் சாரமற்ற கேள்விகளைத் தூக்கிக் குப்பைக் கூடையில் எறிவது.

ஃ

நா. வடிவேலு, சாவகச்சேரி.

கே: பொழுது விடிவதற்கு அறிகுறியாக சேவல்க் கோழி மாத்திரம் கூவுகிறது, ஏன் பெட்டைக் கோழி கூவுவதில்லை?

ப: பெட்டைக் கோழியும் கூவ ஆரம்பித்துவிட்டால் சேவலுக்கும் கோழிக்குமுள்ள வித்தியாசம் தெரியாமல் போகுமல்லவா? அதனால் தான்...

ஃ

இ. பேரின்பநாயகம், களுவாஞ்சிகுடி.

கே: மன்னார் மாநாட்டு முடிவைப்பற்றி எஸ் தொண்டமான் எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லையே! காரணம் என்ன?

ப: அபிப்பிராயம் தெரிவிப்பதில் பயனில்லை என்பது அவருக்குத் தெரியும். தமிழரசார் முடிவு செய்து விட்டால் நிறைவேற்றியே தீருவார்கள் என்பதும் அவருக்குத் தெரியாத விஷயமன்று

ஃ

ஆர். ஏ. நடராஜா, வஹரக்க.

கே: பொதுஜனங்களைப் பாதுகாக்க வேண்டிய சில பொலிஸார் பொதுஜனங்களைத் தாக்கி வருகின்றனரே, இது பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: வேலியே பயிரை மேய்கிறது.

ஃ

"குகன்", வெள்ளவத்தை.

கே: ஓய் குயுக்தியாரே! ஏன் ஐயா, எப்போதும் பல்லைக்காட்டி இளித்துக் கொண்டிருக்கிறீர்? வேறு வேலை இல்லையா உமக்கு!

ப: உங்களையும் சிரிக்கச் செய்வதற்காக... வாசகர்களை எப்படியெப்படியெல்லாம் சிரிக்க வைக்க முடியுமோ அப்படி அப்படியெல்லாம் சிரிக்க வைப்பது தான் என் வேலை.

ஃ

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

எஸ். கே. சண்முகநாதன், வண்ணார்பண்ணை.

கே: மூதூர் இரண்டாவது பிரதிநிதியின் பேச்சையே, காணோமே? அவர் எங்கே?

ப: ஆளைக் காணவிட்டால் உடனே பொலிஸில் புகார் செய்யுங்கள்.

ஃ

த. இராசரத்தினம், இணுவில்.

கே: தொண்டமான், அஸீஸ், தமிழரசுக் கட்சியினருடன் ஒத்துழைத்தால், மலைநாட்டில் கட்சியை அமைக்கும் யோசனை பின் போடப்படுமா?

ப: யார் ஒத்துழைத்தாலும் ஒத்துழைக்காவிட்டாலும், தமிழ் பேசும் இனத்தை ஐக்கியப்படுத்துவதும், மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமை வாக்குரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுக்கப் போராடுவதும் தமிழரசுக் கட்சியின் தவிர்க்க முடியாத நோக்கங்களாகும்.

ஃ

த. வில்வரெட்டினம், மன்னார்.

கே: அரசியல் வாதிகளுக்குப் பைத்தியம் பிடித்தால் என்ன செய்வார்கள்?

ப: பாராளுமன்றத்தில் வசை மொழி பேசி குஸ்தி போடுவார்கள்.

ஃ

மறத்தமிழன், திருகோணமலை.

கே: அறப்போர் என்று அடங்கி இருப்பதை விட்டு, வெம்போர் என்று வேலேந்திச் சென்றால் என்ன?

ப: மறத்தமிழா! உமது வீரத்தை மெச்சுகின்றோம்! இலங்கையில் தமிழ் பேசும் இனம் சிறுபான்மையோராதலின் ஆயுதப் போர் அழிவைக் கொண்டு வரும்— அறப் போர் வெற்றியைக் கொண்டு வரும்.

ஃ

ந. அரசு, பதுளை.

கே: மலை நாட்டுப் பகுதிகளில் தமிழரசுக் கட்சி கிளைகள் நிறுவுவது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கும் என்று பிரதமர் கூறியிருக்கிறாரே! இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: எங்கே தமிழ் பேசும் இனம் ஒன்று கூடி விடுமோ என்ற பீதிதான் பிரதமரின் இந்த மிரட்டலுக்குக் காரணம்.

ஃ

யு. எல். ஏ. றஷீட், அட்டாளைச்சேனை—4.

கே: உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

ப: ஆஸ்திக்கு ஓர் ஆண்— ஆசைக்கொரு பெண்.

ஃ

க. குணம், காங்கேசன்துறை.

கே: யாழ் எம். பி. இப்பொழுது பீலிக் டயஸ் பண்டாரநாயக்கா பக்கமா? அல்லது சி. பி. டி. பக்கமா இருக்கிறார்?

ப: கோஷ்டிச் சண்டையில் எந்தப் பக்கம் வெற்றி பெறுமோ, அந்தப் பக்கத்தில் இருப்பார்! சந்தர்ப்பவாதத்தின் லட்சணம் அது தானே!

ஃ

சி. கந்தசாமி, உடுப்பிட்டி.

கே: 1956-ம் ஆண்டில் சிங்களம் மாத்திரம் மசோதாவை எதிர்த்து வாக்களித்த கம்யூனிஸ்ட் கட்சினர் இப்பொழுது தங்கள் மொழிக் கொள்கையை மாற்றியதேன்? அரசாங்கத்தை இப்பொழுது ஆதரிக்கும் மர்மம் என்ன?

ப: கொம்யூனிஸ்டுகள் எதை எதிர்க்கிறார்கள், எதை ஆதரிக்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை. காலையில் ஆதரிப்பதை மாலையில் எதிர்ப்பார்கள், மாலையில் எதிர்ப்பதை இரவில் ஆதரிப்பார்கள். ஓர் அரசியற் கட்சியினுள் சந்தர்ப்பவாதம் நுழைந்துவிட்டால், சந்தர்ப்பங்களுக்கேற்ப எதிர்த்தலும், ஆதரித்தலும் மாறி மாறி வரும்.

ஃ

எ. இராசகுமாரன், மன்னார்.

கே: நான் உங்களுக்கு ஆஸ்பத்திரி சுவீப்பில் முதற் பரிசு விழுவதாகக் கனாக் கண்டேன். பரிசு விழுந்தால் அக் காசை என்ன செய்வீர்கள்?

ப: அரசாங்கத்துக்கு வரி செலுத்தி விடுவேன்.

ஃ

சு. நாகராசா, கம்பளை.

கே: மிஸ்டர் குயுக்தியாரே! நான் ஒரு புது உலகத்தைக் கண்டு பிடித்துள்ளேன். அதற்கு என்ன பெயர் சூட்டலாம்?

ப: "கற்பனை உலகம்" என்று பெயர் சூட்டலாமே!

## உன் வழி நடப்போம் ஐயா!

[ கோவை—மகேசன் ]

ஆண்டு மூன் றுயிற்றெம்
அண்ணலைப் பிரிந்து இங்கே
தூண்டிடைப் புழுவே யென்னத்
துடித்து நின்றரற்றுகின்றோம்;
மாண் புகழ் கொண்ட எங்கள்
வன்னியத் தலைவா! உன்னைக்
காண்பது என்று கொல்லோ!
கவின் புகழ் பெற்றாய் ஐயா!

கூட்டத்தில் மேடையேறிக்
கொள்கை நீ கூறுங் காலை
கேட்டவர் மனங்கள் எல்லாம்
கிளர்ந்தெழும்; இன்று எம்மை
வாட்டிட வந்தோர் செய்யும்
வஞ்சனை எடுத்துச் சொல்லி
ஊட்டிய உணர்ச்சி எங்கள்
உள்ளம் விட்டகலாதையா!

தமிழுக்கு உரிமை வேண்டும்
தமிழரசமைக்க வேண்டும்
தமிழ் எங்கும் முழங்க வேண்டும்
தமிழராய் வாழ்தல் வேண்டும்
தமிழ் எனதுயிர் மூச் சென்றாய்!
தமிழர் தம் உரிமை காக்க
தமிழ் வழி சமர் தொடுத்தாய்!
தளபதி யாகி நின்றாய்!

சதியினால் பிரிந்து நின்ற
தமிழ் இன மக்கள் தம்மை
மதியினால் ஒன்று சேர்த்தாய்!
மத வெறி நீக்கி வைத்தாய்!
கதியற்று ஏங்கி நின்ற
கன்னியெம் தமிழன்னைக்கு
நிதி யென வந்துதித்தாய்!
நீள் புகழ் விடுத்துச் சென்றாய்!

தன்னிகரில்லா எங்கள்
தலைவனே எம்மை விட்டு
விண்ணகம் சென்றாய்! ஆயின்
விரங்கொள் தமிழர் கூட்டம்
உன்வழி நடக்கும்; எங்கும்
உன் கொடி பறக்கும்; எங்கள்
மன்னனே! தமிழ் தன்னில்
மாத தமிழ் அரசு காண்போம்!!

தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"
உறுதியான
நைலோன், குறுலோன்
நூல்களும்.
வலைகளும்

கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இன்னும் எவ்வளவோ செய்யக்கிடக்கின்றதே எப்படி ஓய்வு எடுக்க முடியும்'

## 'நாம் எதுவரினும் போராடிக் கொண்டே இருக்க வேண்டும்'

## தந்தை செல்வாவுக்கு எழுதிய கடிதத்தில் அமரர் 'வன்னியர்' பற்றி டாக்டர் நாகநாதன்

காலஞ் சென்ற திரு. வன்னியசிங்கத்தின் ஈமக் கிரியைகள் முடிவடைந்து மூன்று நாட்களுக்குள் பின், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு எழுதிய கடிதத்தை இங்கு நாம் வாசகர்களுக்குத் தருகிறோம்.

26, அல்பிரெட் பிளேஸ்,
கொழும்பு—3.
செப்டம்பர் 2?, 1959.

அன்புமிக்க செல்வா,

மரண ஊர்வலம் சுடலையை நெருங்கிக்கொண்டிருக்கையில், அதை விட்டுச் செல்ல வேண்டியிருந்ததற்காக நான் கவலைப்படுகிறேன். அவசர அவசரமாகச் சென்றவன், ஒரு மாதிரி ரயிலைப் பிடிக்க முடிந்தது. ஆனால், இரவு முழுவதும், ரயில் வண்டியின் சக்கரங்களின் நாதம் "வன்னியசிங்கம்...வன்னியசிங்கம்" என்று சப்தித்தன் பயனாக, நான் நித்திரையேகொள்ளவில்லை.

அவருடைய சடுதியான மரணத்துக்குச் சில நாட்களுக்கு முன் கடைசியாக நான் வன்னியரைச் சந்தித்த பொழுது, அவருக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சை முறையைக் கடைப்பிடிக்கும் படியும், கடைசி ஒரு மாதத்துக்கு அல்லது ஆறு வாரங்களுக்காவது பூரண ஓய்வு எடுக்கும்படியும் நான் அவரிடம் கூறியிருந்தேன்.

அதற்கு அவர் அளித்த பதில்: "எப்படி நான் ஓய்வு எடுக்க முடியும்? எங்களுடைய சுதந்திரப் போராட்டத்துக்கும், தேசிய மறுமலர்ச்சிக்கும் இன்னும் எவ்வளவோ செய்யக்கிடக்கின்றதே" என்பதே. பிறகு திரும்பவும் அவர் "எவ்வளவோ கொஞ்சம்தான் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. டாக்டர்! இறைவன் எங்களுக்கு ஓய்வு தரும் வரைக்கும், நாங்கள் ஏற்றுள்ள பொறுப்பை, எங்கள் இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்திருக்கும் கடமை வீரர்களாய் எங்களுக்கு சிலரை இறைவன் அனுப்பி வைத்து அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்கும் வரைக்கும், நாம், எதுவரினும், போராடிக்கொண்டேயிருக்க வேண்டும்..."

ஆம். இறைவன் 'ஓய்வு அளித்துவிட்டார். ஆனல் எமது தேசிய சுதந்திரத்துக்கும், எம்மிடையே இருக்கும் ஒதுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும் உழைக்கக் கூடிய இன்னும் சில "வன்னியர்"களை இறைவன் எப்பொழுதுதான் அனுப்பி வைப்பாரோ?...

சைவ சமயத்தின் கடும் பக்தர்களினதும், தமிழ்க் கலாசாரத்தின் முழுமையான பிரதிநிதிகளினதும் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்ட வன்னியசிங்கத்துக்கு சாதி, சமய வேறுபாடற்ற ஒற்றுமைத் தமிழ் சமூகத்தை விடப் பெரியதொரு இலட்சியமோ அல்லது சமயமோ இருந்ததில்லை.

எங்களுடைய கட்சியின் அமைப்புத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளில் 2வதாகப் பின்வருமாறு ஒரு வாக்கியம் வருவதை நீங்கள் அறிவீர்கள்:

"சமூக உயர்வு—தாழ்வுகளையும், அநீதிகளையும் குறிப்பாக ஒரு பகுதி மக்களிடையே நிலவும் தீண்டாமையையும் களைந்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்திப் புத்துயிர் அளித்தல்".

இந்த இலட்சியத்துக்காக வன்னியசிங்கத்திலும் பார்க்க, நேர்மையுடன் பேசிய தலைவரோ அல்லது சலிப்பில்லாமல் தொண்டாற்றிய தொண்டரோ ஒருவரும் கிடையாது. வன்னியசிங்கத்துக்கு எமது கட்சியின் திட்டத்தின் இப்பகுதி வெறும் அரசியல் ஒப்பாசாரமாகவோ அல்லது மேடைவித்தையாகவோ இருக்கவில்லை—நம்பிக்கையின் இருப்பிடமாக அமைந்தது.

என்னையும் இவ் விஷயத்தில் ஊக்கப்படுத்திய அவர் பின்வரும் அரசியல் சாசனத்தை உரைத்தார். "சிந்தனை இல்லாத தமது முன்னேர்களாலும் பாழும் வழக்கத்தினலும் அடிமைப்படுத்தப்பட்டு. கொடுமையாக நடாத்தப்பட்டு வரும் நமது சகோதரர்களுக்கு நீதியும் சுதந்திரமும் அளிக்க முன் வராத வரைக்கும், தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் சுதந்திரம் பெற முடியாது; இல்லை—ஒருபோதும் சுதந்திரமோ, நீதியோ பெறத் தகுந்தவர்கள் அல்ல."

மகாத்மா காந்தியும் மற்றும் இந்து சமயப் பெரியார் கூறியிருப்பது போலவும், வன்னியர் திரும்பவும் அதையே வற்புறுத்தியிருப்பதும் போல, எங்களுடைய சமூகத்தின் புல்லுருவியாக விளங்கும் தீண்டாமைக்கு அறியாமை, காலங்கடந்த பழக்க வழக்கங்கள், மடமை, இந்து சமய கோட்பாடுகளின் கருத்தைப் பிழையாகத் திரித்தல் ஆகியவையே காரணமன்றி, இந்து சமயமல்ல.

என்னுடைய உறுதியான நம்பிக்கை (அதில் வன்னியர்க்கும் பங்குண்டு) என்னவெனில், தமது இதயங்களில் சுதந்திரம், நீதி இவற்றை அன்புடன் நேசித்து வளர்க்கும் ஒரு மக்களை எந்தவிதமான ஏகாதிபத்தியமும் கடந்த 10 வருடங்களாக எத்தனிக்கப்பட்டு வரும் சர்வ சிங்கள பௌத்த அரசாங்கங்களின் ஏகாதிபத்தியத்தைப் போல எந்த ஏகாதிபத்தியமும், அடக்கவோ ஒடுக்கவோ முடியாது என்பதே. காரணம்—அத்தகைய மக்கள் தமது சுதந்திரப் போராட்டத்தில் எந்தத் தியாகத்தையும் கூடிய தியாகமாகவோ, எந்தக் கடமையையும் அதிகபாரமாகவோ, எந்தப் பிரயாணத்தையும் அதிக நீளமானதாகவோ கருதமாட்டார்கள் என்பது திண்ணம்.

நீதிக்கு அன்பும் சுதந்திரத்துக்கு ஒளியும் எம் உள்ளங்களில் பிரகாசித்துக்கொண்டிருக்குமேயானல், நாம் எப்படித்தான் எமது இரத்தச் சகோதரர்களை சாதிக்கொடுமையும், அநீதியும் நிறைந்த இருட்டில் வைத்திருக்க முடியும்?

எமது இதயங்களில் நீதியையும், சுதந்திரத்தையும் பேணுது, எமது சகோதரர் மீதே சாதி என்னும் கொடுமையைச் செலுத்தும் நாம், எப்படிச் சிங்கள மக்களிடமிருந்து நீதியையும், சுதந்திரத்தையும் கோர முடியும்? அவற்றுக்கான போராட்டத்தில் எமது எல்லாவற்றையும் அர்ப்பணித்துப் பங்குபற்ற எப்படித்தான் தயாராகலாம்?

"சுதந்திரம் பாகுபாடற்றது" என்று வன்னியர் தமது பேச்சுக்களில் குறிப்பிடுவார். தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் சுதந்திரமடைய வேண்டும். அல்லது விரைவில் எல்லோரும் புதியதொரு தாழ்ந்த சமூகத்தினராக—(சிங்கள மக்கள் எங்களை அழைப்பதுபோல)—"பறைத் தமிழர்கள்" ஆக வேண்டிவரும். இப்படி நடப்பது, கர்ம நீதியின் செயல் முறையாகுமென்றும், இதிலிருந்து எமது மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும் வன்னியர் கூறியிருக்கிறார்.

எமது சமூகத்ினூடே ஒதுக்கப்பட்டுள்ள சகோதரர்களுக்கு விமோசனம் அளிக்கும் பாதையே தமிழினத்தின் சுதந்திரத்துக்கான, கிட்டிய, ஒரேயொரு பாதை என்பது எனக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.


இந்த ஒரேயொரு பாதை எத்தனையோ பள்ளங்களையும், குழிகளையும் உடையதாய்—செல்வதற்கு மிகக் கடினமான பாதையாக விருக்கும்—முக்கியமாக, சமானமில்லாத சைவரும், ஒப்புவமையில்லா அந்த இந்துவுமான வன்னியசிங்கத்தின் பலம் வாய்ந்த, உற்சாகம் நிரம்பிய ஆதரவு மில்லாது செல்வதெனில் மிகக் கடினம்தான்.

எனினும் நாங்கள் ஒருவித தயக்கமும் பயமுமின்றி தமிழ் மக்களின் மனங்களில் சுதந்திரத்திற்கும், நீதி நியாயத்திற்கும் ஒரு தளராத பாசத்தை ஏற்படுத்தி கட்சியின் கடமையைத் தொடர வேண்டும். அப்படிச் செய்தால் சாதி அடிப்படையில் நடக்கும் அநீதிகளும் கொடுமைகளும் தாமாகவே மறைந்து விடும். அப்போது தான் நம்மை நாம், ஒரு பாவலன் கூறியதுபோல்,

"ஆத்மாக்களில் சுதந்திர ஒளியும், கண்களில் அறிவின் ஒளியும்வீசும் மாண்புமிக்க ஒப்புயர்வில்லாத இனம்" என்று கூறிக் கொள்ள முடியும்.

வன்னியரின் துக்ககரமான மறைவின் விளைவாக நீங்களும் உங்களிற் சிலரும் இதுவரை தாங்கிய பெரும்சுமை தாங்க முடியாததாகிவிடும். எனினும் நாங்கள் வழியில் தடுமாற மாட்டோம்; தடுமாறவும் கூடாது. நீதியை அளிக்கும் தெய்வம், உண்மையின் இருப்பிடமான தெய்வம்—எமது புனித முயற்சிகள் பாதையோரம் விழுந்து மறைந்துவிட அனுமதிக்க மாட்டாதென்றே நான் நம்புகிறேன்.

இம் முயற்சிகளில் முதலாவதாகத் தீண்டாமையை உடனடியாக நீக்கி விடுவதற்கும், மற்றும் சமூக அநீதிகளை விரைவில் அகற்றுவதற்கும், 'வன்னியசிங்கம் வாரம்' ஒன்றை நடத்த வேண்டும் என ஆலோசனை கூறுகிறேன்.



மட்டக்களப்பு மாநாட்டில் ஜாதி ஒழிப்புப் பிரேரணையை ஒட்டி அமரரான தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் அருமையாகச் சொற்பெருக்காற்றுகிறுர்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் என்றழைக்கப்படுவோருக்கு ஓரளவாவது நீதியை அளித்து, கர்மநீதியின் செயல் விதிப்படி, "தமிழ்ப் பறையர்" என்று எல்லோருமே அழைக்கப்படுவதிலிருந்து உயர் சாதியினர் என்றழைக்கப்படுவோர் தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதே எமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

திருமதி வன்னியசிங்கமும் அவரது நாலு சிறு பெண்களும், பிறக்கப் போகும் ஐந்தாவது குழந்தையும்—இவர்களைப் பற்றிய சிந்தனையும் என்னைத் தொடருகிறது. மக்கள் என்ற முறையில், கட்சி என்ற முறையில் அவர்களுக்கு நாம் என்ன செய்ய முடியும்?

எதிர்வரும் சந்ததியினரின் தமிழ்க் குழந்தைகள் பெருமையுடன் வாழட்டும் என்று, அதற்காகத் தமது உயிரையும் அர்ப்பணித்த வன்னியர், கடந்த பத்து வருடங்களோ அல்லது அதிகமாகவோ. தான் கொண்ட இலட்சியத்துக்காக ஆற்றிய சுயநலமற்ற சேவையினுல், திருமதி வன்னியசிங்கமும் அவரது குழந்தைகளும் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது எமக்குத் தெரியும்.

வன்னியசிங்கத்தின் நினைவுக்கு நாம் செலுத்தும் எந்த அஞ்சலியும், திருமதி வன்னியசிங்கத்துக்கு எமது தாழ்மையான அஞ்சலியை அளிக்காத வரைக்கும், பூரணமாகாது.

யூ. என். பித் தமிழரின் 'விதானை' மனப்பான்மையின் அடிப்படையில் தான், வன்னியசிங்கத்தின் அரசியல் வளர்ச்சி அமைந்தது. ஆனலும், பின்னர் அவர் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்துக்கும், தன்மானத்துக்கும் போராடும் பெருந்தலைவனுக மாறினுரென்றல், அதற்கு, அவர் உங்களைத் தனது அரசியல் குருவாக ஏற்றமை ஓரளவு காரணமாக இருக்கலாம். ஆனல், முக்கிய காரணம் காந்தி மகான், சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் அரசியற் சூழ்நிலையில் இந்தியாவில் வளர்க்கப்பட்டு, எமது கட்சியின் நோக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும், முழு ஆதரவு அளித்த திருமதி வன்னியசிங்கமே என்று கூற வேண்டும்.

தமது மனைவியின் முழு ஆதரவு, அனுதாபம் நிறைந்த உணர்வு, மனமுவந்த தியாகம் இவையில்லாமல் எந்த ஒரு மனிதனும், வன்னியர் தனது இலட்சியத்துக்குத் தன்னை அர்ப்பணிப்பதில் அடைந்த ஏற்றத்தை அடைய முடியாது. தனது கணவனுக்கு மிக முக்கியமாக விளங்கியதும், தனக்கு மிகவும் நெருங்கிய தொடர்பைக் கொண்டதுமான இலட்சியத்துக்கு, இத்த கையமாண்புமிக்க பெண்ணை நாம் இழந்துவிடக் கூடாது.

எதிர்வரும் கோப்பாய் உபதேர்தலில் எங்களுடைய கட்சியின் பெயரில் அவரை நிறுத்தவும், அதற்காக அவரை ஊக்கப்படுத்தவும் வேண்டுமென நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இதைச் செய்வது வன்னியரின் விதவைமீது ஏற்பட்டுள்ள பரிதாப உணர்ச்சியின் பயனுகவல்ல—மாண்புமிக்க, தேசப்பற்று நிறைந்த தமிழ்ப் பெண்குலத்தின் பிரதிநிதி என்ற அவரது சொந்தமான உரிமையின் பெயரிலேயே.

தமிழரசுக்காக எப்பொழுதும் சேவை புரியும்,
உங்கள்,
டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியசிங்கம் ஒரு திருக்குறள்

## போதனையுடன் நிறுத்திவிடாமல் சாதனையிலும் ஈடுபட்ட வீரன்

மூன்றாண்டுகட்கு முன்னர் அமரராகிவிட்ட அண்ணர் வன்னியனாரை எண்ணும் போது, மனிதர்கட்கு நாமகரணம் சூட்டப்படுவதன் அர்த்தம் வன்னியனாரைப் பொறுத்தவரையில் தெளிவற்றது. காரணம், வன்னியசிங்கம் என்ற பெயர் ஓர் ஆளைச் சுட்டும் பெயர் அல்ல, வன்னியசிங்கம்—ஒரு தத்துவம்; வன்னியசிங்கம்—ஒரு சகாப்தம்; வன்னியசிங்கம்—ஒரு நிகண்டு; சுருக்கமாகச் சொல்வதானால் வன்னியசிங்கம் ஒரு திருக்குறள், அதிலே அனைத்தும் அடக்கம்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கத்தைக்கட்டியெழுப்பிய பணியில் தந்தை செல்வநாயகத்திற்கு எத்துணை பங்குண்டோ, அதனைவிட இம்மியளவும் குறையாத பங்கு களபதி வன்னியருக்கும் உண்டு.



தமிழ் உரிமைப் போராட்டம் தேசத் துரோகமானால் தூக்கு மேடை ஏறவும்தயார் என்று மொழிந்த கோப்பாய்க் கோமான 1954-ல் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, தமிழரசுத்தந்தையால் கௌரவிக்கப்படும் காட்சி.

தந்தைக்குத் தெரியாமலேயே (Unconsciously) ஏமாற்று வேலைகளையும், எத்தர்களையும் எதிர்க்கவும் வெறுக்கவும் தெரிந்தது தந்தை செல்வாவின் வெள்ளையுள்ளம். ஆனால் அதிலும் மேலாக, 'எது ஏமாற்று வேலை? யார் எத்தர்?' என்பதை ஆராய்ந்து அறியும் திறமை வச்சிர நெஞ்சன் வன்னிய சிங்கத்திடம் தான் இருந்தது. அதனால் தான், அன்னார் இறந்துவிட்ட பின்னர்கூட சிங்களப் பிரமுகர்களே சிரத்தையெடுத்து இறுதிமரியாதை செலுத்த இங்கு வந்தனராயினும், 'வஞ்சகம்' அங்கு வரவில்லை. எங்கே 'வன்னியன்' பிணம் கூடத் தன் மீது அறம் பாடிவிடுமோ என்று அஞ்சி.

வன்னியசிங்கம் என்ற தத்துவம் தீண்டாமை ஒழிப்பின் ஒரு திவ்விய விளக்கம். தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் முன்னோடியான முதற் பணி தீண்டாமை ஒழிப்பு என்பதை அண்ணல் வன்னியனார் இருதயபூர்வமாக நம்பினார்.

இந்தப் பணியிலும் சரி வேறு எந்தப்பணியிலும் சரி அண்ணல் வன்னியசிங்கத்தை காந்திஜியுடன் ஒப்பிடுவதை யாரும் சில வேளை ஆட்சேபித்த போதிலும், காந்திஜி எத்துணை உணர்ச்சியோடு தீண்டாமையொழிப்பில் ஈடுபட்டாரோ, அதற்கு அணுவளவும் குறையாத உணர்ச்சியுடனும் உள்ளத் தெளிவுடனும் வன்னியனார் ஈடுபட்டார் என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது.

இத்தனைக்கும் அமரர் வன்னியசிங்கம் அவர்கள், சில உயர்சாதித் தமிழர்கள் என்று சொல்லப்படுவோரைப் போல 'ஏனோ தானோ'

**கரிகாலன்**

உயர் சாதியினர் அல்ல, 'சுண்டியெடுத்த' உயர் சாதியினர். இது தமிழ்ப் பிரதேசமனைத்தும் தெரிந்த உண்மையாகும். இது பற்றி வன்னியசிங்கம் அவர்களே கூறிய சம்பவம் ஒன்று மிகவும் சுவையானது.

1956-ம் ஆண்டுத் தேர்தல். மீசை அரும்பாத அப்பருவத்திலே, சாவகச்சேரியிலும் கோப்பாய் தொகுதியிலும்தான் அதிகமான கூட்டங்களில் பேச எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. வன்னியனாரோடு கூட்டங்கட்குப் போகும் போதும் திரும்பும் போதும் அவர் வாயிலிருந்து சுவையான பல சம்பவங்களையும், குட்டிக்கதைகளையும், நாடோடிப் பாடல்களையும், நகைச் சுவைத் துணுக்குகளையும் கேட்கும் பாக்கியம் பெற்றேன். நேரம் போவதே தெரியாது. மோட்டார்வண்டி நின்று விட்டால் அதையொட்டி ஓர் கதை கிளம்பும், தெருவோரத்தில் ஏதாவது பழைய ஆலமரமோ, அரசமரமோ நின்று விட்டால் அதனைச் சுற்றிப் பல உப கதைகளையும், கர்ணபரம்பரைக் கதைகளையும் மொழிவார்.

அன்று கார் போய்க் கொண்டிருந்த போது தீண்டாமை யொழிப்பைப் பற்றிய கதை எழுந்தது. அன்னாரின் பாரியாரும் உடன் இருந்தார். நெடுந்தீவில் அருந்ததியர் சமூகத்தினர் தமக்கு விருந்தளித்ததைப் பற்றிக் குறிப்பிடும் போது என நினைக்கிறேன். 'அதெப்படி அவர்களுடைய மிளகாயும் உறைக்கிறது, புளி புளிக்கிறது?' என வேடிக்கையாகக் கேட்டார்.

தான் 1947-ம் ஆண்டுத் தேர்தலின் போது, கூட்டங்களில் கண்டவர்களெல்லாம் தண்ணீர் கொடுத்துவிடு வார்கள் என்ற பயத்தினால் முன் ஜாக்கிரதையுடன் ஒரு கூஜாவில் தண்ணீர் உடன் கொண்டு சென்ற சம்பவத்தையும் கூறிச் சிரித்தார்.

அத்தோடு கதைக்கு முடிவைத்தாற்போல, தான் வேறு இடத்தில் பெண் எடுத்தால் தமது சாதியின் தனித்தன்மையும் புனிதத் தன்மையும் கெட்டு விடுமென அஞ்சி தன் சொந்த 'மைச்சாளை'யே கிளிபோல் வளர்த்து தன்னிடம் ஒப்படைத்த கதையைக் கூறி, 'அந்த மைச்சாள்தான் இவ' எனத் தனது பாரியாரையும் காட்டினார். 'நாங்கள் சுண்டியெடுத்த வேளாளர்' எனத் தன்னைத்தானே கிண்டலும் செய்து கொண்டார்.

கந்தனும் சுப்பனும் தீண்டாமையொழிப்பைப் பற்றிப் பேசும்போது தொனியாத தனி அர்த்தம் அமரர் வன்னியசிங்கம் அவர்கள் பேசும்போது தொனித்தது.

'ஆனைப்பட்ட பிராமணனான நானே காந்தியின் மகனுக்கு என் மகளைக் கொடுத்திட்டேன். நீ சூத்திரன். செய்வதற்கு ஏன் தயக்கம்' என ராஜாஜி கேட்காத கேள்வியின் தன்மை அமரர் வன்னியனாரின் தீண்டாமையொழிப்புப் பணியின் தன்மையிலே பிரதிபலித்தது. மனப்பூர்வமான போதனையோடு வன்னியனார் நிறுத்தவில்லை. உளப்பூர்வமான சாதனையிலும் ஈடுபட்டார். அதனால் சில சோதனைகளையும் சந்தித்தார்; சமாளித்தார்.

வன்னியசிங்கம் என்ற சகாப்தம், அரசியல் கற்புடைமைக்கு அரணமைத்த பத்தினிகளைச் சந்தித்த சகாப்தம். மலை நாட்டுத் தமிழனுக்குத் தேள் கொட்டினால், மன்னார், மட்டக்களப்பு, மாவிட்டபுரம் தமிழருக்கு நெறி கட்டும் என்ற உண்மையை நிலை நாட்டிய சகாப்தம்...பதவி யென்ற எலும்புகளும், பட்டம் பவிசு என்ற சோற்றுப் பருக்கைகளும் சொறி நாய்களை அசைக்கும், சுதந்திர வீரர்களை அசைக்காது என்பதை ஆணித்தரமாக நிறுவிய சகாப்தம்.

வன்னியசிங்கம் என்ற நிகண்டு, நடமாடும் நிகண்டு. அது அறிவுப் பொக்கிஷம். எந்தத் துறையிலே எந்தக் கேள்விக்கும் அங்கு விடையுண்டு. குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட சகல துறைகளிலும் புள்ளி விபரத்தோடு திருப்திகரமான விடையிறுக்கக் கூடிய திறமை அமரரிடமே இருந்தது. அன்னாரின் அமரத்துவம் சிருட்டித்த காலியிடம் இன்றும் காலியே.

அமரரிடம் குற்றங் கண்ட கூடாரத்தினருள் பலர் அன்னார்தம் குத்தல் பேச்சில் தாக்குண்டோரே. வக்கணைப் பேச்சுப் குத்தல் வார்த்தைப் பிரயோகங்களும் வஞ்சகர்களை நாகபாணம் போல் தாக்குவதுண்டு.

குறிப்பாக வன்னியருக்கே கைவரப்பட்ட 'கூட்டங்களில் கேள்விகட்கு விடையிறுக்கும்'பணியில், கோணல் கேள்வி கேட்போருக்கெல்லாம் 'குத்தல்' விடையிறுத்தார் அமரர். தாக்குண்டோர் தரக்குறைவாக பேசினர். ஆனால் பெரும்பாலோர், அந்தக் கிண்டல் நடையிலே நகைச்சுவையையும் அமரரின் சமயோசித புத்தியையும் மேதாவிலாசத்தையும் கண்டனர்.

1956-கோப்பாயில்- எனக் கருதுகிறேன்—ஓர் எஸ். எஸ். ஸி. படித்த இளைஞர், 'நான் எஸ். எஸ். ஸி. படித்த மாணவன், உங்கள் தமிழரசு கிடைத்தால் எங்கள் எதிர் காலம் என்ன?' எனக் குத்தலாகக் கேள்வி எழுதிக் கொடுத்தார். அதில் இலக்கணப் பிழைகள் நிறைய இருந்தன.

வன்னியனார் கேள்வியை எழுதியபடியே வாசித்துவிட்டுக் கூட்டத்தைப் பார்த்துப் பின் வருமாறு கூறினார்.

"ஒரு எஸ். எஸ். ஸி. படித்த இளைஞருக்கு தன்

(9-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

### "வாழ்கின்றாய்; சாகவில்லை!"

— 'சர்வானந்தன்' —

தமிழர்கள் ஈழநாட்டில்
தலைநிமிர்ந(து) என்றும்போல்
தமிழ்பேசி, எழுதி நாளும்
தன்மான வாழ்வுவாழ,
தமிழரசு என்ற கட்சி
தனிவழி நின்று நனறே
அமிழ்தமாம் தமிழ் மொழியின்
அழிவினைத் தடுத்த அண்ணல்.

சத்திய வழியைக் கொண்டு
சமரச வாழ்வு காண
நித்தியம் வாழ்வு தன்னில்
நிறைவுடன உழைத்துநின்ற
உத்தம உருவே! உண்மை
உழைப்பினால் தமிழைக்காத்த
சத்தியசீல! உன்தன்
சமரச வழியில் நின்றோம்.

"சிங்களம் கற்க மாட்டோம்;
செந்தமிழ்க் காக்க மேலாம்
எங்களின் வாழ்வை ஈய்நதே
எம்மொழி காப்போம்" என்றே
சங்க நாதம் செய்தே
சாறறினாய் ஆட்சி மன்றில்,
தங்கநேர் தமிழர் வாழ்வு
தழைத்திட உழைத்த மன்ன!

உம்மொழி வளர்ப்போமென்ற
உறுதியில் செனற முன்னோர்
தம்தொழில் செய்தலால்
தமிழ் மொழி காக்கவில்லை;
அம்மு(ன்)னோர் சென்றபாதை
அடுத்து நீ செல்லாதின்று
எம்மொழி காக்க நின்று
இன்னுயிர் நீத்தாய் மன்ன!

நின்னுடை பெயரைக்காத்தே
நிறைவுடன் "செல்வா"வோடு
உன்னுடை பணிதொடர்ந்தே
உ..நிறைவுடனே செய்வோம்;
உன்னுடல் அழிந்த போதும்
உன்புகழ் அழியாது உண்மை
வன்னியசிங்க மன்னா!
வாழ்கின்றாய் வாழ்வாய் என்றும்.

ஜீ. சீ. ஈ. தமிழ் பரீட்சை
டிசம்பர் ஆகஸ்ட்
அற்லஸ்ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்தியடைவது மிக எளிதாகி விட்டது.
* பரீட்சையின் புதிய நிபந்தனைகள்
* எமது புதிய பாடங்கள்
* 101 வினு விடைகள்
* கடந்த கால வினு விடைகள்
போன்றவற்றிற்கு இன்றே எழுதுங்கள்.
விபரங்கள் இனும்:-
அற்லஸ் ஹோல் த. பெ. 649, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷப்பல் பிடுங்கப்பட்டது

வணங்காமுடி கொண்ட ஒருவர் மந்திரிப்பதவி ஏற்ருர். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினுர். தன்னை அசைக்கவே முடியாது தன் இஷ்டப்படி எதையும் முடிப்பேன் என்று மார்தட்டி இறுமாந்திருந்தார். எவருடைய பேச்சையும் அவர் செவிமடுப்பதில்லை. தானே எல்லோரையும் விட அறிஞன்—திறமைசாலி என்றெல்லாம் வெளிப்படையாக மார்தட்டி முழக்கமிட்டார். கடைசியில் தலைகுனிந்து மண்டியிட்டுவிட்டார். வேறு யாருமல்ல—முன்ஞள் நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காதான்.

திறமையுள்ளவர், தகுதி வாய்ந்தவர், செயல் வீரர் என்றெல்லாம் பெரும்பான்மையினரால் போற்றப்பட்ட 'அரிசியல்' வாதி, அரிசி குறைப்புடன் பதவியை விட்டு ஓடினுர்.

பதவியை விட்டு விலகுவதற்கு முதல்நாளே அவர் பேசிய பேச்சுக்களில்கூட ஆணவமும் மமதையும் தொனித்தன. புதியவரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சுதந்திரக் கட்சி சார்பில் காலிமுகத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. பீலிக்ஸ் பேசும் போது "உரிமை கோரிய கத்தோலிக்க மக்களை முழங்காலில் என்காலடியில் மண்டியிடச் செய்தேன்" என்று ஆணவமாகப் பேசினுராம். அணையப் போகும் பதவியென்னும் நெருப்புகடைசி வேளையில் கொழுந்துவிட்டு எரிவது போலிருந்தது அவருடைய கூற்று.

### லண்டனுக்குப் போக......

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு, நீதிமன்றங்களிலும் சிங்களம் புகுத்தப்படவேண்டுமென்ற நிலை உருவானபோது, பல வழக்கறிஞர்கள், நியாய துரந்தரர்கள் இலங்கையை விட்டு இங்கிலாந்து போன்ற பல வெளிநாடுகளுக்குச் சென்றனர். அப்பொழுது வழக்கறிஞராகத் தொழில் செய்துகொண்டிருந்த திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவும் வெளியேற ஆயத்தங்கள் செய்தாராம். இங்கிலாந்துக்கு எதற்காகச் செல்லவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு கேட்டபோது. "சிங்களத்தில் கோட்டில் விவாதிப்பதற்கு எனக்குத் தெரியாது. ஆங்கிலத்தில் விவாதிக்கவே எனக்குப் பரிச்சியமுண்டு. ஆகவே இந்நாட்டுச் சட்டத்துக்கு அமைய நான்கரும மாற்ற முடியாததனுல் நான் மேல்நாட்டுக்குச் செல்லவிரும்புகிறேன்" என்ருராம். அவர்தான் தேசியம் பேசி, "தாய் நாட்டுப் பற்றுக்" கொண்டு உழைக்க வந்திருக்கிருர்!

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் நிதிமந்திரியானுர். தியாகியான திரு. பண்டாரநாயக்காவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆட்சி செலுத்துவதாகத் தம்பட்டமடித்தார், தமிழ் பேசும் மக்களை என்னென்ன வகைகளில் துன்புறுத்தலாமோ அத்தனையும் செய்து, இன்று ஆடி அடங்கிவிட்டார். விஷப்பல் இன்று பிடுங்கி எறியப்பட்டாகி விட்டது. பதவிகிடைத்ததும் 'சகலதும் நாங்களே' என்று சர்வாதிகார எண்ணம் மேலிட ஆணவ ஆட்டம் ஆடுவோரெல்லாம் திடீரெனக் கீழே விழுந்து விடுவார்கள்-இதை எத்தனையோ தடவைகளில் நாம் பார்த்துள்ளோம்.

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## 'சொக்கிலேட்' தியாகம்

புதிய வரவு செலவுத் திட்டத்தை ஒட்டி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கை மக்கள் ஒவ்வொருவரையும் தியாகம் செய்யும்படி கோரினுர். பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஒவ்வொருவரும் தமது அத்தியாவசியத் தேவைகளைத் தவிர ஏனையவற்றிற்கு அதிகம் செலவிடக்கூடாது என்று குறிப்பிட்டார்.

தானும் தனது குடும்பச் செலவுகளைக் குறைத்துள்ளதாகக் கூறினுர். தனது குழந்தைகளுக்கு வாங்கப்படும் 'சொக்கிலேட்' டின் ஒருபகுதியைத் தியாகம் செய்து விட்டாராம். ஐயோ பாவம் 'சொக்கிலேட்' இல்லாமல் பிரதமரின் குழந்தைகள் என்ன பாடுபடுமோ? சாதாரண ஏழைமக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க ஒரு உறைவிடமின்றி வாடுவதைவிட 'சொக்கிலேட்டை' மறுப்பது பாவத்திலும் பாவம் அல்லவா?

### தாயை அவமதித்த எட்டப்பன்

அண்மையில் மட்டக்களப்பு அரசடிமண்டபத்தில் கிழக்கு இலங்கை அரசினர் தமிழ் ஆசிரிய சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது ஆசிரியர்கள் சிங்களம் படிக்கவேண்டுமா என்பதைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதே அன்றையக் கூட்டத்தின் நோக்கம்; கூட்டத்துக்குச் சமுகமளித்தோரின் கையொப்பங்களைச் சேகரிக்க அனுப்பப்பட்ட பத்திரம் வந்து சேர்ந்ததும், ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. கையொப்பங்கள் பத்திரத்தில் அத்தனையும் தமிழிலேயே இருந்தன—ஒன்றைத் தவிர. மலைநாட்டில் படிப்பிக்கும் ஒரு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டப்பன் மட்டும் துணிந்து தனது துரோகத் தன்மையின் சொரூபத்தைக் காட்டியுள்ளார். கூசாமல் தமது கையொப்பத்தை சிங்களத்தில் வைத்துள்ளார் என்ருல் யார்தான் அவரை வாழ்த்தாமல் விட்டு விட முடியும்.?

சிங்களத்தை எந்த நிலையிலும் படிப்பதில்லை என்று ஆசிரியர்கள் தீர்மானித்தனர் என்பது உண்மையே எனினும், சிங்களத்தில் கையொப்பமிடவே துணிவு கொண்ட எட்டப்பர் கூட்டம் மட்டும் தமது துரோகச் செயலை என்னென்ன வழிவகைகளில் செலுத்தி, தன்னலத்தை வளர்க்குமோ தெரியவில்லை.

தனது தாய் மொழியாலேயே வயிறு வளர்க்கும் இந்தத் தம்பிரானுகள் தாயையே விலை கூறுகின்றனர். நீங்களெல்லாம் தமிழையே மறந்து விடுவது நல்லது. தனியே சிங்களம் மட்டும்படித்தால் மட்டும் உத்தியோகம் நிலைத்துவிடாது. சிங்களவனுக மாறியாக வேண்டும். மேலும் இன்னுமொருபடி முன்னேறினுல் பௌத்த மதத்தையே தழுவி, அரசாளுவோரால் பெரிய பெரிய சலுகைகள் பெறவும். சிங்கள மக்களின் பெயர்களையே தமக்குச் சூட்டிக் கொள்ளுவதுண்டு.

அதேபோல் உமக்கும் திரு. பலாங்கொடை என்று அப்பாக்குட்டி அம்மான் நாமகரணம் சூட்ட விரும்புகிருர். ஏற்றுக் கொண்டு மாற்ருந்தாயாரான சிங்களத்தைத் தழுவு. உனக்கு வேண்டியது பணம், பதவி, அத்துடன் காட்டிக் கொடுக்கும் தன்மை. யாவும் பெற்று நீடூழி வாழ்க—

### சிங்களம் படும் பாடு

இலங்கைக்கு அப்பால் சென்ருல் சிங்கள மொழிக்கு எந்தவிதமான செல்வாக்கும் கிடையாது. அவ்வளவு பெரிய அந்தஸ்துள்ள சிங்களத்தை ஆட்சி மொழி ஆக்கிவிட்டு ஆட்சி யந்திரத்தின் குட்டி அதிகாரிகள் படும்பாடு சொல்லமுடியாது.

அரசாங்க மருத்துவக் களஞ்சியத்தின் குட்டி அதிகாரி ஒருவர் ஒரு கடிதந்தை சிங்களத்தில் விலாசமிட்டு தென்னிந்தியாவிலுள்ள மண்டபத்துக்கு அனுப்பியுள்ளார், மண்டபம் காம்ப் இன்னும் இலங்கை ஆட்சியுடன் தொடர்பு கொண்டுள்ள பிரதேசம் தான். அங்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஒழுங்காக விலாசதாரருக்குப் போய்ச் சேரவில்லை. தென்னிந்தியத் தபால் அதிகாரிகள் எவருக்குமே முகவரியை வாசிக்க முடியவில்லை. சென்னையிலுள்ள பெரிய தபால் நிலையம்வரை சென்று அக்கடிதம் பத்திரமாக அனுப்பியவர் கைக்கே வந்துவிட்டது இந்த மாதிரியான அவமானங்கள் சிங்கள அலுவலகங்களுக்கு ஏற்பட்டு வருகிறதை பார்க்கப் பரிதாபமாகவிருக்கிறது.

### உண்மை உணர்ந்த நாயகம்

சிங்களம் படித்தால் மட்டும் போதாது, அசல் சிங்களவனுக மாறினுல்தான் போதுமான சலுகைகள் கிடைக்குமென்பதை குருணுகல் பகுதியில் உள்ள ஒரு மாஜித் தமிழராகிவருபவர் ஒருவர் உணர்ந்துள்ளார்.

அவருடைய பெயர் ஒரு நாயகம் என்று முடிகிறது. சிங்களப் பெயர்கள் எதுவும் முடிவு பெறுமல் கடைசியில் அந்தரத்தில் தொங்குமல்லவா? இந்த நாயகத்துக்குப் 'கம்' என்ற முடிவு பிடிக்கவில்லை. 'க்கா' என்று கையெழுத்திட ஆரம்பித்துவிட்டார். 'நாயகம்' இப்பொழுது 'நாயக்கா' என்று வந்துவிட்டது. இனிமேல் என்ன? அவருக்குப் பதவி உயரும், பணம் பெருகும்.........

தன் தாயை மறந்து தறுதலைத்தனம் புரியும் இந்த நாயக்காக்கள் 'நாயகர்' களாக மாறும் நாள் வெகு தொலைவிலில்லை.

### சதிப் பேச்சு

அடிதடி, ஏச்சுப் பேச்சு, சண்டை சச்சரவு எல்லாம் ஏற்பட்டு, இறுதியில் நிதி மந்திரியின் பதவிக்கு உலை வைத்ததோடு அரிசியில் கை வைக்கும் பிரச்சினை தீர்ந்தது.

மந்திரி சபைக்குள் பிளவு பூசல் இந்த அளவுக்கு வளர்ந்திருக்குமென்ருே அரசாங்கப் பாராளுமன்றக் குழுவினுள் பூகம்பம் பொங்கக்கூடிய நிலைமை உருவாகியிருந்ததென்ருே நாட்டு மக்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த முக்கியமான இரகசியங்களை அரிசிப் பிரச்சினை, அம்பலப்படுத்திவிட்டது.

பீலிக்ஸ் கோஷ்டி என்றும் சி. பி. டி. சில்வா கோஷ்டி என்றும் இரு கோஷ்டிகள் மந்திரி சபைக்குள் கெடுபிடிப் போர் நடத்துகின்றனர் என்பது இப்பொழுது தான் நாட்டு மக்களுக்குத் தெரியும்.

அரிசிப் பிரச்சினையின் சூடு தணிய முன்பே சதிப் பிரச்சினை மீண்டும் கிளம்பி விட்டது. சதிகள் எத்தனையோ உண்டெனக் கூறப்படுகிறது.

"அ" சதி

"ஆ" சதி

"இ" சதி

என்று தற்போதைய சதிப் பேச்சுக்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளார், அப்பாக்குட்டி அம்மான்.

"அ" சதிதான் கடந்த ஜனவரி 27-ந் தேதி நடைபெறவிருந்ததாகக் கூறப்பட்ட சதி.

"ஆ" சதி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்ததாகக் கூறப்பட்ட சதி.

"இ" சதி திரு. பிலிப் குணவர்தன, திரு. தஹநாயக்கா மூலம், கிளப்பிவிட்ட சதிப் பேச்சு.

கடந்த வாரம் முழுவதும் பாராளுமன்ற வட்டாரங்களில் சதியைப் பற்றிய பேச்சாகவே இருந்ததென அம்மான் தெரிவிக்கிருர். ஆளுக்கொரு வதந்தி பலூனைப் பறக்கவிட்டுக் கொண்டிருந்தனராம்.


"ஆ" சதி பற்றிய வதந்திகளில் கர்னல் உடுகம, திரு. பிலிப், திரு. என். கியூ. டயஸ் ஆகியோர்களின் பெயர்கள் அடிபட்டதாக அப்பாக்குட்டி அம்மான் கூறுகிருர். வதந்திகளைப் பரப்பிவிடுபவர்கள் திரு. பீலிக்ஸின் பெயரையும் அத்துடன் சேர்த்துக் கொண்டனராம்.

(13-ம் பக்கம் பார்க்க)



சிங்களம் மட்டும் சட்டம் முதன் முதலாகப் புகுத்தப்பட்ட 1956-ம் ஆண்டு ஜூன் 5-ல் தமிழ் பேசும் மக்களுடைய அறப்போராட்டம் ஆரம்பமானது. கொட்டும் மழையிலே காலி முகத் திடலில் அமரர் வன்னியசிங்கம் உட்பட தலைவர்களும் தொண்டர்களும் சத்தியாக்கிரகம் செய்தனர். காடையர் படை கட்டவிழ்த்து விடப்பட்டதும் அன்றுதான்.

Dial 2739




ராஜ பீடி
ஸ்பெஷல்

ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத ஒளியாக விளங்கும் அமரர் வன்னியசிங்கம்

## தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காக அயராது உழைத்த உத்தமர்

**13-10-1911**-ம் ஆண்டு தெல்லிப் பளையைச் சேர்ந்த கொல் லங்கலட்டிக் கிராமத்தில் பிறந்த அமரர் வன்னியசிங் கம் அவர்கள் 17—9—59-ல் யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தினர். அன்னர் இயற்கை எய்தி இன்ருேடு மூன்று ஆண்டுகள் முழுமை அடைந்துவிட்டன.

அமரர் வன்னியசிங்கம் அவர்கள் ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தனக்கென ஒரு தனித் தன் மையோடு தனியிடத்தைக் கொண்டு தமிழ் பேசும் மக் களுக்காகப் பன்னரிய சேவை செய்தார். அவர் தனது சேவையினுல் இந் நாட்டில் மறைந்தும் மறை யாத ஒளிபோல் சுடர் விடு கிருர்.

ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு தமிழருக்குப் பெருந்தீங்கு ஏற்படுத்தும் என்றும் எதிர்காலத்தில் இலங்கையில் தமிழர்கள் என்ற ஒரு இனம் இருந் ததா? தமிழ் மொழி என்ற ஒரு மொழி உண்டா? என்ற ஐயப்பாட்டையும் கொடுத்துவிடும் என்பதை யும் திடமாகவும் திட்ட வட்டமாகவும் கூறியவர் தான் மறைந்த வன்னிய சிங்கம் அவர்கள்.

### ஒற்றையாட்சிக்கு மாற்று மருந்து

தமிழரைப் பீடித்த வியா தியையும் கூறி அவ்வியா திக்கு மாற்று மருந்தும் கூற அவர் தவறவில்லை. இந் நாட்டில் தமிழர்கள் பன் னெடுங்காலமாக வாழையடி வாழையாக வாழவேண்டு மானல் வருங்கால சந்ததி யினர்—எமது முன்னேர் ஈழத்தில் ஈடும் எடுப்புமின்றி சீரும் சிறப்பும் பொருந்த வாழ்ந்தார்கள் என்று எடுத்து இயம்பவேண்டுமா ளுல்—இன்றைய சந்ததியின ராகிய நாம் சமஷ்டி அரசி யல் அமைப்பை ஏற்படுத் திக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திஞர்.

சமஷ்டி என்றவுடன் ஒரு சில அரசியல்வாதிகள் தெரிந்தோ அல்லது தெரி யாமலோ நாட்டைத் துண் டாடுவதா! அது அறவே கூடாது என்ற குறை கூறு கின்றனர். சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடுவ தல்ல. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மதில் கட் டிப் பிரிந்து வாழ்வதுமல்ல. எந்த ஒரு நாட்டிலும் பெரும்பான்மை இனத்தைக் கண்டு சிறுபான்மையினம் அஞ்சுவது இயல்பு. காரணம் தங்களுடைய பாரம்பரிய பண்பாடுகளும் கலாச்சாரங் களும் பெரும்பான்மையின ரின் ஏதேச்சாதிகாரத்தால் அழிந்து புதையுண்டு போகக் கூடாது என்பதற்காகவே. "இந்நாட்டில் தமிழர்களும், சிங்களவர்களும் சகோதர உணர்ச்சியோடு வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் சமஷ்டி அரசியல் அமைப்பை விரும்புகிருேம்" என்று அவர் விளக்கி அதன் அடிப்படையில் செயல் ஆற் றினர்.

### குடியேற்றம்

யூ. என். பி. அரசாங்கம் திட்டமிட்டு தமிழ்ப் பிரே தேசங்களில் சிங்கள மக்க ளைக் குடியேற்றிய போதெல் லாம் வன்னியசிங்கம் அவர் கள் பலமாகக் கண்டித்தார். கூடிய அளவு அவரும் தமிழ் மக்களை அப்பகுதியில் குடி யேற்றுவதற்கு வேண்டிய பணிகளை அயராது செய்தி ருக்கிருர். அதற்கு உதாரண மாக கந்தளாய், பாவற் குளம், வவனிக்குளம் போன்ற பகுதிகளிலே அர சாங்கம் காணி வழங்குகின்ற காலத்தில் வன்னியசிங்கம் அவர்கள் நேரிடையாக அப்

**சில்லாம் பட்டி கண்ணன்**

பகுதிகளுக்குச் சென்று அப் பகுதி அரசாங்க அதிபர் களோடு தொடர்புகொண்டு —வாதாடி—கூடிய அளவு பகுதிகளைத் தமிழ் மக்களுக் குப் பெற்றுத் தந்திருப்பதை நாம் மறப்பதற்கோ அல்லது மறைப்பதற்கோ முடியாது. தமிழ்ப் பிரதேசங்களைப் பாதுகாத்த அமரர் அவர் கள் மொழி விடயத்தில் எந்த அளவு செயலில் காட் டினர் என்பதை ஆராய் வோம்.

சொல்வேறுசெயல்வேருக நடந்து வருகின்ற இன்றைய சமுதாயத்தில் வன்னியசிங் கம் அவர்கள் எதையும் திடீ ரென்று முடிவு செய்யமாட் டார். அதே நேரத்தில் செய்த முடிவை உயிரே போகின்ற நிலை உருவாஞ லும் மாற்றிக் கொள்ளமாட் டார். எல்லாம் தமிழில் செய்வோம் என்று ஆரம் பித்த அமரர் அவர்கள் தனது இறுதி மூச்சுவரை தனது சகல கடமைகளையும் தமிழிலேயே செய்ததோடு —மற்றவர்களையும் செய்யத் தூண்டினர்.

### தமிழர் ஐக்கியம்

யாழ்ப்பாணத் தமிழன், வவுனியாத் தமிழன், மன் ஞர்த் தமிழன், மட்டக்களப் புத் தமிழன், இந்தியத் தமி ழன், திருமலைத் தமிழன் என்று நெடுங்காலமாக ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே நாம் எல் லோரும் தமிழர்கள் என்ற உணர்வற்ற நிலையில் பிர தேச வெறி தாண்டவமா டிற்று.

இந்நிலையைக் கண்ட வன் னியசிங்கம் அவர்கள் தாங் கொணுத் துயர் அடைந் தார். இந்த நிலை தொட ர்ந்து நீடித்தால் தமிழ் இனத்தின் எதிர்கால வளர்ச்சி பாதிக்கப்பட்டு விடும் என்பதை உணர்ந் தார். அவர் யாழ்ப்பாணத் திலிருந்து வவுனியாவுக்கும், மன்ஞருக்கும், மட்டக்களப் புக்கும், திருகோணமலைக் கும், மலைநாட்டுப் பகுதிக் கும் விஜயம் செய்து தன்னை ஒரு இணைப்புப் பாலமாக்கிக் கொண்டு அப்பகுதி மக்க ளுக்கு ஏற்படுகின்ற நன்மை தீமைகளில் பங்கு பற்றிக் கொண்டு அப்பகுதி மக்க ளோடு, தானும் ஒருவஞகப் பழகி அவர்களிடத்திலுண் டான அறியாமையால் தலை விரித்தாடிய பிரதேச வெறியை அகற்றினர். நாம் எல்லோரும் தமிழர்கள் என்ற நிலையை ஒவ்வொருவ ரின் நெஞ்சத்திலும் அழுத்த மாக [illegible] மாவீரர் அவர்களையே சாரும்.

### சாதியும் அமரரும்

1947-ம் ஆண்டில் முதன் முதலாகக் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்ட வன்னியசிங்கம் அவர்கள் கையில் செம்பும் தண்ணியு மாக ஒவ்வொரு வீடு வீடா கச் சென்று தன்னை ஆதரிக் கும்படி கேட்டுக் கொண் டார். காரணம்? தமது வீட் டைத் தவிர வேறு இடங்க ளில் தாகசாந்தி செய்தால் குல ஆசாரம் கெட்டுவிடும் என்ற நம்பிக்கையில் திளைத் திருந்தமையே. அப்படிப் பட்ட வன்னியசிங்கம் அவர் கள் தான் 1947-ம் ஆண்டுக் குப் பிற்பட்ட காலத்தில் "சாதியென்ற பெயரில் ஒரு பகுதித் தமிழர்களை உயர் சாதியாகிய நாம் அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிருேம். அது பெரும் அநீதி. அவர் களும் நம்மைப்போல மனி தர்கள் தானே. அவர்களும் வாழப்பிறந்தவர்கள் தானே?" என்ற விஞக்களை மேடைகள் தோறும் எழுப் பத் தொடங்கினர்.

சாதி ஒழிய வேண்டும்— சாதி ஒழிய வேண்டும் என்று கூறித் தங்களை விளம்பரப் படுத்திக்கொண்டும், சாதி ஒழிப்புப் பிரச்சினையை வியாபார நோக்கமாக வைத்துக்கொண்டும் திரியும் தலைவர்கள் மலியும் இன் றைய சமுதாயத்தில் வன் னியசிங்கம் அவர்கள் மேடைப் பேச்சோடு நின்று விடாமல் செயலிலும் காட்ட முன்வந்தார்.

தாழ்த்தப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்கள் அன்போடு தந்த உணவை உட்கொண்டார். அதே போன்று அமரர் அவர்களும் சில தாழ்த்தப் பட்ட மக்களை இருதய சுத்தி யோடு தனது இல்லம் வர வழைத்து சமபந்தி போச னம் நடத்தினர். அத்தோடு சாதி ஒழிந்து விட்டதுஎன்று நினைத்து அமரர் அசந்துவிட வில்லை. பொது இடங்களி லும் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கு சம அந்தஸ்து வழங் கப்பட வேண்டும் என்ற தோடு ஒரு சில விடயங் களில் பங்குபற்றி வெற்றி யும் கண்டிருக்கிருர்.

அமரர் அவர்களின் இந் தப் போக்கைக் கண்ணுற்ற அவரின் உறவினர்களில் ஒரு சிலரும், சாதி ஒழிந்தால் நாங்கள் இனி வாழ முடி யாது என்ற குறுகிய மனத் துடன் மூடப் பழக்கத்திற்கு தங்களை இரையாக்கிக் கொண்ட ஒரு பகுதியினரும் வன்னியசிங்கத்தின் பக்கம் தங்கள் கோபத்தைக் கக்கி னர். ஆனல் வன்னியசிங் கம் அவர்கள் இந்த எதிர்ப் புக்களைக் கண்டு அஞ்சி ஒடுங்கி விடவில்லை. அதற் குப் பதிலாக அவர் புதிய தொரு தெம்போடு தீவிர மாக அப்பிரச்சினைகளில் ஈடுபட்டு மற்ற உயர் சாதி மக்களையும் தன் வழியைப் பின்பற்றும்படி வேண்டிக் கொண்டார்.

### தொழிலாளரும் வன்னியசிங்கமும்

தொழிலாளர் போராட் டங்களில் பெருமளவு பங்கு பற்றுகின்ற சந்தர்ப்பங்கள் கிடைக்காத போதிலும் கிடைத்த ஒரு சில சந்தர்ப் பங்களைப் பயன் படுத்த அவர் தவறவில்லை. உதார ணமாக 1953-ம் ஆண்டு இலங்கை முழுவதும் நடந்த அரிசி விலை குறைப்பு போராட்டத்தில் யாழ்ப் பாணப் பகுதியில் அமரரின் பங்கு குறிப்பிடத்தக்கது. அன்றைய ஹர்த்தாலின் போது யாழ்ப்பாண மார்க் கட்டுக்கு முன்பாக உள்ள ஒரு சில பலசரக்குகடைகளை உரிமையாளர்கள் மூட மறுக்கவே, கடைக்காரர் களுக்கும் பொதுமக்களுக் கும் சிறு தர்க்கம் ஏற்பட் டது. கடைக்காரர் பொலி சுக்குப் போன் செய்ததும் ஒரு ஜீப் நிறைய ஆயுதம் தாங்கிய பொலிசார் வந்து இறங்கி அணிவகுத்து நின்ற படியே பொதுமக்களைக் கலைந்து போகும்படி கேட்ட

(15-ம் பக்கம் பார்க்க)

# யாழ் மாநகர சபையில் எல்லாம் தமிழ்

(யாழ் நிருபர்)

யாழ்மாநகர சபையின் வேலைகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் என்ற தீர்மானங்கள் பல, மாநகர சபையால் நிறைவேற்றப் பட்டிருப்பினும், இதுகாறும் விடயங்கள் தமிழில் நடை பெறவில்லை. ஆனல் தமி ழரசு மேயர் டாக்டர். தர்ம லிங்கம் பதவிக்கு வந்தபின் எல்லாம் தமிழ் இயக்கம் நடைமுறைக்கு வருகிறது.

யாழ்மாநகரசபைச் சுகா தாரப் பகுதியே முதன் முத லாகத் தமிழில் இயங்கத் தொடங்கினர். தற்போது சகல பகுதிகளிலும் உள்ள ஆங்கிலப் பத்திரங்கள் முடியுந்தறுவாயிலுள்ள படியால் புதிய பத் திரங்கள் தயாராகின்றன. எல்லாப் பத்திரங்களும் தமி ழிலேயே இருக்கவேண்டு மென்று மேயர் டாக்டர் தர்மலிங்கம் உத்தரவிட்டுள் ளார். அவர் உத்தரவுக் கிணங்க பத்திரங்கள் தமிழி லேயே அச்சாகின்றன.

தமிழில் இயங்கவேண்டும், என்று பல வேளைகளில் தீர் மானங்கள் நிறைவேற்றி யிருந்தும் பத்திரங்கள் ஆங் கிலத்தில் மட்டுமே தயாரா னதைக் கண்டு திரு. பீட்டர் சோமசுந்தரம் அவர்கள் அதனைத்தடுக்குமுகமாக ஒரு தீர்மானம் கொண்டு வந் ததை மக்கள் அறிவர். ஆங் கிலத்தில் பத்திரங்கள் வெளி யாஞல்மாநகரசபையின் தீர் மானத்திற்கு எதிராக உத் தரவு கொடுத்தவர் அந்தப் பத்திரங்களின் செலவைப் பொறுக்க வேண்டும் என்று அத்தீர்மானத்தில் குறிப் பிட்டிருந்தது. இப்படியாக யாழ் மாநகரசபையின்



யாழ் நகரசபை மேயர் டாக்டர் தருமலிங்கம்

வேலைகள் யாவும் தமிழி லேயே நடைபெறத் தொடங்குவது — மகிழ்ச்சி கரயான செய்தி. சில காலத் திற்குமுன் கட்டிட விண்ணப் பப் படிவங்களை முதன் முத லில் தமிழில் அச்சிட்டு உப யோகித்து எல்லாம் தமிழ் இயக்கத்தை ஊக்குவித்தவர் ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் திரு. இமனு வேல் அவர்கள். தமிழர சுக்கட்சிப் பிரமுகரான இவர் ஒரு செயல் வீரன் என் பதை ஊர்காவற்றுறை அறிந்துள்ளது. அப்பட்டின சபையின் அலுவல்கள் அதிக மாகத் தமிழிலேயே நடை பெறுகின்றன.

இப்படியாக மற்றய ஊர் ஆட்சி மன்றங்களும் தமிழி லேயே இயங்கி, தமிழ்ப் பகு திகளின் சகல ஊர் ஆட்சி நிர்வாகங்களும் தமிழி லேயே நடைபெறும் காலம் வெகு தொலைவில் இல்லை.


சிறந்தது சிக்கனமானது சிந்தனையூட்டுவது

யானை பீடி

ஸ்பெஷல்




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெ ஷல் புகைப்போருக்குபுத்துணர்ச் சியையும் உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. தொழிலாளிகளும், சிரமசாலி களும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையேபுகைக்கிருர்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

CFA.EBC.2

யானை பீடி கம்பெனி

62, மெசெஞ்சர் வீதி கொழும்பு. தொ.பே. 7651


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 செப்டெம்பர் மாதம் 16-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 11o3

# அமரர் வன்னியசிங்கத்தின் அடிச்சுவட்டிலே!

கோப்பாய்க் கோமான்— மாபெரும் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்தி மூன்றுண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனல் அவரைப் பற்றிய நினைவு மக்கள் உள்ளங்களிலே இன்னும் பசுமையாகவே இருக்கிறது.

அமரத்துவமடைந்த நமது அருமைத் தலைவர் வன்னியசிங்கம் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

வன்னியனர் துணிவுமிகுந்தவர், அரசியல் மேதை, ராஜதந்திரர். ஆயினும் ராஜிய தந்திரத்தை விட ராஜிய தர்மத்தில் நம்பிக்கை கொண்டவர். தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு பங்கம் வந்த போதெல்லாம் சிங்கம் போல் சீறியெழுந்து உரிமை காத்தவர்.

தமிழ் பேசும் இனத்தின் விடுதலையே அவரது இலட்சியம். அதற்காகவே அல்லும் பகலும் அயராது உழைத்தார். எதைச் செய்தாலும் இனத்தின் நலத்தைக் கருதியே செய்தார். உரிமை காக்க ஓய்வின்றி உழைத்தார். உடல் நலனையும் கருதாது தொண்டு செய்தார். அதன் விளைவாகவே அகாலத்தில் இறைவனடி சேரும் நிலை ஏற்பட்டது.

அமரர் வன்னியசிங்கம் ஒரு சிறந்த பாராளுமன்றவாதி, அரசியற் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்த தர்க்கவாதி, நேர்மையாளர், என்றெல்லாம் சிங்களத் தலைவர்களேபாராட்டுகின்றனர்.

பாராளுமன்றத்திலோ, பொதுக் கூட்டங்களிலோ ஆணித்தரமாகப் பேசும் ஆற்றல் மிகுந்தவர் தியாகி வன்னியசிங்கம்.

கேள்விகள் கேட்டு வன்னியனரை மடக்க முயற்சி செய்தவர்களும் உண்டு. அவர் பதிலைக் கேட்டதும் அவர்கள் வெட்கித் தலை குனிந்தனர். அல்லது வெருண்டோடினர். கேள்விகளுக்குச் சுடச்சுட விடையளிப்பார். அவரது விடைகளிலே விளக்கம் நிறைந்திருக்கும். ஹாஸ்யம் பொதிந்திருக்கும். கருத்து செறிந்து கிடக்கும்.

அமரர் வன்னியசிங்கம் சிங்களக் குடியேற்றத்தை வீராவேசமாக எதிர்த்தார். அத்துறையில் அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது.

கிழக்கு மாகாணத்தில் பொறவேவத் திட்டத்தை முதலிக்குளத் திட்டமாக மாற்றியவர் மறைந்த மாவீரர் வன்னியனர்தான். அதனை முழுக்க முழுக்க தமிழர் குடியேற்றத் திட்டமாக அமைக்கக் காரணமாயிருந்தவரும் அவரே.

தாய் மொழியின் உயர்வுக்காகத் தளராது பாடுபட்டார். மொழியுரிமைக்காக இறுதிவரை போராடினர். 'சிறி' எதிர்ப்புப் போராட்டத்திலே முன்னணி தாங்கினர். சிறைவாசமும் அனுபவித்தார்.

தமிழ் அவர் தம் மூச்சு—அவர் "எல்லாம் தமிழ்" இயக்கத்தின் முன்னேடி. தனது அலுவல்கள் அனைத்தையும் தமிழிலே நடத்தினர். பிறருக்கு ஆதர்சமாகவும் விளங்கினர்.

மலைநாட்டுத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்க அவர் பட்டபாடு கொஞ்சமன்று. அவர்கள் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத் தீவிர முயற்சிகளைச் செய்தார்.

மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமைக்காக மட்டுமா அவர் போராடினர்? தோட்டக் குழந்தைகளின் கல்வியிலும் அவர் சிரத்தை காட்டினர். வட, கீழ் மாகாணக் கல்லூரிகளில் தோட்டக் குழந்தைகள் இலவசக் கல்வி பயில ஏற்பாடு செய்து கொடுத்த பெருந்தகை நம் தலைவரே.

சமஷ்டி அரசியல் முறைதான் விமோசனத்துக்கு வழியெனக் கண்டார் வன்னியனர். தமிழ் பேசும் இனம் விடுதலை பெற்று, தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ சமஷ்டி ஆட்சி முறை வேண்டும் என முழங்கினர். இந்த இலட்சியத்தைப் பெற தமிழரசுத் தந்தையுடன் சேர்ந்து விடுதலை இயக்கமொன்றையும் தோற்றுவித்தார். அந்த இயக்கம்—தமிழரசுக் கட்சி—இன்று இமயம் போல் வளர்ந்துள்ளது.

தமிழர் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வை நீக்க இரவு பகலாக உழைத்தவர் நம் சீர்திருத்தச் செம்மல். அவர் வைதீகக் குடும்பத்தில் பிறந்தவர்தான். ஆனல் தீண்டாமை அவரது பரம வைரி. தீண்டாமையை ஒழித்து, சமத்துவத்தை நிலைநாட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டார். இத்துறையில் அவரது பேச்சுக்களும் நடவடிக்கைகளும் உயர் சாதி என்போரையும் கூடச் சிந்திக்கத் தூண்டின.

தமிழ் பேசும் மக்களும், தமிழரசுக் கட்சியும் கடந்த மூன்றுண்டுகளாக அவர் புகழைப் பாடிப் பெருமையடைவதில் மட்டும் நின்றுவிடவில்லை. அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் வகுத்த இலட்சியப் பாதையிலே வேகமாக முன்னேறுகிறார்கள். அவர் தொடங்கிய புனித சேவையைத் தொடர்ந்து நிறைவேற்றுகிறார்கள் அதற்காக எத்தகைய தியாகமும் செய்யத் தயாராகி விட்டார்கள். மலையகத் தமிழர்களும் தமிழரசுக் கொடியின் கீழ் திரளுகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது மறைந்த நம் அரசியல் மேதையின் இலட்சியம் நிறைவேறும் நாள் அண்மிவிட்டதென்றே கூறலாம்.

# தமிழ் பேசும் இனம் ஒன்று சேருவதை தடுக்கும் முயற்சி

## பிரதம மந்திரி தமிழரசுக் கட்சியை மிரட்டியதேன்?

**மலைநாட்டில் தமிழரசுக் கிளை அமைக்கப்படுமென்ற செய்தியைக் கேட்டதும் ஆளும் வர்க்கம் அலறத் தொடங்கிவிட்டது. பிரதமரும், உணவு அமைச்சரும் இது சம்பந்தமாகக் கட்சியை மிரட்டியிருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன?**

"தமிழரசுக் கட்சி தன் நடவடிக்கைகளை மலைநாட்டுக்கு விஸ்தரிக்கக் கூடாது. தமிழரசுக் கட்சி மலைநாட்டில் கிளைகளை அமைத்தால் அக்கட்சிக்குத் தொல்லைகள் ஏற்படுமென்று திரு. செல்வநாயகத்துக்குக் கூற விரும்புகிறேன். தோட்டங்களில் தொழிலாளர் விவகாரங்களில் கை வைக்க வேண்டாமென்று தமிழரசுக் கட்சியை எச்சரிக்கிறேன். மலைநாட்டில் தங்களின் செல்வாக்கை நிலைநிறுத்த முயன்றால் அதன் பயனைத் திரு. செல்வநாயகம் அனுபவிக்க நேரிடும். அவர்கள் தங்கள் கட்சி நடவடிக்கைகளை வட, கீழ் மாகாணங்களில் மட்டும் வைத்துக் கொள்ளட்டும். மலைநாட்டு மக்களை எவ்வகையிலும் ஏமாற்ற முடியாது. தூரதிருஷ்டியற்ற முறையில் மலைநாட்டு மக்களை ஏமாற்ற முயன்றால், திரு செல்வநாயகம் உட்பட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்".

இவ்வாறு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்டியில் அவரது சுதந்திரக் கட்சித் தொழிற்சங்கக் கிளையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

தமிழரசுக் கட்சி தன் கட்சிக் கிளைகளை மலைநாட்டில் நிறுவவேண்டுமானல் தன் போன்றவர்களின் பிரேதங்களின் மேலால் சென்றுதான் நிறுவவேண்டுமென்று பர்த்தது, உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின அதே கூட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

### உட்கருத்தென்ன ?

நாட்டின் பிரதமரும், முக்கிய அமைச்சர்களில் ஒருவரும் இம்மாதிரி கடுமையான பதங்களை உபயோகித்து தமிழரசுக் கட்சியை எச்சரிப்பதேன்? அதன் உட்கருத்தென்ன? தமிழரசுக் கட்சியின் கிளைகளை மலைநாட்டில் அமைக்க முன்பே அவர்கள் ஏன் இப்படி பதறுகிறார்கள்? பிரதமர் குறிப்பிடும் 'தொல்லைகள்," "பாரதூரமான விளைகள்" என்பவையாவை? என்று அரசியல் வட்டாரங்களில் மட்டுமன்றி தொழிலாளர் வட்டாரங்களிலும் கேட்கப்படுகிறது.

இது சம்பந்தமாக நாம் சாங்கோபாங்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது இச்சமயத்தில் சாலவும் பொருந்தும்.

### இனத்தின் முதுகெலும்பை முறித்தார்

மலைநாட்டுத் தமிழ் மக்கள் சுமார் 10 லட்சம் பேர்களுக்கு அன்று பிரஜாவுரிமையும் இருந்தது. வாக்குரிமையும் இருந்தது இன்று அவர்கள் அந்த உரிமைகள் இரண்டையும் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கிறார்கள்.

அன்று இந்நாட்டுப் பிரஜைகளாக இருந்தார்கள். இன்று நாடற்றவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கையின் முதலாவது சுதந்திர அரசாங்கம் திரு. டி. எஸ். சேனநாயக்க அரசாங்கம் அந்த உரிமைகளைப் பறித்துவிட்டது ஏன்?

தமிழ் பேசும் இனத்தின் சரி பாதித் தொகையினரான மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்துவிட்டால், இலங்கையில் தமிழ் பேசும் இனத்தின் முதுகெலும்பு முறிந்துவிடும் என்பதைத் தூரதிருஷ்டியுள்ள திரு. சேனநாயக்கா உணர்ந்திருந்தார். அதன்படி சரி பாதித் தமிழர்களை அவர் அரசியல் அனதைகளாக்கி விட்டார்.

திரு. சேனநாயக்காவின் இந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் தமிழரசுக் கட்சி அன்று முதல் இன்றும் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

### 14 ஆண்டுகளாக என்ன செய்தன ?

இவ்வாறு மலைநாட்டு மக்கள் ஏறத்தாழ 14 ஆண்டுகளாக குடியுரிமை வாக்குரிமையற்றுத் தவிக்கிறார்கள். இதற்கிடையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, யூ என். பி., சுதந்திரக் கட்சி முதலிய கட்சிகள் மலைநாட்டுத் தோட்டத் தமிழரிடையே தங்களின் கொள்கைகளைப் பிரசாரம் செய்தன; செய்கின்றன. தத்தம் கட்சிக் கிளைகளையும் அமைத்தன. இக்கட்சிகள் ஒவ்வொன்றும் மலைநாட்டுத் தமிழர்களுக்குத் தாங்கள்தான் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளுகின்றன. யூ என். பி.யும் சுதந்திரக் கட்சியும் உரிமைகளைப் பறித்து தமிழ் பேசும் இனத்தை அழிப்பதற்காக முயற்சி செய்யும் கட்சிகள். அவ்விரு கட்சிகளும் மலையகத் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்க முடியுமேயன்றி, உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது.

இதர கட்சிகளோ கடந்த 14 ஆண்டுகளாக இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க என்ன செய்திருக்கின்றன என்று தோட்டத் தமிழன் இன்று கேட்கத் தொடங்கி விட்டான்.

### கடமையில் தவறிவிட்டன

தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை உழைத்துக் கொடுப்பவர்கள். அவர்கள் நினைத்தால் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை ஸ்தம்பிக்கச் செய்ய முடியும். எந்த அரசாங்கத்தையும் கவிழ்த்துவிட முடியும். அவர்கள் கையைக் கட்டிக் கொண்டு ஆடாமல் அசையாமல் நின்றாலே போதுமானது அரசாங்கமென்ன நாடு முழுவதுமே அவர்கள் காலடியில் வந்து விழும்.

அத்தகைய ஈடு இணையற்ற மகத்தான சக்தி வாய்ந்தவர்கள்தான் மலைநாட்டுத் தமிழர்கள். ஆனல் அவர்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம் என்று பறை சாற்றும் எந்தக் கட்சியும் அந்த மகத்தான சக்தியை உரிமைகளைப்பெறுவதற்காக இதுவரை பயன்படுத்திக்கொள்ளவில்லை. அந்தச் சக்திக்கு அவர்களே பயப்படுவது தான் அதற்குக் காரணம்.

எந்தக் கட்சியும் பிரஜாவுரிமைக்காகவோ, வாக்குரிமைக்காகவோ மலைநாட்டில் இதுவரை எந்த வெகுஜனப் போராட்டத்தையும் நடத்தியதில்லை.

உரிமைகளைக்கோரி அடையாளபூர்வமாக ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் கூடச் செய்யவில்லை.

இதர பல்வேறு காரணங்களுக்காகப் பொது வேலை நிறுத்தக் கருவியைப் பிரயோகித்த கட்சிகள், இந்த உரிமைகளுக்காக அதனை உபயோகிக்கத் தவறிவிட்டன, இல்லையேல் இழந்த உரிமைகளை அவர்கள் மீண்டும் பெற்றிருக்கலாம்.

14 ஆண்டுகளாகச் செய்ய முடியாத ஒரு காரியத்தை இந்தக் கட்சிகள் இனிமேல் செய்யுமென்று நம்ப மறுக்கின்றனர் தோட்டத் தமிழர்கள். தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இந்தக் கட்சிகளின் தலைமைகள் பயன்படலாம். ஆனல் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பெற்றுக்கொடுக்க தலைமைகள் பயன்படா என்று தோட்டத் தமிழர்கள் கூறுகின்றனர். 14 வருட அனுபவத்தைக் கொண்டே அவர்கள் அம்மாதிரிக் கூறுகின்றனர்.

### சரியான தலைமை தேவை

ஆகவே தங்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய, துணிச்சல் மிகுந்த, தியாகங்கள் செய்ய அஞ்சாத நேர்மையான ஒரு கட்சி—ஒரு தலைமை தோட்டத் தமிழர்களுக்கு இன்று அவசரமாக—அவசியமாகத் தேவைப்படுகிறது.

ஆகவே மலைநாட்டுத் தமிழர்கள் இழந்த உரிமைகளைப் பெற தமிழரசுக் கட்சியின் உதவியை நாடுகின்றனர். தமிழரசு இயக்கமே தங்களுக்கு விமோசனமளிக்கக் கூடியது என்பதை அவர்கள் படிப்படியாக உணர்ந்துவருகிறார்கள்.

மலைநாட்டுத் தமிழர்களின் வேண்டுகோளின் மீது ஒரு நெருக்கடியான கட்டத்தில் அவர்களுக்குக் கை கொடுத்துதவவே மலையகத்தில் கட்சி தன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கத் தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானந்தான் சிங்கள வகுப்புவாதத் தலைவர்களைக் கதிகலங்கச் செய்திருக்கிறது.

### பிரித்துவைத்த நரித் தந்திரம்

திரு. டி.எஸ்.சேனநாயக்கா காலத்திலிருந்து இன்று வரை ஆட்சியாளர்களின் முயற்சி வட, கீழ் மாகாணத் தமிழ் பேசும் மக்களிடமிருந்து மலைநாட்டு மக்களைப் பிரித்து வைப்பதுதான்.

அவ்வாறு பிரித்து வைத்தால்தான் உரிமைகளைப் பறித்து அவர்களை என்றென்றும் அடிமைகளாக வைத்திருக்க முடியும். அந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது மன்னர் மகாநாட்டுத் தீர்மானம்.

மலைநாட்டிலும் தமிழரசுக் கட்சி கிளைகள் நிறுவப்பட்டால், தமிழ் பேசும் இனம் ஒரே அணியிற் திரண்டு ஒன்றுபட்டு விட்டால் அவர்களின் உரிமைகளை வழங்குவதைத் தவிர வேறு வழி ஏது?

இரு பகுதி தமிழ் பேசும் மக்களும் ஒன்றுபடுவதை எப்படியும் தடுத்தாக வேண்டுமென்று ஆட்சியாளர் எண்ணுகின்றனர். ஆகையால்தான் தமிழரசுக் கட்சியினர் மலைநாட்டுக்கு வருவ

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் படியோம்! உழுதுண்டு வாழ்வோம்

## தலைவர்களும் கமம் செய்கிறார்கள்

### அரசாங்க காணிக்கு விண்ணப்பங்கள்

**தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் முதலீடு செய்ய வேண்டும் என்று மன்னார் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானப் பிரகாரம் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் பலர் அரசாங்கக் காணிக்காக மனுச் செய்துள்ளார்கள்.**

**தெற்குப் பகுதிகளில் தங்கள் முதலீடுகளை வைத்திருப்போரும், சிங்களம் படிக்காவிட்டால் உத்தியோகமில்லை என்போரும் இது கேட்டு உடனடியாகக் காணிக்கு மனுச் செய்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.**

திரு. செல்வநாயகம், மூண்டு முறிப்புப் பகுதியிலும், திரு. துரைரத்தினம் ஒழு மடு பகுதியிலும், திரு. அமிர்தலிங்கம் தருமபுரத்திலும், திரு. சிவசுந்தரம் கிளிநொச்சியிலும் கமம் செய்ய முயற்சி எடுத்துள்ளனர்.

அரசாங்கம் நெற்செய்கையை நாடெங்கிலும் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்க காணிகளை வழங்கி வருகிறது. ஆனால் இச்சலுகையைப் பலகாலமாகத் தமிழ் மக்கள் அதிகம் உபயோகிக்கவில்லை. ஆனால் இப்போது மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் பெருகுகின்றன. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிலங்களை நாமே எடுத்து பயிர்செய்து வாழ்வோம், நாட்டையும் பாதுகாப்போம், மானத்தைப் பறிகொடுத்து சிங்களம் படித்து உத்தியோகம் செய்யோம், என்று ஆயிரத்திற்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் காணிக்காக விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

ஒரு ஏக்கர் காடு அழிக்க 100—200 ரூபாவரை செலவாகும். எனவே முதல் போகத்திற்கு 2500 ரூபா முதலுடன் பலர் வேளாண்மையில் இறங்கியுள்ளனர்.

விளைச்சலோ முதல்ப்போகத்தில் அதிகம்: ஏக்கருக்கு 50 புசல் வரை வரலாம். இதனால் 6000 ரூபா வரை ஊதியமுண்டு. எனவே நெற்சாகுபடிமூலம் எழுது வினைஞரின் சம்பளத்தைவிட அதிகம் பெறமுடியும் என்று அவர்கள் கண்டு அதனையே தங்கள் தொழிலாகவும் கொண்டுள்ளார்கள். இந்த தகவல்கள் பரவப் பரவ பலர் 'உழுதுண்டுவாழ' முடிவு செய்துள்ளார்கள். கூட்டம் கூட்டமாகத் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேறுகின்றார்கள்.

## வன்னியசிங்கம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய் மொழியையே சரியாக எழுதத் தெரியாவிட்டால், இவருக்கு ஏன் எதிர்காலம்". நிகழ்காலமே தாண்டவமாடுகிறது என்ற அர்த்தத்தில் வன்னியர் கூறிய விடையைக் கேட்டதும், கூட்டத்தில் ஒரே கரகோஷம். இளைஞர் மறைந்தார்.

1958-ம் ஆண்டுக் கலவரத்திற்குப் பின்னர், சுண்டுக்குளியில் அண்ணலின் வீட்டுச் சுவர்மீது யாரோ கயவர்கள் 'தமிழ்த் துரோகி' எனக் கொட்டை எழுத்துக்களில் செங்கட்டியினால் எழுதியிருந்தார்கள். அமரரும் அதனை அழிக்கவில்லை, அப்படியே விட்டுவிட்டார். மடியிற் கனமிருந்தாற்றானே வழியிற் பயம்? இது பற்றி யாழ். முற்றவெளி மைதானத்தில் நடை பெற்ற கூட்டத்தில் கேட்கப்பட்ட போது, வன்னியனார் பின்வருமாறு கரகோஷத்துக்கிடையே கூறினார்கள்.

"நான் வீட்டில் இல்லாத நேரம் இரவு 12 மணிக்கு என் வீட்டிற்கு ஓர் விசிட்டர் (விருந்தாளி) வந்தார்; தன்னை அறிமுகப்படுத்துமுகமாக—வந்தது யார் எனக் குறித்து ஓர் 'விசிட்டிங் கார்ட்டை, (Visiting Card) என் வீட்டுச் சுவரிலே விட்டுப் போயிருக்கிறார். வந்தவர் மிஸ்டர் தமிழ் துரோகி அவர்கள்".

திரு. பொன்னம்பலத்தின் 'வட்ட மேஜை' திட்டம் பற்றிக் கண்டித்துப் பேசிக் கொண்டிருக்கிறார் அண்ணல் யாழ்-புற்ற வெளியில். கூட்டத்திலிருந்து ஒரு குரல் "அவர் பேரெடுக்கப் பார்க்கிறார்" என்றது. "ஆமாம், இப்ப சில்லெடுக்கிறார்" என்றார் வன்னியர். கரகோஷத்துக்குக் கேட்க வேண்டுமா?

1956-ம் ஆண்டு, அச்செழுவில் எனக் கருதுகின்றேன்-அண்ணல் பேசிக் கொண்டிருக்கும்போது அன்னாரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. அருளம்பலத்தின் ஏவற்படை, கூட்டத்தை நோக்கிக் கற்களை வீசிக்கொண்டிருந்தது. கூட்டம் சிதறியோட மறுத்துவிட்டது.

வன்னியர் வழக்கமான புன்முறுவலுடன் கூறினார், "நண்பர் அருளம்பலம் மன்னிக்க வேண்டும். இங்கு கூடியிருப்பது ஒரு கூட்டம் காகங்களல்ல, கல்லெறிந்தவுடன் பறப்பதற்கு" என்றதும், கல்லெறிந்தோரைக் காணோம், கரகோஷம் பொழிந்தது.

இறுதியாக, தேனார் தமிழும் இத்தீவார் தமிழினமும் விடுதலைபெற வேண்டித் தன் வாழ்வையே அர்ப்பணித்தானே அமரன். நாமென்ன கைமாறு செய்வோம். கைமாறு வேண்டாம், கடப்பாடு முடிந்ததா? செந்தமிழர் சரித்திரத்தின் கதாநாயகன் நந்தமிழர் நாயகத்தின் நந்தாவிளக்கு — அவனுக்கு நினைவுச் சின்னம் அமைக்க யாழ் நகரசபையில் தீர்மானம் போட்டோமே? இடமும் ஒதுக்கப்பட்டிருக்கிறதே. ஏன் முடிக்கக் கூடாது அந்தப் பணியை? இந்த மூன்றாண்டுகட்குப் பின்னாவது முயல்வோமா? மூன்வாரீர் தமிழர்காள்.

## வீரகேசரியின் விஷமத்தனம்

### செய்திகள் திரிக்கப்படுவதேன்?

**தமிழரசுக் கட்சியின் செய்திகளைத் திரித்தும் மழுப்பியும் கூறும் செயலை 'வீரகேசரி' மேற்கொண்டுள்ளதை தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து வருகிறார்கள். சென்ற வாரம் நடந்த மாநாட்டில் திரு. இராஜதுரை சம்பந்தமான ஒரு செய்தியை ஒரு குறிக்கோளுடன் இப் பத்திரிகையில் கடமையாற்றும் ஒரு சிலர் திரித்துள்ளனர். இவ்விதம் பத்திரிகை, உண்மைகளைத் திரித்துக் கூறி வருமானால் அது மீண்டும் சிறப்பிலும், மதிப்பிலும், வாசகர் தொகையிலும் மற்றெல்லா விதத்திலும் முன்னணிக்கு வரவே முடியாது.**

சென்ற ஞாயிறு பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் திரு. ராஜதுரை பதவியை மறுத்தது ஏன்? என்று தலையங்கம் போடப்பட்டிருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த செய்தியில் திரு. ராஜதுரையின் பெயர் பொதுக் காரியதரிசிப் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டது என்றும் அதை அவர் ஏற்க மறுத்தார் என்றும் பிழையான செய்தி கூறப்பட்டது. தலைப்பில் "ஏன் மறுத்தார்" என்று போடப்பட்டிருந்தும் கீழே தொடர்ந்த செய்தியில் அதற்கு ஒருவித மறுமொழியும் வராததால் வேண்டுமென்றே இந்தத் திரிப்பு நடைபெற்றுள்ளது என்பது தெளிவு.

உதவிச் செயலாளர் பதவிக்கு முதலில் மூன்றுபெயர்களும், அடுத்து திரு. ராஜதுரையின் பெயரும், பின்னர் வேறு மூன்று பெயர்களும் எல்லாமாக 7 பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. திரு. இராஜதுரையைக் கேட்காமலே அவரது பெயர் பிரேரிக்கப்பட்டிருந்ததால் திரு. இராஜதுரை மேடை ஏறி "எனது பெயரை யாரோ ஏதோ பதவிக்குப் பிரேரித்தனர்" என்று தான் தன் பெயரை வாபஸ் பெறுவதாகவும் கூறிக்கொண்டார். தனக்குத் தெரியாமலே யாரோ ஒருவரால் பெயர் பிரேரிக்கப்பட்ட போது பதவி ஆசை அற்றவரான திரு. இராஜதுரை வாபஸ் வாங்கியது விளக்கப்பட வேண்டியதொன்றல்ல.

பத்திரிகையில் இந்தத் திரிப்பு வெளியாகியதும் மாநாட்டில் கூடியிருந்த மக்கள்—நிகழ்ச்சிகளை அவதானித்தவர்கள் 'வீரகேசரி' நிருபர்களைக் கண்டு காரசாரமாகக் கண்டித்தபோது, அவர்கள் தாங்கள் அப்படியாகச் செய்தி கொடுக்கவில்லை என்று கூறினர். பின்னர் பத்திரிகைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது அவர்கள் உப காரியதரிசி என்று கூறியதில் உப என்ற பகுதி கேட்கவில்லை என்று மழுப்பினார்கள். உப காரியதரிசிகளாக 7 பெயர்கள் கூறப்பட்டன. ஆனால் வீரகேசரியினருக்கு அந்த ஏழு பெயர்களில் நடுவில் கூறப்பட்ட பெயரைப் பொறுத்தமட்டில் உப என்ற பகுதி கேட்கவில்லையாம். நம்ப முடியுமா இதனை?

மாநாட்டில் தலைவர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் இதனை விளக்கி மறுப்பு விடுத்தார். ஆனால் அம் மறுப்போ அல்லது மன்னிப்போ இதுகாறும் வெளிவரவில்லை. அந்த மறுப்பும் அவர்களுக்குக் கேட்கவில்லை போலும்.

இப் பத்திரிகையின் இப் புதிய போக்கிற்குக் காரணங்களை மக்கள் அறிவர். காலம் ஏற்படும்போது அதனை விளக்குவோம். பத்திரிகையின் ... [illegible] ... வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

## தமிழ் பேசும் இனம்........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தடுக்க முயற்சி செய்கின்றனர். "வட, கீழ் மாகாணங்களில் மட்டும் உங்கள் கட்சியை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறுவதின் உள் நோக்கம் மலைநாட்டுத் தமிழர்களை வட, கீழ் மாகாணத் தமிழ் பேசும் மக்களுடன் கைகோத்துக்கொள்வதைத் தடுக்கவேயாகும்.

### அடக்கு முறையா? காடையரை ஏவவா?

தமிழரசுக் கட்சி மலைநாட்டில் அமைக்கத் தொடங்கி விட்டால், தோட்டத் தமிழர்கள் இலட்ச இலட்சமாக வந்து கட்சியில் கூடி விடுவார்களென்பதும் ஆட்சியாளர்களுக்குத் தெரியும். ஆகையால்தான் தமிழரசுக் கட்சியை மிரட்டிப்பார்க்கிறார்கள்.

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது. தியாகத் தீயிலே புடம் போட்டு எடுத்த தமிழரசுக் கட்சி அடக்கு முறைகளுக்கு அஞ்சி தமிழ் பேசும் மக்களை விட்டோடிவிடுமென்று பிரதமர் எதிர்பார்க்கிறாரா?

'மலைநாட்டுக்கு வராதீர்கள்—தொலைத்துவிடுவோம்' என்ற பயமுறுத்தலுக்கு அஞ்சி கட்சித் தலைவர்கள் பதுங்கிவிடுவார்களென்று பிரதமர் தவறாக எண்ணுகிறார்.

வட, கிழ் மாகாண மக்களையும் மலையக மக்களையும் இணைக்கும் பாலம்தான் தமிழரசுக் கட்சி என்பதையும், இந்த பாலத்தை அமைக்காவிட்டால், பிரஜாவுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை முதலிய எல்லா உரிமைகளையும் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதை ஆட்சியாளர் உணர்ந்திருக்கின்றனர்.

ஆகையால்தான் மலைநாட்டுக்குத் தமிழரசார் தங்கள் பிரேதத்தின் மீது தான் செல்ல வேண்டுமென்று வர்த்தக மந்திரி கூறுகிறார்.

வேறு வார்த்தைகளில் கூறின் தாங்கள் உயிரிழந்தாலும் தமிழரசுக் கட்சியை மலைநாட்டில் அனுமதிக்கப் போவதுமில்லை — தமிழ்பேசும் இனத்தை ஒன்றுசேர இடமளிக்கப்போவதுமில்லை அவர்களின் உரிமைகளை வழங்கப் போவதுமில்லையென்பதே அவரது மிரட்டலின் உட்கருத்தாகும். அவர்கள் அன்றுமுதல் இன்றுவரை இதைத்தான் கூறிக்கொண்டிருக்கிறார்கள். எந்தமிரட்டலாலும் கட்சியின் முயற்சிகளைத் தடுத்து விடமுடியாது.

பிரதமரின் எச்சரிக்கைக்கும் வர்த்தக அமைச்சரின் மிரட்டலுக்கும் டாக்டர் நாகநாதனும், திரு. இராஜவரோதயமும் ஆணித்தரமாகப் பதில் அளித்து விட்டார்கள்.

இனிமேல், தமிழ் பேசும் இனம் ஒன்றுபடுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது என்பதைச் சிங்கள வகுப்புவாதிகள் உணர்ந்து கொள்வது நன்று.

## வன்னியசிங்கம் நினைவு விழா

**இடம்**
**விவேகானந்த சபை மண்டபம்**

நாள்—17-9-62 திங்கட்கிழமை
நேரம்—மாலை 5-30 மணி

பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பலர் பேசுவர்.

## வன்னி......


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்னதயும், அதில் செய்யவிருக்கும் அபிவிருத்தித் திட்டத்தையும் தமது விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும்.

முழு விபரங்களையும் இலங்கை அரசாங்க வர்த்தமானி ஆகஸ்ட் 24-ந் திகதி இதழில், மூன்றும் பிரிவு—காணிகள் பிரிவின் கீழ் பார்க்கலாம். தமிழில் 519—521 பக்கங்களிலும், ஆங்கிலத்தில் வர்த்தமானியின் கடைசிப் பக்கங்களான 462-465 பக்கங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி மூன்று பகுதிகள் உடையது. காணிப் பகுதி வர்த்தமானியின் கடைசிப் பகுதியாகிய 3-ம் பகுதியாகும். எனவே கவனித்துக் காணிப் பகுதியைக் கண்டு அதன் முடிவில் காணி வழங்கும் அறிவித்தல்களைக் கவனிக்க வேண்டும்.

மேலும்விளக்கம் தேவைப்படின் 16, அல்பிரட் ஹவுஸ் கார்டின் கொள்ளுப்பிட்டியிலுள்ள தமிழரசுக் கட்சி நிர்வாகக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்காரம் (நவம்)

"கிரீச்..."

"வீல்...!"

உலகிலுள்ள கோடிக்கணக்கான உயிர்களில் ஒன்று, இந்த உலக பந்தங்களிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டது!

அடிபட்ட நாயைத் தூக்கி எறிவதுபோல், அந்த உயிரற்ற மனிதச் சடலத்தை இழுத்து எறிந்துவிட்டு அந்த ராணுவ ஜீப், மேலே தன் பயணத்தை மேற்கொண்டது.

அதன் உறுமலும், சீற்றலும் இதயமற்ற அரக்கனை நினைவுறுத்திற்று.

விலை மதிப்பற்ற ஒரு மனித உயிரை, மின் வெட்டு நேரத்தில் குதறி எறிந்து விட்டு, தன்பாட்டில் அந்த ஜீப் ராஜ கெம்பீரத்தோடு ஓடிக் கொண்டிருந்தது.

இத்தனைக்கும், எமனின் மறு அவதாரமான அந்த ஜீப்பில் இருந்தவர்கள் அத்தனை பேரும் மனிதர்கள் தாம்!

சட்டத்தின் பிரதிநிதிகளான—'கடமை'யின் காவலர்களான—அந்த மனிதக் கும்பலில் ஒருவனுக இருந்த கோபாலின் மன உலையில் நகச் சூடு பிடித்தது.

ஜீப் முன்னேறியது.

அதோ வீதியில் ஒரு வளவு. அந்த வளவில் தன்னந்தனியே ஓர் ஓலைக் குடிசை. அந்த இடத்தில் வந்து நின்றது ராணுவ ஜீப்.

ஜீப்பிலிருந்து 'தட தட' என்று துள்ளிக் குதித்தனர் ராணுவ வீரர்கள்.

"சேரம புச்சாப்பாங்கோ!"

கட்டளை பறந்தது தனிச் சிங்களத்தில்.

வாரைச் சேஷ்டையை ஆரம்பித்தனர் ராணுவ வீரர்கள்.

யாருக்கும், எந்தத் தீங்கும் நினைக்காத அந்த ஓலைக் குடிசையை, நெருப்பின் நா தழுவியது!

ஓலைக் குடிசையை மட்டும் தானு தீயின் நாக்குத் தழுவியது?

அதோ ஜீப்பினுள்ளே, ராணுவ வீரர்களோடு ராணுவ வீரனுய்க் குமைந்த உள்ளத் தோடு-நகச் சூடேறிய நெஞ்சோடு இருக்கும் கோபாலின் நெஞ்சிலும் பற்றிப் படர்ந்தது.

தன் எரிக்கும் பணியை முடித்துக் கொண்டு அங்கிருந்து பறந்தது ஜீப்.

பத்து நிமிஷம் சென்றிருக்கும்...

பரந்து விழுதூன்றிக் கிளை பரப்பி நின்ற ஓர் ஆலமரத்தின் கீழ் அமைதியாக இருந்த கோயிலுக்கு சமீபமாக ஜீப் வந்து நின்றது.

'அமைதி' யை நிலை நாட்டுவதற்காகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ வீரர்கள், 'தட தட' என்று கீழே இறங்கினுர்கள்.

அந்தச் சின்னஞ் சிறு ஆலயத்தின் உக்கி உழுத்த வாயிற் கதவைப் 'பூட்ஸ்' பாதங்கள் முத்தமிட்டன.

ஆலயக் கதவு திறந்து கொண்டது

'பக்தர்கள்' கூட்டம் 'மள மள' என்று ஆலயத்துள் நுழைந்தது.

உள்ளே கும்மிருட்டு. செழும்பு பிடித்த அந்தப் பழைய தூண்டாமணி விளக்கில் திரியும் இல்லை; எண்ணெயும் இல்லை.

'டோர்ச் லைட்' அடிக்கப்பட்டது. ஒரு வீரன், தீக்குச்சியைக் கிழித்துச் சிகரட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான்.

மூலஸ்தானத்தை நோக்கிப் 'படையெடுத்தது' அந்தப் படை வீரர் கூட்டம்.



வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருந்த சூலாயுதமும், வேலாயுதமும் பிடுங்கப்பட்டன! மூலையில், 'சடங்கு' காலத்தில் பாவிக்கப்படும் கண்ட சோடலியும், கத்தியும், அலுவாங்கும் இன்னும் இரண்டொரு துருப்பிடித்த சாமான்களும் 'பக்தர்' களின் கவனத்தை ஈர்க்கின்றன.

அத்தனை பொருட்களும் வாரி எடுக்கப்பட்டன.

நாடு முழுக்கப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்த அவசர காலச் சட்டத்துக்கும், வடக்கிலுப், கிழக்கிலும் அமுலாகி இருந்த ஊரடங்குச் சட்டத்துக்கும் மாறுன செயலாம் அப்படி 'ஆயுதங்கள்' இருப்பது!

ராணுவ வீரர்களின் 'பாரா' மீண்டும் தொடர்ந்தது.

கோபாலின் குருதி கொதித்தது. தன் இனத்தின் விடுதலை வேட்கையை வேட்டையாடும் இந்தச் சிங்கள ராணுவ வீரர்களின் வெறிச் செயலுக்கு நாமும் உடந்தையா? கடமை என்ற சூட்டுக்கோல் நம் கண்களைக் குத்திக் குருடாக்கிவிட்டதா?

கேள்விகள் பூதாகாரமாய் எழுந்தன கோபாலின் உள்ளத்தில். நெஞ்சில் மூண்டிருந்த 'நகச்' சூட்டில் சற்று உறைபபு ஏற்பட்டது. அந்த உறைப்பு உலைக்களமாக மாறி—அவன் உள்ளத்தை எரிமலையாக வியாபிக்கச் செய்த சம்பவம் ஒன்று சற்று நேரத்தில் நிகழ இருந்தது அவனுக்கு அப்பொழுது தெரியவில்லை!

இருளைக் கிழித்து—அமைதியைக் கொன்று அந்த ஜீப் விரைந்த வேகம், மயிர்க் கூச்செறியச் செய்தது.

★

வடக்கிலும், கிழக்கிலும் வேகமாக நடைபெற்ற, சரித்திரப் பிரசித்தி பெற்ற சத்தியாக்கிரகத்தை முறியடிப்பதற்காக, ராணுவம் கட்டவிழ்க்கப்பட்டிருந்த இருட் காலம்.

ஊண் மறந்து—உறக்கம் துறந்து உரிமை பெறுதற்காகத் தமிழ் மக்கள் திரண்டெழுந்து யாத்த நோன்பைச் செயலிழக்கப் பண்ணுதற்காக அரசாங்கம் அவசர காலச் சட்டத்தையும், ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனப்படுத்தியிருந்த கறைபடிந்த காலம்.

மாதக் கணக்கில் மழையில் தோய்ந்து, வெயிலில் கருகி, பனியில் விறைத்துத் தம் தாயினைக் காக்கத் தமிழ் மக்கள் புரிந்த அகிம்சைப் போரைக் குதறி எறிந்து நிர்மூலப்படுத்த அரசாங்கம் போர்ப்பறை கொட்டிய பயங்கர நாள்.

கிழக்கு மாகாணத்தின் 'கொட்டத்தை' அடக்குவதற்காக அரசாங்கத்தால் அனுப்பப்பட்டிருந்த ராணு [illegible] நாயகனுன கோபாலும் ஒரு ராணுவ வீரனுக டியூட்டியில் வந்திருந்தான்.

தன்னுடன் கடமை புரிய வந்திருந்த சிங்கள வீரர்களும், ராணுவக் கோஷ்டியின் தலைவரும் கடமையின் பெயரால் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமை அவன இரத்தத்தில் கொதிப்பை ஏற்படுத்தியது.

தான் ஒரு விஸ்வாசமுள்ள அரசாங்க ஊழியன் என்பதையும், இனப்பற்றிற்கும், இரக்கத்துக்கும் தான் பொறுப்பேற்றுள்ள தொழிலில் இடமில்லை என்பதையும், அப்படி இரக்கம் காட்டுதல் ராஜத்துரோகம்—தேசத்துரோகம் என்பதையும், தனக்கு அளிக்கப்பட்டுள்ள கடமையினின்றும் பிறழ்வது, மனச்சாட்சியைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல் என்பதையும் அவன் மறந்தான்.

அப்படி அவன் பேயாக மாறியதற்கு—சற்றுமுன்னர் ராணுவத்தினர் ஓர் உயிரை ஜீப்புகளுக்குப் பலியாக்கியது; ஓலைக் குடிசையைத் தீக்கு இரையாக்கியது; இறைவன் உறையும் ஆலயத்தைத் தீட்டுப் படுத்தியது மட்டும் காரணமல்ல!

கொடுமையின் எல்லை என்று கருதப்படும் ஒரு காரியத்தை அவர்கள் செய்தனர். அதுவும் அவன் எதிரே செய்தனர்.

அந்நிகழ்ச்சியின் பின் அவன் மிருகமானுன்! பைசாசாகினுன்!

★

ஆலயத்தைச் சீரழித்த ஜீப், ஆக்ரோஷத்தோடு முன்னேறியது.

அதன் கண் வைத்த தொலையில் ஓர் உருவம். ஜீப் முன்னேற அந்த உருவத்தை நன்கு பார்க்கக் கூடியதாக இருந்தது.

பெண்!

பெண்ணொருத்தி தன் இடுப்பில் ஒரு குமந்தையைச் சுமந்துகொண்டு ஓட்டமும் நடையுமாக நடந்து கொண்டிருந்தாள்.

பின்னுல் பாய்ந்து வந்த ஜீப்பின் அரவம் கேட்டதும் அவளுடைய நடை ஓட்டமாக மாறியது.

நொடிப் பொழுதில் தலைவரிடமிருந்து கட்டளை பிறந்தது.

"நவத்தாப்பாங்!"

அந்தப் பெண்ணை முந்திக் கொண்டு ஜீப் நின்றது!

புலால் வேட்கைகொண்ட மனிதப் புலிகள் 'தடதட' என்று கீழே குதித்தன.

பெண்மை பிராண்டப் பட்டது!.........

சித்திரவதை தோற்றது! கொடுமையைச் செய்தவர்கள் சற்று நிதானமாக அதைச் செய்திருக்கலாம்!

கோபால்?

அவன் இப்பொழுது மனிதனே அல்ல!

★

புரண்டு வரும் காட்டாற்று வேகத்தில் கோபால் ஜீப்பைச் செலுத்திக் கொண்டு வந்தான். கொந்தளிக்கும் பொங்குமாங் கடலாய்க் குமுறிய அவன் உள்ளத்தில் இப்பொழுது ஓர் அமைதி! தமிழனுய்ப் பிறந்த தன் கடமை தீர்ந்துவிட்டதென்ற ஒரு நிறைவு! பூரிப்பு!

அவனை இப்பொழுது 'தியாகி' என்பதா? 'கொலைகாரன்' என்பதா?

சற்றுமுன்னர்தான் அவன் ஒரு கொலையைச் செய்தான்! 'தன் கையில் அதிகாரம் இருக்கின்றது; தான் நினைத்தால் எதையும் செய்யலாம்' என்று தப்புக் கணக்குப் போட்டு, தன் கண்ணெதிரே 'ஈச்மன் வேலை' புரிந்த இராணுவத் தலைவனைக் கொன்று பிணமாக்கிவிட்டு அவன் வந்து கொண்டிருக்கிறுன்.

தன்னுடைய இந்தத் தீரச் செயலை மக்களிடம் சொல்லி, அவர்கள் துணையுடன், எஞ்சியுள்ள இராணுவ வீரர்களை எமலோகம் அனுப்பும் இணையற்ற திட்

(15-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் மறுத்து, அழிந்து போகக் கூடிய சொற்ப பணத்துக்காக, தங்கள் அழியாத மானத்தை அடிமை போல் அரசாங்கத்தினிடம் அடைவுவைத்ததும் அல்லாமல், எம்மையும் கூடிய கெதியில் அரசாங்கத்தினிடம் அடைவுவைக்க வழிவகுக்கின்றனர். இது வருத்தத் தக்க செயல்.

'தமிழன்'

கல்முனை

3—9—62

## பௌத்தர்களானுல் பிரச்சினை தீராது

சிறுபான்மைத் தமிழர்கள் எனப்படுவோர் பௌத்தர்களாக மாறப்போகின்றுர்கள், தமது கிராமங்களில் புத்த விகாரைகளைக் கட்டுவிக்கப் போகிறுர்கள் எனப் பத்திரிகைகளில் படித்தேன்.

இவை தற்கொலைக்கொப்பானவை. தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிக்கும் சாதி வேறுபாட்டை ஒடுக்கப்படுபவர்கள், எதிர்த்துப் போராடி ஒழியச்செய்வதே சிறந்த வழி, தவிர குறுக்கு வழியில் இறங்குவது தவறு. பௌத்தர்களாக மாறிவிட்டபோதில் கூட சாதி வேறுபாடு அறவே அழிந்து சமத்துவம்— சகோதரத்துவம் — ஏற்பட்டுவிடாது. மத வழிபாட்டில் சமத்துவ மடையலாம், மதம் மாறிய பின்பும் தொடர்ந்து இதே சமூகத்தில்தானே வாழப் போகிறுர்கள். எனின் மற்றைய சமத்துவப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் என்ன?

சாதிவேற்றுமை ஒழிய வேண்டும் என்பதற்காக இன்று பல அறிஞர்களும் இயக்கங்களும் செயலாற்றுவதைக் காண்கின்றேம்.

தமிழரசுக்கட்சி பெருமளவில் முயன்றுவருவதைக் காண்கின்றேம். ஆரியம் தமிழினத்திற்குத் தந்த இந்த மாசை அழித்தேயாக வேண்டும். இலகுவில், உடனடியாக ஒழித்துவிடக் கூடியதல்ல, இக்கொடிய நோய்.

படித்தோர் உள்ளங்கள் ஓரளவிற்கு மாறிவிட்டன. பாமரர் உள்ளங்களிலிருந்து, ஆரியம் விதைத்த வேண்டாத கொள்கைகள், வரட்டுக்கவுரவங்கள், மதக்கோட்பாடுகள், படிப்படியாகத்தான், மடியவேண்டும். இவற்றிற்காகப் பெருமளவில் பிரசாரங்கள் நடைபெறுகின்றன.

எனவே, அவசரப்படுதல் நன்றன்று. அதுவும், ஈழத்தமிழினத்தை இன்று பீடித்துள்ள, சரித்திரம் காணுத, இக்கட்டான கொடுமைகளுக்கு மத்தியில், நமக்குள்ளே பிளவுகள் செய்தல் கூடாது.

அண்ணன் தம்பிக்குள்ளே பிளவுகூடாது. அண்ணன் தம்பியைக் காட்டிக்கொடுக்கும் பண்பற்ற செயல் கூடாது. தமிழினத்திற்கே உரித்தான அந்த அரிய பண்பை அவசரப்பட்டு இழந்துவிடக்கூடாது—சரித்திரத்தை மாசுபடுத்தக் கூடாது.

"வளவன்"

கொழும்பு-2.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுககுத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

சுதந்திரன் அச்சகம்,

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக் காவலில் நாம்' 8.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனகொடை,
ஹோமாகம.
25—4—1961

என் அருமை மகள்

அன்பரசிக்கு,

எப்படி? யாபேரும் நலமா? இங்கே யாபேரும் நலமே இருக்கிறார்கள், சிறகிழந்த பறவைகள் போல. சிறகிழந்த பறவை சுதந்திர மாகப் பறக்க முடியாதல்லவா? அதே போன்று எம்மையும் சிறகிழந்த பறவையாக்கி—ஜனநாயக ஆட்சியைக் கேலிப் பொருளாக்கி, சிறிமா அம்மையார் மகிழ்கின்றார். வாழ்க ஸ்ரீமா அம்மையார்! அவர் தம் உதவிக்கரங்களாகிய வகுப்புவாத மந்திரிகள் வாழ்க! கொடுமை புரிவதில் மகிழ்வுகாணும் மந்திரிகளை உனது அப்பா வாழ்த்துகிறாரே என ஆச்சரியப்படுகின்றாயா? அன்புமகளே! கொடுமையாளரையும் வாழ்த்தும் மனப்பண்பை அளிக்கக்கூடிய, மனப்பான்மையைச் சென்ற சத்தியாக்கிரகப் போராட்டம் தந்துவிட்டது. கொடுமை இழைப்பவர்களை நாம் பார்த்து மகிழவோ அஞ்சவோ என்ன இருக்கின்றது?

கோடரியை உனக்குத் தெரியுமல்லவா? கோடரியின் கைப்பிடியாயுள்ள தடி மரத்தினால் ஆனதல்லவா? இந்த மரத்தினால் செய்யப்பட்ட கைப்பிடி கொண்ட கோடரி, தனக்கு ஒரு வலிமை கொண்ட—இரும்பினால் செய்த—வெட்டும் நண்பனையும் உதவியாகக் கொண்டு, தன் இனமாகிய மரத்தையே வெட்டித் தீர்க்கிறதே! அதாவது மரத்தின் தடியே, மரத்தை வெட்ட உதவி! இதேபோல் ஓர் இனம் செய்யும் கொடுமை, அவ்வினம் அழியச் செய்யப்படும் ஆரம்பம் ஒழிய வேறல்ல. அமைதியாக எண்ணிப்பார்த்தால் இந்த உண்மை புரியும். அவசரப்பட்டு, முன்காணும் நிலையை மட்டும் வைத்து எண்ணினால் இந்த உண்மை நன்கு விளங்கவே விளங்காது.

கொடுமை செய்தோர் மகிழ்வாக வாழ்ந்ததாக வரலாறே கிடையாது.

ஈழத்து ஆட்சியைக் கொஞ்சம் எண்ணிப்பார்! சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் ஒரு சேரச் சேர்ந்து பெற்ற சுதந்திரத்தின் பிற்பாடு,—பெரும்பான்மைஎன்ற காரணத்தைக் காட்டும் கொண்டு—தமிழ் பேசுமினத்தை ஒழித்துக் கட்டும் வேலையில் சில தலைவர்களும் அரசியல் கட்சிகளும் முனைந்தனர் அல்லவா?

கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழரது பிரதேசத்தை, குடியேற்றம் மூலம் அபகரித்து, தமிழ்ப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு வராது செய்ய, அடிப்படை போட்டப்பட்ட முதற் பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா எங்கே? குதிரை அவருக்கு எமனாயிற்று! சொக்குவிலில் தமிழுக்குச்சம உரிமை—களனியில் சிங்களம் மட்டும் பிரேரணை என இரு நாக்குக்கொண்டிருந்த பிரதமர் கொத்தலாவலை எங்கே? வனவாசம் செய்பவராகிவிட்டாரே அரசியலைப் பொறுத்தமட்டில்.

சிங்களம் மட்டும் சட்டத்தை—வேலியடைத்து, காலிமுகத்தில் வீரத் தமிழ் இரத்தத்தைத் தெளித்து—சட்டமாக்கிக் கொண்டுவந்தது மட்டுமல்லாது, செல்வநாயகம் பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை மனவிருப்புடன் எழுதிக்கைச்சாத்திட்டு ......பின்பு மஞ்சள் காவிகள் சிலரது பயமுறுத்தலுக்காக அஞ்சி கிழித்தெறிந்துவிட்ட பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா எங்கே? ஒரு மஞ்சள் காவியுடையின் கைத்துப்பாக்கி எமனாயிற்று!

சுதந்திரம் பெற்ற பிற்பாடு ஈழத்து ஆட்சி இன்னும் பூரணமாக ஐந்து ஆண்டுகள் ஆண்டதில்லையே. குழப்பம்—குழப்பம்—குழப்பம்.

ஏன்?

அறம் கூற்றமாகின்றது. தர்மம் அதர்மத்தை விட்டு வைப்பதில்லை. கொடுமையாளர் கொடுமையாலேயே ஒட்டப்படுகின்றனர். ஈழத்து ஆட்சியில் எங்கள் கண்களால் கண்ட சம்பவங்களைத்தான் மேலே எழுதியுள்ளேன்.

இந்தச் சம்பவங்களாவது நல்ல ஒரு படிப்பினையை இன்றைய ஆட்சி பீடத்துக்குக் கொடுக்குமென எதிர்பார்த்தேன். பதவியும் படாடோபமும் கண்களை மறைக்கின்றன. அதனால் நடந்த பாடங்கள் கூட அவர்களைத் திருத்த முடியவில்லை.

பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டு புதுத்தேர்தல் நடந்து அதில், ஐக்கிய தேசியக்கட்சியும் மக்கள் ஐக்கிய முன்னணியும் ஆட்சியைச்சமைக்க முடியாத நிலையிலிருந்தபோது—அதாவது தமிழரசுக்கட்சியின் ஆதரவு இல்லாது விட்டால், ஆட்சி நடத்த முடியாது என்ற நிலை வந்தபோது......தந்தை செல்வநாயகத்தின் வீடு தேடிவந்து, தோழமை பேசிய பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா...... "தமிழருக்குத் தீங்கு செய்யமாட்டோம்—பண்டாரநாயக்காவின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவோம்" என்றெல்லாம் உறுதியுரைகள் தந்த மந்திரிகள்...... தமிழ்பேசுமினத்தின் துன்பத்திலே நீச்சலடிக்கின்றனர். வேடிக்கையான மனிதர்கள்! மனச்சாட்சியை விற்றுவிட்ட இந்த மந்தைக்கூட்டம், ஈழத்து மந்திரிகள்! பேஷ்! பேஷ்!...... மகளே! தமிழ் பேசுமினம் ஏமாற்றப்பட்டதுபோல் தெரியினும், உண்மை மடியவில்லை. அறம் நம் பக்கம். நியாயம் எங்கள் பக்கம்.

உலகில் கொடுமையிழைத்தவர்கள் இன்று எங்கே? இந்த ஆட்சி எத்தனை நாட்களுக்கு என்று பார்த்து விடுவோமே!

இலங்கைத் தமிழ் பேசுமினத்தின் ஒத்துழைப்பையும் பெற்று, ஆட்சிக்கு வந்த இந்த மக்கள் முன்னணி ஆட்சிபீடம்...... நன்றி மறந்து, அதே தமிழ் பேசுமினத்தவர்களை துப்பாக்கி முன்பு ஆளும் கொடுமை இன்று! ஆனால்... ஆனால்... இதே துப்பாக்கிகள் தமிழ் பேசுமினத்தை ஒருபோதும் அழிக்கமுடியாது. நிச்சயமாகச் சொல்கின்றேன் மகளே! இதே துப்பாகிகள் திசை மாறும்... காலம்காட்டும்.

எமது மக்களிடம் துப்பாக்கி கிடையாது. குண்டு கிடையாது. ஈழத்துப் பொலிசார் உபயோகிக்கும் சாதாரண கல்கூடக்கிடையாது. எம்மிடமிருப்பது துணிவு. அத்துணிவு சாத்துவீகமாகிப் பரிணமிக்கின்றது. துப்பாக்கி முன்பு நெஞ்சை நிமிர்த்திக்காட்டும் வன்மையுண்டு. குண்டாந்தடி முறியுமளவு அடிவாங்கும் வன்மை நிறைய உண்டு. எம்மை நாய் கடிக்கும் போது— நாம் நாயைத் திரும்பக் கடிப்பது கிடையாதே! நாம் மனிதர்கள். கொடுமையில் பவிசுகாணக் கூசும் நாகரிக மக்கள்!—ஆமாம்! கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த குடியினர் நாம்.

சத்தியாக்கிரகத்தின் போது நமது பிரதமர் அவர்கள்—யாரோ எழுதிக் கொடுத்ததை—தமது அறிக்கையாகத் தமிழ்பேசும் மக்களுக்கு வெளியிட்டாரே. சந்திசந்தியாக அவ்வறிக்கையை அள்ளி அள்ளிப் பொலீசார் கொடுத்தார்களே. அதிலே தமிழ்பேசும் மக்களைப் பார்த்து, கோபமுடன் 'அடக்குவேன்' என்றாரே. அப்போது தமிழரசுத் தந்தை ஓர் அறிக்கை விட்டார். அதைத் திரும்பவும் எண்ணிப்பாரார்!

இதோ அவ்வறிக்கை— "1959-ம்வருடத்தில் அந்தத் துக்கமான தினத்தில் கொலையாளி கைத்துப்பாக்கியிலிருந்து குண்டுகள் பாய்ந்தபோது பிரதமரின் காலஞ் சென்ற கணவர் எவ்

## புதுமை லோலன்

வித சக்தியற்ற நிலையில் இருந்தாரோ, அதே நிலையில் தான், பிரதம மந்திரியின் ஆயுதந் தரித்த கொலையாளிகள் எங்கள்முன் துப்பாக்கியை நீட்டும் பொழுது நாங்களும் நிராதரவற்றவர்களாக சக்திஇழந்து நிற்போம் என்பதை அறிவோம்."

சாத்வீகத்தின்—தியாக உணர்வின்—தர்மத்தின் வாக்கியங்கள் இவை.

இதன் பின்புமா பிரதமர் சிறிமா அம்மையார் அவர்கள் கொடுமை செய்ய வழி செய்தார்......அதோ முன்னைய பிரதமர்கள் சென்ற பாதை......! பரிதாபம்—பரிதாபம்!

மகளே! இன்று வானொலி மகிழ்வூட்டும் செய்தியைத் தந்தது. அப்போது யான் எண்ணினேன்— ஆட்சி குலையக்காலம் அண்மிவிட்டது என. அதனால் எனது எண்ணங்கள், சென்றகால ஆட்சியின் பிரதமர்களை நோக்கி ஓடிற்று.

அதென்னப்பா மகிழ்வூட்டும் செய்தி என்கிறாயே? விடுதலை கிடைத்து விட்டதாக்கும் என எண்ணுகிறாயா? விடுதலைகூட இத்தனை மகிழ்வை ஊட்டாது மகளே!

'இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயக காங்கிரசும் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்து விட்டனர்" என்பதே என்னை மகிழ்வில் திளைக்கச் செய்தது. வானொலி இந்தச் செய்தியைச்சொன்னதும், தடுப்புக் காவல் குடும்பத்தவராய் நாங்கள் யாபேரும் புதுமுறுக்குப் பெற்றோம். வவுனியாப் பிரதிநிதி தா. சிவசிதம்பரம் அவர்களும், மட்டக்களப்புப் பிரதிநிதி செ. இராசதுரை அவர்களும், பாரதியின் 'விடுதலை விடுதலை' என்ற பாட்டையல்லவா பாட ஆரம்பித்து விட்டனர். எமக்கு விடுதலை என்றல்ல— எம் இனத்துக்கு விடுதலை என்று மகிழ்ந்து.

எமது சொந்தச் சகோதரர்களாகிய மலைநாட்டுத் தமிழ்பேசும் மக்கள் வேலை நிறுத்தத்தை ஒரு கிழமை செய்தாலே இலங்கை வருமானம் படுத்துவிடுமே. [illegible] யான வீழ்ச்சியல்லவா ஏற்பட்டுவிடும். ஈழத்து ஆட்சியைக் கிடுகிடுக்கச் செய்யக் கூடிய மாபெரும் சக்தி, நம் இரத்தமாய மலைநாட்டுத் தோழர்கள் வசம் உண்டே! தொண்டமானுக்கு ஜே—அஸீசுக்கு ஜே ...... என்று கூவ வேண்டும் போலுள்ளதே! மலைநாட்டுத் தமிழரது பிரச்சினையை ஆரம்பமாகக் கொண்டே, இலங்கைத்தமிழரசுக்கட்சி ஜனனமடைந்தது. தமிழரசுக் கட்சி விடாது போராடியும் வந்தது. நன்றிக் கடனை மலைநாட்டுத் தமிழ் வீரர் காட்ட ஓர் அரிய வாய்ப்புக் கிட்டிவிட்டது.

ஏழ்மையில் உழன்றாலும், அட்டைக் கடியுடன் மழையிலும் குளிரிலும் வேதனை கொண்டாலும், கள்ளத்தோணி எனக் கேலியுரை கேட்டாலும் ...... ஈழத்தின் அத்திவாரம் எவர்கள்? எழில் கொஞ்சும் இலங்கையில் வளம் தரும் முதல்வன் யாவன்? தமிழரசுக் கட்சியின் பரந்த கண்ணோட்டமே மலைநாட்டுத் தமிழரையும்—இனமுழக்கமிடச் செய்கின்றது.

சத்தியாக்கிரகத்தின் போது தொண்டமான் அவர்களும், அஸீஸ் அவர்களும், வந்தார்கள். அவசியம்நேரும் போது கை கொடுப்போம் என்றார்கள். சொல்லைக் காப்பாற்றி விட்டார்கள். அறப்போரின் அடுத்தகட்டம்...... ஆரம்பமாகிவிட்டது, ஆரம்பமாகிவிட்டது.

தான் ஆடாவிட்டாலும் தசை ஆடுமென்பரே! தேன் தமிழை வாழ்வின் உயிராகக் கொண்ட தமிழன் எங்கிருப்பினும் ஒன்றுவான். மெய்யாகிவிட்டது மகளே, மெய்யாகி விட்டது.

"தொண்டமான் பெரிய முதலாளியாச்சே. அவராவது போராட்டத்தை நடாத்துவதாவது. ஏழைப் பாட்டாளி மக்களுக்காக அவரிதுவரை செய்தது வெளிநாட்டுப் பிரயாணமும், யானைப் பவனியும் தானே. எம்.பி. பதவிக்காக-உதவிகோர, தமிழரசுக்கட்சியின் தோழன் போலத் திரிகிறார்."— என்றெல்லாம் என்னிடம் பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

இன்றைய வானொலியைக் கேட்டதும், தொண்டமானைப் பற்றிப் பலரும் கூறுவது தப்பு என உணரத் தொடங்கினேன். தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தை நடாத்துவதற்கு அசாத்திய துணிவுடன், மிகச்சிறந்த உழைப்பும் தேவை. அத்துடன் பணமும் தேவை அபரிமிதமாக. இந்நிலையில், ஈழத் தமிழருக்குத் தோள்கொடுக்கத் துணிந்த தொழிலாளர் காங்கிரஸ் வாழ்த்துக்குரியது. "தொண்டமானை அரசாங்கம் வளைத்து விட்டால்......" என ஒருவர் இப்போது சாப்பிடும் மேசையில் கூறினார்.

எல்லாவற்றையும் எண்ணித் தானே ஆரம்பித்திருப்பார் என யான் எண்ணினேன்;—பார்ப்போமே!

வானொலியின் செய்தி நேரத்தில், காதை வானொலிப்பக்கம் செலுத்தியபடியிருந்தோம். தோட்டத் தொழிலாளரது வேலை நிறுத்தம் பற்றி என்ன கூறுவர், என எதிர்பார்த்தோம். உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. க. ஜெயக்கொடி அவர்கள் சென்ற ஞாயிறு உண்ணாவிரதமிருந்து மாலை முடித்தார்கள். அதனது பலனிது என அவரைப் பார்த்து மகிழ்வாகக் கூறினோம்.

நாளை விடியட்டும். வானொலி என்ன செய்தி தரும்? அச்செய்தியை எதிர்பார்க்கின்றோம்.

இன்றிரவு பேய் பேய் என்று பேசி திருமதி அமிர்தலிங்கம் அவர்களை அச்சப்

(15-ம் பக்கம் பார்க்க)


**சுதந்திரன் சந்தா விபரம்**

இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா. 10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!





**தலை வலிக்கு**

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

**108 மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது**

இதனைத் தலைக்கு வைத்துவரின் குணமாகும் வியாதிகள்:

கண் எரிச்சல், கண்சிவப்பு, கண்ணீர் வடிதல் பூ விழுதல், கண் அரிப்பு, காதில் சீழ் வடிதல், காதுக்குத்து, பீனிசம், செவிடு, காது இரைச்சல், காது மந்தம், மூக்கிலிருந்து நீர் வடிதல், ரத்தம் வருதல், ஓயாத் தும்மல், நாற்ற உணர்ச்சி காணல், வாசனை உணர்ச்சி இல்லாதிருப்பது, மண்டையிடி, மண்டைக் கரப்பான், பிடரிவலி, ரோமம் உதிர்தல் முதலியவைகளைக் குணப்படுத்துவதோடு தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு அடர்த்தியாக வளரச் செய்யும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

**புட்டி 1க்கு ரூ. 5-75**
**அரைப் புட்டி ரூ. 3-00**

தபால் செலவு -/95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெஞ்சிலோர் ஆலயம்

# சென்னையில் மட்டும் இரண்டரை லட்சம் வருமானம்

## சித்ராலயா மனேஜர் சர்மா தகவல்

26 நாட்களில் தயாராகிய ஸ்ரீதரின் புதுமைப் படமாகிய நெஞ்சிலோர் ஆலயம் படத்தை எவருமே திரையிட விரும்பவில்லை. ஆனால் அதனை ஸ்ரீதரே திரையிட்டார். முடிவில் சென்னை கசினோ தியேட்டரில் மட்டும் லட்சத்து 137 000 ரூபா ஆதாயம் கிடைத்தது. [தியேட்டர்காரரின் பங்கு கழிக்கப்பட்டபின்.] சென்னையில் 2 1/2 லட்சரூபா வருமானம் என்று பெருமிதத்துடன் கூறினர், தற்போது இலங்கை வந்துள்ள நெஞ்சிலோர் ஆலயம் தயாரித்த சித்ராலாயாவின் மனேஜர் திரு. சர்மா அவர்கள்.

வர்த்தக அமைப்பு முறைகள் படித்து அதில் எம். ஏ. பட்டதாரியாகிய திரு. சர்மா தமிழ்ச் சினிமாப்படத்துறையில் மறுமலர்ச்சியைத் தொடக்கிய திரு ஸ்ரீதர் டைரக்டராகவுள்ள ஸ்தாபனத்தின் மனேஜராவார். இந்தச் சித்ராலய ஸ்தாபனம் தென் இந்திய படத்துறையின் சிறந்த தொழில் நிபுணர்களை உடையது. படத்துறையில் சிறப்புற்ற வாலிபர்களான டைரக்டர் ஸ்ரீதர், படப்பிடிப்பாளர் வின்செண்ட் முதலியோரைக் கொண்ட ஸ்தாபனமாதலின் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளது.

"காலை ஏழு மணிக்கு நடிகர்கள், தொழிலாளர்கள், எல்லோரும் 'செட்டில்' கூடுவோம். நாள் முழுவதும் படப்பிடிப்பு. முடிய 9 மணிக்கு மேலாகிவிடும். இப்படிக் கஷ்டப்பட்டே இந்தப் படத்தை 26 நாட்களில் முடித்தோம்" என்று பெருமையுடன் தெரிவித்தார் திரு. சர்மா.

பரந்த உலகறிவுகொண்ட திரு. சர்மா தனது பாரியாருடன் இலங்கை வந்துள்ளார். ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகவும் சரளமாகப் பேசும் அவருடன் ஒரு மணி நேரமாகப் பேசினேன்-நேரம் போவதே தெரியவில்லை. ஆனால் அவர் குறிப்பிட்ட ஒன்று என் நெஞ்சில் மிக ஆழமாகப் பதிந்தது.

### ஸ்ரீதர் அழுதார்

பேபி பத்மினி பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் திரு. சர்மா. "500 பேர்களிடையே அவரைத் தேர்ந்தோம்-திறமை மிக்கவர். அன்று பேபி பத்மினி படத்தில் சாகும் காட்சியை நடித்தார். அப்படியே தத்ரூபமாக நடித்தார். அதனைப் பார்த்திருந்த அனைவரும் கண்ணீர் சிந்தத் தொடங்கிவிட்டனர். ஏன்-டைரக்டர் ஸ்ரீதரே அழுதுவிட்டார்.

அத்தோடு அன்றுமட்டும் படப்பிடிப்பு நேரத்தோடு முடிந்தது, காரணம் அந்த நிகழ்ச்சியின் பின் ஒருவராலும் நடிக்கவே முடியவில்லை. பேபி பத்மினியின் தாயார் மூன்று நாளாக பிரமை பிடித்தவர் போலிருந்தார்' என்று அவர் கூறியதும் என் மெய் சிலிர்த்தது.

இப்படியாக பல சுவாரஸ்யமான விடயங்களைத் திரு. சர்மா கூறினர். அவற்றை மறு இதழில் எதிர்பாருங்கள்.

—மதி

# கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நினைவு விழா


திரை வானில் நிகரில்லா நகைச் சுவை நடிகராகத் திகழ்ந்த, காலஞ் சென்ற என். எஸ். கிருஷ்ணனுக்கு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்ற யோசனை, அவரது நினைவு விழாவில் சமர்ப்பிக்கப்பட்டது. அவரது நினைவு விழா சென்ற வாரம சென்னையிலுள்ள தியாகராய நகரில் நடைபெற்றது.

மண்டபம் கட்ட வேண்டும் என்ற யோசனையை வெளியிட்டவர், காங்கிரஸ் சின்ன அண்ணமலை ஆவார்.

விழாவில் பங்குபற்றிய சிவாஜி கணேசன் "என்.எஸ். கிருஷ்ணன் பெரிய தியாகி. நடிகர்களின் தரத்தை உயர்த்திய மேதை அவர்" என்று கிருஷ்ணனை வாயாரப் புகழ்ந்தார்.

விழாவுக்கு சினிமா அதிபர் ஏ. எல். சீனிவாசன் தலைமை வகித்தார். நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்திரன், தங்கவேலு, காகா ராதா கிருஷ்ணன், சி. எஸ். பாண்டியன், என். எஸ். நாராயண பிள்ளை, மற்றும் பி. எஸ். ராமையா ஆகியோரும் பேசினர்கள்.

குலதெய்வம் ராஜகோபால் குழுவினரின் வில்லுப் பாட்டும் நடந்தது.



ஈரவிழிப் பார்வை. ஒய்யாரத தோற்றம் இத்தனைக்கும் பெயர்தானே மாதுரி. பல படங்களில் நடித்து வரும் மாதுரி



(இடது பக்கம்) யாழ்ப்பாணம் திருமதி. பூமணி-இராசரத்தினம் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நீர்கொழும்பு சித்திவிநாயகர் ஆலய அலங்கார உற்சவ 4-ம் திருவிழாவின்போது நடைபெற்றது.

(வலது பக்கம்) திருவிழாவின்போது செல்வன் நேசதுரை தியாகராஜவின் (வயது 10) மிருதங்க வாசிப்பைப் பாராட்டுமுகமாக, சுருட்டுத் தொழிலாளர்களின் சார்பில் திரு. எஸ். எஸ் செல்லையா அவர்களால் தங்கப் பதக்கம் அணிவிக்கப்படுகிறது.

படப்பிடிப்பு:- "யுனைவி போட்டோஸ்"



"ஓ! எங்கள் வசந்தி பி. ஏ. என்கிறீர்களா? ஒரு வருடத்திற்கு முன் என்னைப் பார்த்தால் யார் இவர் என்று கேட்டிருப்பீர்களே! இதுதான் சினிமா உலகம்" என்று கூறுகிறார் போலும் அவளு இவன் படத்தில் வசந்தி பி. ஏ.

நாடக விமர்சனம்:

# "தியாகி"

பதுளை— தெளிவத்தை வள்ளுவர் மன்றத்தினர் திரு. தமிழோவியன் அவர்களால் எழுதித் தயாரிக்கப்பட்ட 'தியாகி' நாடகத்தை அரங்கேற்றினர். ஏற்கனவே இம்மன்றத்தார் 'நச்சுக் கோப்பை'— 'எழுத்தாளன் காதல்'- முதலிய பல நாடகங்களை நடித்து ஓரளவு மேடை அநுபவங் கொண்டவர்கள் என்பதை 'தியாகி' நன்கு தெளிவு படுத்தியது.

முழுமையும் மலைநாட்டுச் சூழ்நிலையை அடிப் படையாகக் கொண்டு படைக்கப்பட்டது இந் நாடகம். உரிமை இன்மையால் படித்த இளைஞர் படுந் தொல்லைகளையும், நடத்த வேண்டிய போராட்டங்களையும் மையமாகச் சித்தரித்து- தோட்டத்து மக்களின் வாழ்க்கை நிலையை வடித்துக் காட்டி- அவர்களிடம் மலிந்து கிடக்கும் அறியாமை— குடிப் பழக்கம்- அவசியமற்ற போக்கு முதலியவற்றை இடித்துக் கூறி- வாழவேண்டிய வகையைச் சுட்டிச் சொல்லும் சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்துவதே 'தியாகி' நாடகம். பாடலும் நல்ல கருத்தாழத்தோடும் இனிமையுடனும் [illegible] எல்லா நடிகர்களும் நன்கு நடித்தனர்.

நாடக விமர்சனம்

# நெஞ்சில் நிறைந்தவள்

ரோயல் கல்லூரி மண்டபத்துள் நுழைந்து கொண்டிருந்தேன்.

படார் என்றொரு சத்தம். திடுக்கிட்டுப் பார்த்தேன். சீன வெடி என்று தெரிந்தது சுதந்திரனுக்கு இத்தனை மதிப்பா என்று பார்த்த போது தான் நிலைமை விளங்கிற்று. யாரோ விஷமிகளின் வேலை. பொருமையின் விளைவு. ஒரு ஆக்க வேலையைக் குழப்ப சிறு முயற்சி. இத்தகைய மோசமான குணம் எங்கள் நாடக சங்கங்களிடையேயிருக்கையில் தமிழ் நாடகம் எப்படித் தான் முன்னேறும்?

பெற்றோர் இறந்தநாள் முதல் அவளைக் காப்பாற்றி வந்த அண்ணனின் (டாக்டர் ரவியின்) வேண்டுகோளுக்கிணங்க, செல்வம் கொழிக்கும் குடும்பத்திற் பிறந்த ஆனந்தி தனது சிறு பிராயம் முதல் ஒன்றாய் இணைந்திருந்த ஏழைக் காதலன் வசந்தனை விட்டு வேறு ஒருவனை மணமுடிக்கச் சம்மதிக்கிறாள். தன் காதலியின் இந்த முடிவைச் சகிக்க முடியாமல் திரியும் வசந்தனை, சிறு வயதிலேயே காணமற்போன வசந்தனின் தங்கை சித்ராவின் காதலனும் வசந்தனின் இணைபிரியா நண்பனுமான சந்துரு, வைரவன் நடாத்தும் தாசி வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான்.

உள்ளே இருப்பது ஆனந்தி என்று சொல்லும் வசந்தனை, பல நாள் பிரிந்திருந்த தங்கை சித்ரா உள்ளே சந்திக்கிறாள். காதலனிடம் கூட்டிச் செல்வதாகச் சொல்லி வைரவன் தன்னை இங்கழைத்து வந்ததாகத் தெரிவிக்கிறாள் ஆனந்தி. வசந்தன் அவளைக் காப்பாற்றி காதலன் சந்துருவிடம் சேர்த்துவிட்டுச் செல்கிறான்.

வசந்தனாக வந்த மீரா சந்தன் தன் பாகத்தை மிகவும் கச்சிதமாகத் திறமையுடன் நடித்தார். ஆனால் அவ்வளவு விறைப்பு தேவையில்லை. சந்துருவாக நடித்த பிரேம் ஆனந்தின் நடிப்பில் இயற்கை மிளிர்ந்தது. சிறிது உரக்கப் பேசியிருக்கலாம்.

ஆனந்தியாக நடித்த சந்திரகலா ஒருகைதேர்ந்த நடிகையாக நன்றாக நடித்தார். சிக்கந்தர். டாக்டர் ரவியாகத் தோன்றி உணர்ச்சிகரமாக நடித்தார். சிறிய பாகமானாலும் சித்ராவாக நன்றாக நடித்தார் கிருஷ்ணகுமாரி. மச்சூர் உதயன் நடிப்பு சிறிது 'ஓவராகப்' போய்விட்டது. பேபி நளினி, மாஸ்டர் ரமேஷ் நடிப்பு பிரமாதம்.

காட்சி மாற்றத்திற்கு அதிக நேரமாகினும், மேடையமைப்பு சிறப்பாக இருந்தது என்று கூறவேண்டும். ஆனால் ஒலி, ஒளி மோசமாகிவிட்டது. பிற்பாட்டு நல்லது. ஆனால் ஒலி அமைப்பு கேட்காமல் செய்துவிட்டது.

சிறந்த நாடகம் என்று கூறமுடியாவிட்டாலும், ஒரு முன்னேற்றம் என்றே கூறவேண்டும்.

—மகே.—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் இனத்தின் விடிவு நாள் வெகு தூரத்தில் இல்லை

## கூடிய துன்பத்தைத் தாங்குபவர்களே இறுதியில் வெற்றி பெறுவர்

## மன்னார் மாநாட்டில் தலைமைப் பேருரை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பண்டையப் பெருமையும், இன்றைய சிறப்பும் வருங் கால வளமும், ஒருங்கே பெற்ற மன்னாரில் இம் மகாநாடு நடைபெறுவது, தமிழ் பேசும் இனத்தின் விடிவு நாள் வெகு தூரத்திலில்லையென்ற தென்பை எங்கள் உள்ளங்களில் ஏற்படுத்துகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற அறப்போராட்டத்தின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க நிர்வாக இயந்திரம், சுமார் இரண்டு மாதங்களாக ஸ்தம்பித்து நின்றது. படையைக் காட்டி மிரட்டியும் பங்கீட்டு அரிசியை நிறுத்தியும் எம்மைப் பணியவைக்க அரசாங்கம் முயற்சித்தது.

தமிழ் பேசும் மக்களுடைய உரிமை வேட்கையின் முன், இம் முயற்சிகள் பலனற்றுப் போயின. ஆயினும் அரசாங்கம் தொண்டர்களைக் கைது செய்யவோ சட்டபூர்வமான நடவக்டிகைகளை எடுக்கவோ தயங்கியது. மாருக கீழ்த்தரமாக வயிற்றில் அடித்து, களைக்க வைத்து, எமது போராட்டத்தை முறியடிக்க எண்ணியது.

### தமிழ் தபால் சேவை

இக்கட்டத்தில்தான் எமது போராட்டத்தின் இரண்டாவது அங்கமாக தமிழரசுத் தபாற் சேவை ஆரம்பிக்கப் பட்டது. சட்டமறுப்பின் அடிப்படையில் தபால் வினியோகம் அரசாங்கத்தின் ஏகபோக உரிமை என்ற சட்டத்தை மீறி எம்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கச் செய்வதெ தபால் சேவை ஆரம்பித்ததன் நோக்கமாகும். இதைத் திரித்து நாம் தனி அரசு அமைக்கும் நோக்கத்தோடு தபால் சேவையை ஆரம்பித்தோமென்று அன்று தொடக்கம் அரசாங்கமும், சிங்கள வகுப்புவாத அரசியல் தலைவர்களும் உலகம் முழுவதற்கும் பிரசாரம் செய்து வருகின்றனர்கள். இக்கூற்று உண்மைக்கு முரணனது என்பதைப் பகிரங்கமாக இம் மகாநாட்டில் நான் கூற விரும்புகின்றேன்.

சாத்விக சத்தியாக்கிரகத்தை மிருகத்தனமான இராணுவ ஆட்சியின் மூலம் முறியடிக்க வேண்டி ஏற்பட்ட வெட்கத்தை மறைப்பதற்காக வெளி உலகத்தின் முன்னிலையில் தமது அநியாயமான செயலை நியாய பூர்வமானது என்று காட்டுவதற்காகவே அரசாங்கம் இப்பொய்யைக் கூறிவருகின்றது.

### உலகத் தமிழரின் அனுதாபம்

" இலங்கையில் நாம் நடத்திய போராட்டத்தின் எதிரொலிப்பாக எமது போராட்டத்தை அலட்சியம் செய்து லண்டன் நகர் சென்ற பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவின் முன் அவரை அதிர்ச்சியடையச் செய்யக் கூடிய ஆர்ப்பாட்டத்தை நடத்தி எமது குறையை உலகறியச் செய்த லண்டன் வாழ் தமிழருக்கும் எமது பாராட்டு உரியது. அயர்லாந்து மக்கள் நடத்திய விடுதலைப் போருக்கு அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த ஐரிஷ் மக்கள் ஊக்கமும் அனுதாபமும் அளித்தது போல, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போருக்கும், உலகத் தமிழரின் அனுதாபம் இருப்பதும் இயல்பே.

இன்றைய இவ்வினப் போராட்டம் திருவதற்கு 1956-ம் ஆண்டு ஆவணி மாதம் திருமலையில் நடைபெற்ற எமது மகாநாட்டில் தமிழ் பேசும் மக்களின் நான்கு கோரிக்கைகளை நாம் வெளியிட்டு இருக்கின்ருேம்.

1. இன்றைய ஒற்றையாட்சி முறை மாற்றியமைக்கப்பட்டு தமிழ் பேசும் மக்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய ஒரு சமஷ்டி அரசியல் முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

2. சிங்களத்தோடு தமிழும் சம உரிமை பெற்ற ஆட்சி மொழியாக வேண்டும்.

3. இலங்கையைத் தாம் வாழும் நாடாகக் கொண்ட இந்திய வம்சாவளியினரான தமிழ் பேசும் மக்களுக்கு பிரஜாவுரிமை அளிக்கப்பட வேண்டும்.

4. பாரம்பரியமான தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்; என்பதேயாகும்.

### உறுதி வேண்டும்

ஒரு இனம் விடுதலைபெற வேண்டுமானுல் அவ்வினத்தவர்கள் தாம் அடிமைகளாக வாழமாட்டோம் என்ற உறுதியை அவர்கள் உள்ளத்தில் முதற்கண் பெற வேண்டும். சென்றஆண்டு நடந்த அறப் போரில் இராணுவத்தின் மிருக பலத்தினுல் அன்றி, எமது சம்மதத்தோடு எம்மை ஆள முடியாதென்பது சந்தேகத்திற்கு இடமின்றிக் காட்டப்பட்டது. இந்த ஒற்றுமையையும் சுதந்திரமனப்பான்மையும் சிதைய விடாது வளர்ப்போமானுல் எமது இலட்சியத்தை நாம் அடைவது உறுதி.

சமீபத்தில் சாதி ஒழிப்பை நோக்கமாகக்கொண்டு எமது கட்சியினுல் ஓர் சர்வ கட்சி மகாநாடு யாழ்ப்பாணத்திற் கூட்டப்பெற்றது. எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும், அரசியலில் ஈடுபடாத பல பிரமுகர்களும் அடங்கிய ஒரு செயற்குழு இவ்விஷயத்தில நடவடிக்கை எடுக்க நியமிக்சப்பட்டிருக்கின்றது. அவர்களோடு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைத்து தமிழ் பேசும் சமுதாயத்திலிருந்து தீண்டாமையைக் களைவது அத்தியாவசியமாகும்.

உள்ளத்தால் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களோடு ஒன்றுபட்டிருந்தாலும் பிரதேசததால் பிரிந்திருக்கும் காரணத்தினுல் எம்மோடு ஸ்தாபன ரீதியாக மலைநாட்டுத் தமிழ் மக்கள் இன்னும் ஒன்றுபடவில்லை. அவர்கள் மத்தியில் இயங்கி வந்த இலங்கைத் திராவிட முற்னேற்றக் கழகம் எமக்கு உறுதுணையாக விருந்தது. மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சியைக் கண்ட அரசாங்கம் இவ்வியக்கத்தைச் சட்டவிரோதமாக்கியது. தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட இன்னுமொரு அடியே இத்தடையுத்தரவு.

### மலையகத் தொடர்பு

மலையகத் தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டதோடு அவர்களுடைய ஜீவனேபாயத்திற்கே ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. தோட்டங்களைத் தவிரவேறு வாழ்க்கை வழி அறியாத இத்தமிழ் தொழிலாளர்கள் இலங்கையர்களுக்கு வேலை வழங்கும் சட்டத்தின்பேரில் இத்தோட்டங்களிலிருந்தும் துரத்தப்பட்ப்போகின்ருர்கள். அவர்களுடைய பிள்ளைகள் தமது தாய் மொழி மூலம் கல்வி கற்பதற்குக் கூட உரிமை மறுக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களின் ஒரே ஸ்தாபனம் இலங்கைத்தமிழரசுக் கட்சி என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கிளைகளை மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆரம்பித்து மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்களையும் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களையும் ஸ்தாபன ரீதியாக ஒன்று சேர்க்கத் தீர்மானித்து விட்டோம் என்பதையும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்ற ஆண்டு நாம் ஆரம்பித்த அறப்போர் இன்னும் முடியவில்லை. இராணுவ ஆட்சியினுல் தற்காலிகமாக நிறுத்தப் பட்டது. வளர்ந்திருக்கின்ற இன்றைய நிலைக்கு ஏற்ற ஓர் அமைப்புத் திட்டத்தை கட்சி நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கின்றது. அவ்வமைப்பு விதிகளின் கீழ், வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டிலும் கட்சியின் கிளைகளை சில மாதங்களுக்கிடையில் நிறுவுவோம். நாடெங்கும் தொண்டர்களை மீண்டும் திரட்டுவோம். உரிய நேரத்தில் செயற்குழுவின் ஆணையை எதிர்நோக்கி மீண்டும் அறப்போரில் குதிக்க ஆயத்தமாகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போராட்டம் தாங்கிக் கொள்ளும் சக்தியில் தங்கியிருக்கின்றது. கூடிய துன்பம் விளைவிப்பவர்கள்ல, கூடிய துன்பத்தைத் தாங்குபவர்களே இறுதியில் வெற்றி பெறுவர்.

## சந்திக்கு வந்தவை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடை பெருத சதி பற்றிய வதந்திகளின் படி திரு. சி. பி. டி. சில்வா, திரு மைத்திரிபால சேனநாயகா, சமசமாஜத் தலைவர்கள், யூ. என். பி. தலைவர்கள் கைது செய்யப் பட விருந்தனராம். அந்த வதந்திகளில் எம். ஈ. பியைப் பற்றியோ கொம்யூனிஸ்ட் கட்சி பற்றியோ பேச்சு அடிபடவில்லையென்பது குறிப்பிடத்தக்கதென்பது அம்மானின கருத்து.

கடந்த வாரம் "இ" சதி பற்றிய பேச்சுக் கிளம்பியது.

சேர் ராஸிக்பரீத் பாராளுமன்றத்தில் தூக்கிப்போட்ட குண்டும் "ஆ" சதிக்கு அனுசரணையாக இருப்பதைப போல் தோன்றுகிறது. திரு. என். கியூ டயஸ் "கராவ" சாதியினரின் (அவர் அந்தச் சாதியைச் சேர்ந்தவராம்) சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தப் பார்க்கிருர் என்பது சேர் ராஸிக்கின் குற்றச்சாட்டு

"கத்தோலிக்க செயல் இயக்கம்" போன்று 'பௌத்த செயல் இயக்கம்' ஒன்று கிளம்பியிருப்பதாக அடிபடும் வதந்தி அம்மானின் செவிகளிலும் விழுந்துள்ளது.

பௌத்த சமய வட்டாரங்களில் திரு. டயஸ் ஒரு பிரமுகராகக் கருதப்படுவதை அந்த வதந்தியோடு இணைக்கப் பார்க்கிருர் நம் அம்மான்.

அப்படியானுல் வதந்திகளின் படி பார்த்தால் "ஆ" சதி பௌத்த செயல் இயக்கத்தின் செயலோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறதல்லவா?

எல்லாம் சுத்தப் புரளி என்று கூறி விட்டார், திரு. பீலிக்ஸ்.


உள்ளம் கொள்ளை கொள்ளும் எழிலிற்கும்!! எல்லையற்ற சேவைக்கும்!! ஏற்றது



லதா!!!

லதா அச்சடி கிளேஸ்ட் கொட்டன்!!

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ் பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாடுடனும் உருவானது.

லதா பொப்ளின்

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி நிர்மாணிக்கப்பட்டது.




மேலும் சில வெளியூர் ஏஜண்டுகள்:—

அலவ்வ
ரத்தின ஸ்டோர்ஸ்,
குணசேகரா அன் சன்ஸ்,
டி. டி. எச். கூட்டுறவுச் சங்க ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

அழுத்கம
பீரிஸ் அன்ட் சன்ஸ்,

அம்பலாங்கொட
ரேயல் ஸ்டோர்ஸ்,

அநுராதபுரம்
சீப் சைட்,

பதுளை
ஆர். வைத்திலிங்கம்ஸ்,
சனுது ரெக்ஸ்ரைல்ஸ்,
நஜீம் ரெக்ரைல்ஸ்,
ஜமால் ஸ்டோர்ஸ்,
ஜலால் ஸ்டோர்ஸ்,

டிக்கோயா
பம்பாய் ஸ்டோர்ஸ்,
முத்துமாரி ஸ்டோர்ஸ்,

டிக்வெல
யூ. எம். சுபையர்,

எகெலியகொட
தம்பியப்பா அன்ட் சன்ஸ்,

காலி
மெக்கி ஸ்டோர்ஸ்,

ஏ. ஜீ. ஏ. ஓமார்,

கம்பஹா
நியூ சீதா ஸ்டோர்ஸ்,

கம்பளை
எஸ். கே. ஆர். கருப்பாப்பிள்ளை அன்ட் சன்ஸ்,

ஹட்டன்
சந்திரா ஸ்டோர்ஸ்,
சண்முகம் ஸ்டோர்ஸ்,
இம்பீரியல் ரெக்ஸ்ரைல்ஸ்,

ஏக விநியோகஸ்தர்கள்:—

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி: [illegible] கொழும்பு. சில்லறை விற்பனைப் பகுதி: 110 & 114, மெயின் வீதி,

—Mylads/KL 508/62—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிறருக்காக உழைத்த உத்தமர்

(செல்வி விமலா நடராசா, தெல்லிப்பளை)

**1911-ம்** ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் திகதி அமரர் வன்னியசிங்கம் அவதரித்தார். சைவ பரிபாலன வித்தியாசாலையிலும், தெல்லிப்பளை மகாஜன பாடசாலையிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் ஆரம்பக் கல்வி பயின்று, பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். பின்பு சட்டப் பரீட்சையிற் தேறி வழக்கறிஞராய்க் கடமையாற்றினார். அரசியலில் மிகுந்த ஈடுபாடுடைய அவர், இலங்கையைச் செல்வங் கொழிக்கும் நாடாகச் செய்த தமிழர் அல்லலுறுவதைக் கண்டு 'தன்னிகரற்ற வழக்கறிஞன்' எனப் பட்டம் பெற்ற போதிலும் பணம் பெருமலேயே ஏழை மக்களிற்காக நீதிமன்றமேறி வழக்குரைத்தார். 1947-ல் பொதுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் நின்று வெற்றி பெற்று இலங்கைப் பாராளுமன்றத்தில் கோப்பாய்த் தொகுதி உறுப்பினரானார். பின்பு இவ்வியக்கத்தின் போக்குப் பிடிக்காததால், திரு. செல்வநாயகத்தின் துணையுடன் தமிழரசுக் கட்சியை நிறுவினார். மூன்றுண்டுகள் தலைவராகத் திகழ்ந்தார்.

இவர் மிகச் சிறந்த பேச்சாளர். இவர் தனது இலட்சியங்களுக்காக திரிகரண சுத்தியுடன் பேசியும், செயலாற்றியும் வந்திருந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். தமிழ்ச் சமூகம் தரணியில் முன்போல் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதே அவரது தாரக மந்திரமாயிற்று. தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்திற்காக குன்றாத ஆர்வத்துடனும் பாடுபட்டார். 1958-ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின் போது அவர் அதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். அவருக்கு அடி விழுந்ததோடு அவரின் சட்டை கூடக் காடையர்களாற் கிழிக்கப்பட்டது. எனினும் கலங்காது அறப் போரை முடித்துக் கொண்டு திரும்பிய இவரை மறக்க முடியுமா? ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் பல இன்னல்களை ஏற்று அடக்கு முறைக்கு ஆளாகிச் சிறை புகுந்தார்.

1958-ம் ஆண்டு தடுப்புக் காவலில் மூன்று மாதம் சிறை வைக்கப்பட்டார். தன்னலங் கருதாது பிறருக்காக உழைத்த அந்த உத்தமரைச் சிறையில் இரத்த அமுக்கம் பிடித்தது. தன் உயிரைப் பிறர்க்காகத் தியாகம் செய்த சடாயு போல அமரர் வன்னியசிங்கமும் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழர்க்காக அர்ப்பணித்து 1959-ம் ஆண்டு தமது 48-ம் வயதில் மாரடைப்பால் மாண்டு போனார்.

அன்பராக, நண்பராக, கர்ம வீரராக, பகுத்தறியும் சிந்தனையாளராக, சட்ட நிபுணராகத் திகழ்ந்த பாராளுமன்ற மேதையை, நகைச்சுவை பேச்சாளரை, காந்தியவாதியை, தியாகச் சுடரை, வழி காட்டும் ஓர் விளக்கை இழந்து விட்டோம். ஆனால் அவர் தன்னலமற்ற வாழ்க்கையும் அவர் ஊட்டிய உணர்ச்சியும், அறிவுரைகளும் யாவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டேயிருக்கும்.

## இவரைத் தெரியுமா?

தெரியாமலிருக்கமுடியாது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்தும், இன்றும் எங்கள் மனதில் நிறைந்திருக்கிறார். அமரராகி விட்டார்; ஆனால் தமிழ் பேசும் இனத்தின் நினைவில் பசுமையாகத்தான் இருக்கிறார்.

1911-ம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் பதின்மூன்றும் திகதியன்று கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம், தெல்லிப்பளையைச் சேர்ந்த கொல்லங்கலட்டிக் கிராமத்தில் பிறந்தார். 17-9-1959-ல் அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழ் மொழியும், இனமும் இந்நாட்டில் அல்லலுறுவதைக் கண்ட வன்னியசிங்கம் அவர்கள், சமஷ்டி அரசியலை இங்கு நிறுவுவதன் மூலமே அவற்றைக் காக்க முடியுமென நம்பினார். அந்த நம்பிக்கை அவரது இலட்சியமாகியது. இலட்சியம் அவரது வாழ்வாகியது.

பேச்சிலும், நடையிலும் எளிமை; பார்வையில் கனிவு; கொண்ட கொள்கையில் உறுதி. பகைவனையும் நண்பனாகக் கருதும் பரந்த மனப்பான்மை. இவையெல்லாம் அவரிடமுண்டு.

தமிழ் பேசும் இனத்தின் தலைசிறந்த தலைவராக விளங்கிய திரு. வன்னியசிங்கத்தை நினைவு கூர்ந்து, அவருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவோமாக.

—வளர்மதி மாமா

## வன்னியர் வாய் மொழி

'சிலரை அடித்து உதைத்து அங்கவீனப்படுத்துதல், கடுமையான அடக்குமுறை, பட்டாளத்தைக் கொடுமைகள் செய்ய ஏவிவிடுதல் ஆகியவை தமிழ் பேசும் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை அடக்கிவிடும் என்று அரசாங்கம் எண்ணுமானால் அதனை முழுமடமை என்றுதான் கூறவேண்டும்.



மட்டக்களப்பில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டில் மறைந்த தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் கண்ணுங் கருத்துமாக எதையோ ஊன்றிப் படித்துக் கொண்டிருக்கிறார். அருகிலே இருப்பவர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்.

## வளர்மதி புதிய மருமக்கள்

3507 இ. ஸ்ரீஜெயதேவி, திருமலை.
3508 சி. தேவராணி, நல்லூர்.
3509 சுகிர்தா சித்திரவேல், மட்டக்களப்பு.
3510 பத்மினி சித்திரவேல், மட்டக்களப்பு.
3511 சி. சுப்பிரமணியம், கொடிகாமம்.
3512 கே. எம். வஸீர், மடவளை.
3513 க. கருணைரத்தினம், மட்டக்களப்பு.
3514 மா. புலேந்திரன், சுழிபுரம்.
3515 சு. மனோகரன், இறத்தோட்டை.
3516 சு. கௌரிமணி தேவி, திருமலை.
3517 அலோசியஸ் ஸ்டீவன், கண்டி.
3518 ஏ.எச். எம்.ஜெமீல், கேகாலை.
3519 கல்யாணி ஜெகதீசன், மட்டக்களப்பு.
3520 எஸ். பி. நாதன், யாழ்ப்பாணம்.
3521 எம். எஸ். எம். சக்கூர், கண்டி.

**அன்புள்ள மருமக்களே!**

வணக்கம். நாளை 17—9—62-ல் கோப்பாய்க் கோமானின் நினைவு நாள். அப் பெரியாரைப் பற்றி நீங்கள் எல்லோரும் அறிவீர்களென நம்புகிறேன். அவருடைய நினைவுக்கு நாம் ஆற்ற வேண்டிய சேவை, அவருடைய இலட்சியத்தை நிறைவேற்றத் தொடர்ந்து தொண்டாற்றுவதேயாகும்.

மருமக்கள் சிறிய, சிறிய கதைகளையும், கவிதைகளையும் எழுதி அனுப்ப வேண்டும்.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

## மன்னார் மாநாடு

(செ. குணரெத்தினம், மட்டக்களப்பு)

மன்னார் மாநாடு — நல்ல
மக்கள்த் திரள்காடு
சொன்னாற் புரியாது — பார்த்தால்
சொர்க்க லோகமது!

சோடனைப் பந்தல்களும் — சிறந்த
சொற் பெருக்காற்றுகளும்
வில்லுப் பாட்டுக்களும் — கருத்து
வெளிப்படும் நாடகமும்

எத்தனை கோலாகலம் — தம்பி
இம்முறை மாநாடு
அத்தனையும் பார்க்க — நமக்கு
ஆயிரம் கண்கள் வேண்டும்!

## கோடை காலம்

(ஜெயராணி சபாபதிப்பிள்ளை, மல்லாகம்)

இயற்கை அன்னை. ஆறு பிள்ளைகளை ஈன்றெடுத்தாள். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பவைகளே அவளது பிள்ளைகளாகும். இப் பிள்ளைகளுக்கு ஒரு வருஷத்தில் இரண்டு மாதங்களுக்கு ஆட்சிசெலுத்தும் உரிமையையும் அளித்துள்ளாள். நாம் இப்பொழுது இயற்கை அன்னையின் பிள்ளையாகிய முது வேனிற் காலத்தைப் பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்போமாக.

முது வேனிற் காலத்தில் வெய்யோனது ஆட்சி தொடங்கும். இது ஆடி, ஆவணி ஆகிய இரு மாதங்களிற்றான் நடைபெறும். இக் காலத்தில் உயிர்வாழ்வனவெல்லாம் பலவழிகளிலும் துன்பத்திற்கு ஆளாகின்றன. வெய்யோனது ஆட்சி உலக ஜீவராசிகள் அனைத்திற்கும் கொடுங்கோலாட்சியாய்த் தோன்றும். ஆனால் அவனுக்கு அது செங்கோலாட்சியே.

இவன் தோன்றும் போது மேகங்கள் பற்றி எரிவது போற்றோன்றும். ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனை வித வடிவங்கள்! அக்கினிக் குழம்போ! தங்கம் காய்ச்சி விட்டஓடைகளோ! எரிகின்ற தங்கத்திவுகளோ! என்று சொல்லமுடியாத வர்ணக் களஞ்சியம். இவன் ஏழுபரிகள் பூட்டிய தேரினில் கம்பீரமாகத் தோன்றுவான்.

இவனது ஆட்சிக்காலத்தில் பச்சைப்பசேலென காட்சி கொடுத்த புற்றரைகள், வயல்கள், சோலைகள் யாவும் அழிந்து பாலைவனம் மாதிரிக் காட்சியளிக்கும். இதன் காரணமாய்த்தான் ஒதுங்கி நிற்பதற்கு நிழற் பஞ்சம் ஏற்படுகிறது. மேலும், பஞ்சமாகிய "பேய்" உலகைக் கைப்பற்றிக் கொள்ளுகிறது. அத்துடன், தார் இட்டப்பட வீதிகள் யாவும் கொதித்துக் கொண்டிருப்பதைக் கண் கூடாகக் காண்கின்றோம். இக்காலங்களில் புள்ளினங்கள் மிகவும் துன்பத்திற்குள்ளாகின்றன.

இவ்வாறு வேனிற் காலக் காட்சிகள் முடிவடையும் காலம் கிட்டியதும், கார்காலம் தோற்றமளிக்கிறது. வேனிற் காலம் கார்காலத்திற்கு இடமளித்துப் பிரியாவிடை பெற்றுப் பிரிகின்றது.

குட்டிக் கதை:

## வழிப்போக்கரும் கரடியும்

(பி. எஸ். ஜெகநாதன், நமுனுகுல)

இரண்டு சிநேகிதர்கள் சேர்ந்து ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் ஒரு கரடியைக் கண்டார்கள். அவர்களில் ஒருவன் மிகவும் பயத்தினால், தன்னை மாத்திரம் நினைத்துக்கொண்டு, ஒரு மரத்தில் ஏறிக் கிளைகளின் மத்தியில் மறைந்து கொண்டான்.

மற்றவன், தான் ஒருவனாயிருப்பதால் கரடியை எதிர்க்கத் தனக்கு ஒரு வழியுமில்லையென்று நினைத்து, தரையில் விழுந்து, இறந்தவனைப் போல் பாவனை செய்தான். கரடி இறந்து போன தேகத்தைத் தொடாது என்று அவன் முன்பே கேள்விப்பட்டிருந்தான். அதனால்தான் அவன் அப்பேர்ப்பட்ட காரியம் செய்தான்.

அவன் இவ்விதமாய்ப் பாவனை செய்தபோது கரடி அவன் மூக்கையும் காதுகளையும் இருதயத்தையும் மோந்து வாசனை பார்த்துக் கொண்டு தலையருகில் வந்தது. ஆனால் அந்த மனிதன் ஆடாமல் அசையாமல் மூச்சையடக்கிக்கொண்டான். அந்தக் கரடி அவன் இறந்து போய் விட்டான் என்றெண்ணிப் போய் விட்டது.

கரடி கண்ணுக் கெட்டாமல் போய் மறைந்ததும், மற்ற மனிதன் கீழே இறங்கி "கரடி உன்னிடத்தில் முணுமுணுவென்று என்ன சொல்லிற்று?" என்று கேட்டான்.

சிநேகிதன் பதில்சொன்னதாவது:-"அது ஒன்றும் பெரிய ரகசியமில்லை. ஆபத்துக் காலத்தில் தங்கள் சினேகிதர்களைக் கஷ்டத்தில் விட்டு விட்டுத் தங்களை மாத்திரம் காத்துக்கொள்ளும் சிநேகிதர்களுடன் இனி ஒரு பொழுதும் சேராதே என்று அந்தக் கரடி கட்டளையிட்டுப் போயிற்று" என்று.

மற்றவன் வெட்கித் தலை குனிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## 'நாகரிகத்தின் பரிபூரண மலர்ச்சியே சமயம்'

## திருமுறை விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார்

**"மனித சமுதாயத்தின் போக்கு நாகரிகமானது-லட்சியமானது-ஆனால் உலகம் தன்னை நோக்கிவர விரும்புவது போல் தான் உலகத்தை நோக்க விரும்பாதவன், உலகத்தோடொட்ட, பழக அவன் விரும்பவில்லை. நம் எண்ணங்களின் வளர்ச்சி நமக்கேற்ற எல்லாத்தையும் நாகரிகமெனக் கருதுகிறது. சமுதாயம் ஏற்றுக் கொள்வதே நாகரிகம்; இதை வள்ளுவன் அழகாகக் கூறுகின்ருன். நாகரிகத்தின் பரிபூரண மலர்ச்சியே சமயம்"**

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் கண்டி மத்திய மாகாண சைவ மகா சபையில் 3-9-62 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு நடந்த திருமறை விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும் போது குறிப்பிட்டதாவது: ஒரு வேடன் ஒரு கிளியைக் கொல்ல வேண்டும், பிடிக்க வேண்டும், சுவைக்க வேண்டும் என்ற விருப்பத்தினுற் பிடிக்கிருன். அவ்வாறே இந்த உயிரும் ஐம்புல வேடர்களுக்குள் தவறுதலாக அகப்பட்டுத் தத்தளிக்கிறது.

எந்த ஒரு நூல் உலகத்தை உய்ய வைக்கிறதோ, அதுவே சாத்திரம் எனப்படும். திருமுறைகளும் அத்தகையவே.

சேக்கிழாரும் அப்பரடிகளை "உலகம் உய்ய வந்தவர்" என்கிருர். இன்று கூடி நின்று வீண் குதர்க்கம் பேசுபவர்களை அப்பரடிகள் "சாத்திரம் பல பேசும் சனக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்தீர்" எனக் கேட்கிருர்.

பொலிஸ் நாய் இருக்கிறதே, அது இன்று மனிதனின் மணத்தைக்கொண்டு மனிதனை இன்னுர் எனக் கண்டு பிடிக்கிறது. இதனுல் மனிதனுக்கும் மணம் உண்டு என்பதாகிறது. மனிதன் உள்ளே எண்ணும் எண்ணமெல்லாம் மணமாக வீசுகிறது. திருஞான சம்பந்தர் சென்ற இடமெல்லாம் சிவநாமம் பரவிற்றே. ஒரு செடியை மலருக்காக-மணத்துக்காக-தேனுக்காக வளர்ப்பதுபோல், நாமும் உள்ளத் தாமரையை வளர்த்து அன்பு-அருள் என்னும் தேனைச் சொரிய வேண்டும்.

"ஈறில்லாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே..." என மணிவாசகர் கூறுகிருர். பொறிகளுக்கு இன்பம் தருவன புலன்களுக்கு இன்பம் தரா. புலன்களுக்கு இன்பம் தருவன பொறிகளுக்கு இன்பம் தரா. பொறி, புலன் இரண்டுக்கும் இன்பம் தருவன ஆன்மாவுக்கு இன்பம் தரா.

இந்த உலகம் இறைவனின் அற்புதத் திருமேனியே. இறைவனைப் போற்றுகில் அவனது உடைமை ஆகிய இவ்வுலகத்தைப் போற்ற வேண்டும். உயிர்கள் மேல் அன்பு பூண்டு இரக்கங் கொள்ள வேண்டும்.

### மாணவர் முத்தமிழ் மன்றம்

எட்டியாந்தோட்டைப் புனித கபிரியேல் கல்லூரியில் "மாணவர் முத்தமிழ் மன்றத்தின்" மூன்ருந் தவணையின் உத்தியோகஸ்தர் தெரிவில் தலைவராகச் செல்வன் மகாலிங்கமும், செயலாளராக, அ. சலமன் ராசுவும் "இலக்கியச் சோலை"ப் பத்திரிகையின் ஆசிரியராக எஸ். பி. சுப்பையாவும், உதவிச் செயலாளராக ஆர். எஸ். மணியமும் தெரிவு செய்யப்பட்டனர்.

### முஸ்லிம் சமூக முன்னேற்றச் சங்கம்

மண்டூர் 12ம் கிராம "முஸ்லிம் சமூக முன்னேற்றச்சங்கத்"தின் பொதுக் கூட்டம் அதன் காரியாலயத்தில் 3-9-62 திங்கட்கிழமை பி. ப. 4 மணியளவில் சங்கத்தலைவர் ஜனுப். எஸ். எம். எம். ஹனிபா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தன் உரையில், சங்கத்தின் வளர்ச்சியைக் குறிப்பிட்டு முஸ்லிம்கள் இச் சங்கத்துக்குப் பல வழிகளிலும் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் பேசுகையில், "ஒன்று பட்டால் உண்டுவாழ்வு" என்பதுக்கேற்ப எல்லாரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றும், ஒற்றுமைக்கு வழி காட்டி சங்கங்கள் தான் என்றும் குறிப்பிட்டார். காரியதரிசி ஜனுப். எம். ஐ. எம். முஹிதீன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

### தமிழ்க் கலைச் சங்கம்

கடந்த 6-8-62 திங்கட்கிழமை காலையில் அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரித் தமிழ் பேசும் மாணவர்களால், "தமிழ்க் கலைச் சங்கம்" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இத்தகையதோர் சங்கம் இருப்பதன் அவசியத்தையும், அதன் நோக்கங்களையும், அங்கு குழுமியிருந்தோருக்கு, திரு. வி சண்முகநாதன் விளக்கினுர். மேலும் அவர் பேசுகையில் முஸ்லிம்களும், தமிழர்களும், இனத்தால் வேறுபட்டாலும் மொழியினுல் ஒன்று பட்டவரே! ஆகவே இந்தக் கல்லூரியில் தமிழையும், கலையையும், வளர்க்கும் பொருட்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டது குறித்து அனைவரும் மகிழ்ச்சி அடைவார்களென நம்புகின்றேன் என்ருர். அடுத்து ஜனுப் எம். எம். ஏ, மன்சூர் பேசுகையில் கலை அடங்குகின்றது. ஆகவே இயல், இசை, நாடகம், என்பவற்றுடன் மருத்துவக் கலைக்காகவும் விசேஷமாக சுதேச வைத்தியத்திற்காகப் பாடுபட வேண்டும் என்ருர்.

அடுத்ததாக திரு. பி. ஏ. அந்தோனிப்பிள்ளை பேசினுர். பிற மொழி பேசும் மக்களுக்கிடையில் வாழும் நமது தாய் மொழியையும் கலையையும் மறந்து விடுகின்ருேம். ஆகவே அத்தகைய நிலை யேற்படாமல் இச் சங்கம் செயல் புரியுமென எதிர்பார்க்கிறேன், என்று அவர் தமது உரையில் குறிப்பிட்டாா.

அதன் பின் உத்தியோகத்தர் தெரிவு நடை பெற்றது.

தலைவர்: திரு. வீ. சண்முகநாதன், உபதலைவர்: செல்வி எம். காசிப்பிள்ளை, காரியதரிசி: ஜனுப் எம். எம். ஏ. மன்சூர், உப காரியதரிசி: திரு எஸ். பவானி, தனுதிகாரி: செல்வி ஜி. ஏ. திஸவீரசிங்கம்.

அறுவரைக் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்படடது.

## 'பலாத்காரம

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்துடன் அவன் வந்து கொண்டிருக்கின்ருன்.

அவன் உள்ளம் இன்ப லாகிரியில் சங்கமமாகின்றது. தன்னுடைய இந்த முயற்சி, தமிழனனை உகுக்கும் கண்ணீரைத் துடைத்தாலும் துடைக்கலாம் என்ற இனப நினைப்போடு அவன் ஓடோடி வருகின்ருன்.

தடால்!

பாதையின் குறுக்கே போடப்பட்டிருந்த ஒரு மரக்கட்டைமீது மோதுகின்றது அவனுடைய ஜீப்!

சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொண்டு ஜீப்பை நிறுத்துகின்ருன்.

அவன் அப்படி ஜீப்பை நிறுத்துவதற்கும் துப்பாக்கி வெடிகள் காட்டுப் புறத்தே இருந்து பல கோணங்களில் தீர்வதற்கும் சரியாக இருந்தது.

கோபாலின் மார்பையும், வயிற்றையும், கழுத்தையும் துப்பாக்கி ரவைகள் முத்தமிடுகின்றன! சல்லடையாய்த் துளைக்கின்றன!

ராணுவ ஜீப்பொன்றைத் தடுத்து, அதிலிருந்து பட்டாளக்காரரைப் பழிதீர்த்து விட்டோம் என்ற கொக்கரிப்போடு ஜீப்பைக் 'கைப்பற்ற' நெருங்கிய மக்கள் கூட்டத்தை மருள மருளப் பார்க்கிருன் கோபால். அவர்களிடம் எதையோ சொல்ல அவன் வாய் துடிக்கின்றது.

அதற்குள்—

கண்கள் நிலைகுற்றி விடுகின்றன!

## மறைந்தும் மறையாத........

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். அப்படிப்போக மறுத்தால் தாங்கள் சுடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று எச்சரித்துக் கொண்டும் இருந்தனர்.

யாழ்ப்பாணப் பகுதிகளில் ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் காரில் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த அமரர் வன்னியசிங்கம் அவர்கள், செய்தி கேள்விப்பட்டோ அல்லது தற்செயலாகவோ அவ்விடம் வந்து சேர்ந்துவிட்டார். அவ்விடம் வந்த அவர் விபரத்தைக் கேள்விப்பட்டு திறந்திருந்த கடைக்காரரிடம் சென்று கடையைப் பூட்டும்படி கேட்கவே அவர்களும் பூட்டிவிட்டார்கள். அடுத்தபடியாக அவ்விடம் நின்ற இன்ஸ்பெக்டரிடம் இவையெல்லாம் எதற்காக? என்ருர்.

இந்தக் கூட்டம் கலையாவிட்டால் நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த நேரிடும் என்ருர் இன்ஸ்பெக்டர். துப்பாக்கிப் பிரயோகம் நடத்தவேண்டிய அளவு இப்போது இங்கே என்ன நடந்து விட்டது? இங்கே அணிவகுத்து நிற்கின்ற பொலீசுகளை ஜீப்பில் ஏறச்சொல்லுங்கள். பொது மக்களைக் கலைந்து போகச் சொல்கிறேன் என்ருர். வேறு வழியில்லாத பொலீஸ் இன்ஸ்பெக்டர் அதன்படி செய்யவே, வன்னியசிங்கம் அவர்கள் தன்னுடைய காருக்குமேல் ஏறி நின்று, பொது மக்களை நோக்கி "இன்றைய ஹர்த்தால் அமோக வெற்றியைத் தந்திருக்கிறது. இந்த ஹர்த்தாலை மாசுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பொலீசார் ஏதாவது ஒரு அசம்பாவிதத்தை உண்டாக்க நினைக்கிருர்கள். ஆகையினுல் பொதுமக்களாகிய நீங்கள் எவ்வித அசம்பாவிதங்களுக்கும் இடங்கொடாமல் தயவு செய்து அமைதியாகக் கலைந்து செல்லுங்கள" என்ருர். அன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க பொது மக்கள அமைதியாகக் கலைந்து சென்ருர்கள். இது ஒன்றே தொழிலாளர் மத்தியில்அமரருக்கு இருந்த செல்வாக்கை தெளிவு படுத்தும். அதுமட்டுமல்ல, வட பகுதியிலே நடந்த பஸ் தொழிலாளர் போராட்டங்களிலும் சுருட்டுத் தொழிலாளர் போராட்டங்களிலும் பங்கு பற்றி சமரசமாக்கினுர்.

பாராளுமன்றத்திலே தொழிலாளருக்குப் பாதகமாக வந்த சட்டங்களை வன்னியசிங்கம் அவர்கள் கண்டிக்கத் தவறியதில்லை. வன்னியசிங்கம் அவர்களின் மரணச் சடங்கில் பங்குபற்ற வந்த முன்னுள் எதிர்க்கட்சித் தலைவராகிய டாக்டர் என். எம். பெரேரா அவர்கள் கூறியதாவது: "இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி நல்ல ஒரு ஆலோசகரை இழந்து விட்டது. தமிழ் மக்கள் வீரமுள்ள ஒரு அரசியல் தலைவரை இழந்து விட்டார்கள். நான் இப்படிக் கூறுவது சம்பிரதாயத்திற்காகவோ அல்லது இன்றை தினம் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் தமிழ் மக்களாகிய உங்களை முகஸ்துதி கூறிச் செல்வதற்காவோ அல்ல. உண்மையிலே எத்தனையோ இக்கட்டான நேரங்களிலெல்லாம் வன்னியசிங்கம் அவர்கள் நல்ல ஆலோசனைகளைத் தந்து எதிர்க்கட்சியின் மரபைக் காத்திருக்கிருர். அவரின் சமஷ்டிக் கொள்கையை நாங்கள் ஆதரிக்காத போதிலும் அவர் சமஷ்டி அரசியல் அமைப்பில் தவிர்க்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை அவரின் பாராளுமன்றப் பேச்சுக்களிலிருந்து காணக்கூடியதாக இருந்தது."

### வீர சபதம் எடுப்போம்

இதிலிருந்து நாம் காணக்கூடியது என்னவென்ருல் அமரர் வன்னிய சிங்கம் அவர்கள் இடது சாரி அரசியல் தலைவர்களிடத்தில் எவ்வளவு நல்ல இடத்தைப் பெற்றிருக்கிருர் என்பதே.

ஈழம் வாழ் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த உத்தமர், அமரர் வன்னியசிங்கம் அவர்கள், இன்று நம் மத்தியில் இல்லாவிட்டாலும் நமது எதிர்கால வாழ்வுக்காக வித்திட்ட நல்ல திட்டங்கள் அரைகுறையாக நம் மத்தியிலே இருக்கின்றன. எனவே வருங்கால இளைஞர்களாகிய நாம் அமரர் விட்ட குறையிலிருந்து தொடர்ந்து இருள் சூழ்ந்த நிலையிலுள்ள தமிழர்களின் நல்வாழ்வுக்காக சோர்வடையாது பணியாற்ற வேண்டுமென, இன்றைய ஒவ்வொரு வாலிபர்களும் மறைந்த மாவீரர் வனனியசிங்கம் அவர்கள் மேல் ஆணையிட்டு வீர சபதம் கொள்வோமாக.

## அன்பு மகள்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த முயன்றனர் சிலர். சாப்பிட்டுமுடிய ஒரு சிறு கேலி வேண்டாம்? ஆனுல், மங்கையர்க்கரசி, அமிர்தலிங்கத்தின் மனைவியல்லவா? பேய், பூதத்தை விடப் பெரிய மனிதப் பேய்களைக் கச்சேரியடியில், காக்கியுருவில் சந்தித்தும் அஞ்சாத மங்கையர்க்கரசி இதற்கெல்லாமா அச்சம் அடைவார்! எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்ததுதான் மிச்சம். அச்சிரிப்பில் பேய் வந்திருப்பினும்— பனுகொடைப் பேய்—தொடை நடுங்கி ஓடியல்லவா இருக்கும்!

இரவு வெகுநேரமாகிவிட்டது. பன்னிரண்டு மணி வரையிருக்கலாம்.அதென்ன காலடியோசை?...... மேன் மாடி விருந்தையால் போவதும் வருவதுமாக யார்?...... என் அறையைத் திறந்தேன். மன்னர்ப் பிரதிநிதி அழகக்கோன் அவர்கள் நடந்து திரிகிருர்.

நித்திரையில் லையோ! —யான்கேட்டேன், அழகக்கோன் அவர்களை.

உறக்கம் வரவில்லையாம். உல்லாச நடை போடுகிருராம்.

எனக்கு நித்திரை கண்ணைச் சுற்றுகிறது. மீதி நாளை எழுதுவேன்.

உன் தந்தை,
புதுமைலோலன்.

(தொடரும்)

## மன்னார் நூல் நிலையத்திற்கு

## அமரர் வன்னியசிங்கம் நினைவு அன்பளிப்புகள்

அமரர் கு. வன்னியசிங்கம் நினைவினுல் மன்னார் பட்டின சபை நடத்தும் பொது நூல் நிலையத்திற்கு பல நூற்றுக் கணக்கான புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுத்துதவ யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து பல அன்பர்கள் முன் வந்துள்ளனர். மூன்று கிழமைகளுக்கு முன் தமிழரசுக் கட்சியின் உதவி காரியதரிசி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை நூறு புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுத்து இந்தக் கைங்கரியத்தைத் தொடங்கி வைத்தார்.

சென்ற மகாநாட்டின் போது மன்னாரில் உள்ள இப் பொது நூல் நிலையத்தைப் பார்வையிட்டு, அதன் அழகு, அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றைப் புகழ்ந்த பல அன்பர்கள் இவ்வன்பளிப்பு புத்தகங்களைக் கொடுத்துதவ முன் வந்திருக்கின்றனர். இதுவரை 250 புத்தகங்கள் சேர்ந்துள்ளன.


மன்னார் பொது நூல் நிலையத்துக்கு புத்தகங்களை உதவ விரும்புவோர் -நேரே தலைவர், பட்டினசபை, மன்னார் என்று அனுப்பலாம். அல்லது திரு. கதிரவேலுப்பிள்ளை, 113, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் எதிர்பாருங்கள்!

## செல்லமஹால்
[கொட்டாஞ்சேனை]

மற்றும் அனேக திரைகளில்








மிகப் பயங்கரமான வனக் காட்சிகள் நிறைந்த,
"கொங்கு நாட்டுத் தங்கம்" என்னும் படத்தை விட பிரமாண்டமான

# சோலைமலை ராணி

---

## சென்ட்ரல்
(மருதானை)
தினசரி 2, 6, 9-30
ஞாயிறு காலை 10 மணிக்கு

## லவினியா
(நுகேகொட)
தினசரி 6-30, 9-30க்கு
மற்றும் 4 திரைகளில்!



டி. கே. பாலச்சந்திரன்
(இரு வேடங்களில்)

★ ஶ்ரீமாரி
★ சாயிராம்
★ வி. கே. ராமசாமி
★ கள்ளபார்ட் நடராஜன்
★ 'திலகம்' ராஜகுமாரி
★ வி. கே. சரஸ்வதி

மற்றும் பலர்
நடித்தது!



# யார் மணமகன்?

---

## விரைவில்
சிலோன் எண்டடெயின்மண்ட்ஸ்
திரைகளுக்கு வருகிறது!
சென்னையில்
100 DAY நாட்களுக்கு மேல் ஓடிய படம்!!

கல்யாண்குமார்
தேவிகா
முத்துராமன்
பேபி பத்மினி
நடித்தது

இசை:
விஸ்வநாதன்
ராமமூர்த்தி

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

ஶ்ரீதரின்
# நெஞ்சில் ஓர் ஆலயம்

---

## 5வது இணையற்ற வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (அம்பாறை)
மற்றும் 7 சினிமாஸ் திரைகளில்

சுற்றமும் சூழலும் ஒருவனைக் குற்றம் செய்யத் தூண்டியது. அடுத்தவன் அந்தக் குற்றவாளியைப் பிடிக்க முயன்று பிடித்து விடுகிறுன். ஆனல் அவர்கள் அண்ணனும் தம்பியும். இதற்கிடையில் தாய். இப்படிப்பட்ட தாய் சொல்லைத் தட்டாதே படத்தைப்

## பார்த்தால் பசிதீரும்

எம். ஜி. ராமச்சந்திரன் ★ பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா ★ எஸ். ஏ. அசோகன்
பி. கண்ணும்பா ★ ஜெமினி சந்திரா
மற்றும் பலர் நடித்த

# தாய் சொல்லைத் தட்டாதே





இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org